சுதேசமித்திரன்

8—8—48

விலை 4 அணா

THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY

ஒரு புராதன வைத்தியம்

இவ்விதமாகவே நல்ல செய்திகள் பரவுகின்றன. உட்வார்ட்ஸ் கிரைப் வாட்டர் குழந்தைகளை :: நன்கு பாதுகாக்கிறது ::

WOODWARD'S GRIPE WATER

keeps baby well

I-WW 111-111

W. WOODWARD LTD. LONDON. ENGLAND

தந்தி விலாசம் : "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57.

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்சு : மன்னார்குடி)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்

பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டுகள்:—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)
B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.



45-வருஷமாக புகழும் நற்சாட்சிகளும் பெற்றுவரும் மருந்துகள்

தங்க பஸ்பம்

ஒரே வேளையில் உங்களை பிரமிக்கச் செய்யும். இது ஒரு வரப் பிரசாதமான மருந்து. தேகபலமும் வாழ்வில் சந்துஷ்டியும் அளித்து, ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தந்து, நரம்புகளை வலுவாக்கி, வயோதிகனும் வாலிபனுடைய வலிமை பெற செய்கிறது. அனுபானம் பெரிய காமகேசரி லேகியத்துடன் 50 வேளை ரூ. 25.

வைத்தியபதி *R. M.* நாராயணசாமி பிள்ளை,
தன்வந்திரி வைத்தியசாலை, பழனி (S. I.)



சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசிகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா

ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் **காமினியா ஆயில்** உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

ஆடோ டில்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

Sole Agent:—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.,
285, Jumma Musjid, P.O. Box 2085, Bombay 2.

மறுக்க முடியாத உண்மை!
நாகரீக வாழ்விற்கு அடிப்படையானது
அழகு மிகுந்த ஆடைகளே!!

தொழில் முறையில் அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு கண்களைக் கவரும் கலர்களில் வனப்பு மிகுந்த ஜரிகை வேலைப்பாடுகளோடு தயாரிக்கப்பட்ட

பட்டு

புடவைகள் வேஷ்டிகள்

எங்கள் வசம் ஏராளமாயிருக்கின்றன.

C. R. பாலுசாமி அய்யர்

115, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்.	9, ஜடாமுனி கோவில் தெரு, மதுரை.

போன் நெ. 3432.

A. V. S. டாப்பியோக்கா கிழங்கு மாவுகள் சுத்தமாயும், சுகாதார முறைப்படியும் நீண்டநாள் அனுபவத்தில் தயாரிக்கப்பட்டவை. அவைகள் கலப்பில்லாதவையென்பதற்கு அத்தாக்ஷி மைக்ருஸ்கோப் என்னும் கண்ணாடி மூலம் பரீக்ஷை செய்து நாணயமான டாப்பியோக்கா மாவு என்று ஸர்ட்டிபிகேட் பெற்றிருக்கிறோம். போண்டா, பஜ்ஜி, முறுக்கு, ஓமப்பொடி, சர்க்கரை சேவு, தோசை, ஹல்வா, மைசூர் பாக்கு, பால்கோவா, பிஸ்கட், கேக், உப்பிட்டு சேமியா, ஜவ்வரிசி, மிட்டாய் தினுசுகளும் இன்னும் வேண்டிய தின்பண்டங்களும், பலகாரங்களும் தயாரிக்கலாம்.

எங்களிடம் முதல்தரமான ஜவ்வரிசி ஈரோடு, சேலம் மஞ்சள் ரகங்கள், நெ. 1. மஞ்சள் தூள், கடலை எண்ணெய், சுருட்டுக்கும், பீடிக்கும் வேண்டிய உயர்தரமான புகையிலை ரகங்கள் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும். 4 அந்தர் எடைபோடக்கூடிய பைபில்ட் வேயின் மெஷின் தராசும் சப்ளை செய்கிறோம். தராசின் கேட்லாக் வேண்டுவோர் எழுதவும்.

மற்ற விவரங்களுக்கும், சாம்பிளுக்கும் எழுதவும்.

A. V. சுப்ரமணியம்,

A. V. S. டாப்பியோக்கா பிளவர் மில்ஸ், அண்டு மஞ்சள் எண்ணெய் சப்ளையர்கள், புகையிலை ஹோல் சேல் லைசென்ஸ்தாரர்கள் ஈரோடு. (S. I. R.) தந்தி: INSAF.

சரும & தலை நோய்களை

உலகப் புகழ் பெற்ற ஜாம்-பெக் குணப்படுத்தும்

ஜாம்-பெக்கிலுள்ள அற்புத மூலிகை மருந்து வஸ்துக்கள் சருமத்தினூடே புகுந்து வேலை செய்வதால் நமைச்சல், ரணம் போய், ரத்தக் கசிவு நின்று நோய் கிருமிகள் நாசமாகி பாதிக்கப்பட்ட சருமத்தை ஜாம்-பெக் சீக்கிரம் குணப்படுத்தி ஆரோக்கியமாகவிருக்கவும் செய்யும். மிருக கொழுப்பில்லாததற்கு உத்தரவாதம்.

எப்பொழுதும் உபயோகியுங்கள்

சருமநோய்கள் காயங்கள், பூச்சிகடிகள், புண்ணுகி வலிக்கும் கால்கள், தசை வலி தேக குளிர்ச்சி இவற்றிற்கு சிறந்தது.

Zam-Buk

சமனமுட்டி நிவாரணமளிக்கும் கிருமிநாச மருந்து

ஏஜண்டுகள்: மெஸர்ஸ் தாதா & கம்பெனி, பி. டி. மதராஸ்.

ஆனந்த குஸுமாகர லேகியம்

துர்ப்பழக்கத்தால் சரீரம் மெலிந்து அங்கங்கள் உலர்ந்து, கைகால்கள் அயர்ந்து கண் பார்வை குன்றி கஷ்டப்படும் அன்பர்களே!

இந்த லேகியத்தை முறையே ஒரு மண்டலம் சாப்பிட்டு வருவீர்களாயின் மூத்திர சம்பந்தமான சகல வியாதிகளும் நீரில் சர்க்கரை இருத்தல் உஷ்ண சம்பந்தமான சகல வியாதிகளும், நரம்புத்தளர்ச்சி, பசியில்லாதிருத்தல், மலச்சிக்கல், ஞாபககுறைவு, பித்தம், காசம், க்ஷயம் போன்ற எல்லா வியாதிகளையும் கண்டித்து சரீர புஷ்டியும் உற்சாகமும் தரக்கூடிய சிறந்த ஔஷதம். பெண்களும் அருந்தக்கூடியது. பத்தியமில்லை. 20 நாட்கள் உபயோகிக்கும் டின் விலை ரூ. 2—8—0

வி. பி. பார்சலில் தேவையுள்ளோர் தபால் சிலவு அணா 14 முன் பணம் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். விபரமான காட்லாக் இனும்.

மலையாள மெடிகல் ஹால்

H. O. TRIVANDRUM

189 வக்கீல் புதுதெரு- P. B. No 27, மதுரை.

கிளை ஸ்தாபனங்கள்:— 207 நாகேஸ்வரர் வடக்கு வீதி, கும்பகோணம் 20 கோவிந்தப்பநாயக்கன் தெரு, சென்னை. G. T. 58 E தர்மராஜா கோவில் தெரு, பெங்களூர். 179 SEA ST., COLOMBO.

தலைநிறைந்த கூந்தலே முகத்தின் அழகை எடுத்துக்காட்டுவது. கூந்தலே முக அழகை ஆக்குவதும், அழிப்பதும். கூந்தலழகையும் முக அழகையும் இன்றே கேசவர்த்தினியைக் கொண்டு விருத்திசெய்யுங்கள்.

அற்பகேசத்தைவிட அழகுக்கு ஹானி வேறில்லை. இதைப் பரிஹரிக்கக் கேசவர்த்தினியைவிட சிறந்த மருந்துமில்லை. இழந்த கூந்தலையும், இளமையையும் கேசவர்த்தினியைக் கொண்டு இன்றேபெறுங்கள்.

அழகுள்ளவர் ஒரு சிலரே. ஆனல் கூந்தலழகையோ கேசவர்த்தினி உபயோகத்தால் ஒவ்வொருவரும் பெறலாம். கேச சம்பத்து படைத்தவர் அதை இழக்காமல் கேசவர்த்தினி கொண்டு காப்பாற்றுங்கள். படைக்காதவர் கேசவர்த்தினியால் அதை அடையுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைக் காப்பது; விருத்தி செய்வது; அழகுபடுத்துவது விலை அணா 14. தபால் செலவு தனி. எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர் :

தென் இந்திய ரஸாயன சாலை,
"ஆச்ரமம்", க்ராஸ்கட் ரோட்,
பவர் ஹவுஸிற்கு அடுத்தது
கோயமுத்தூர்.

உங்கள் எதிர்காலம்

பணமில்லை, தொழிலில் மாறுதல், காதல், கலியாணம், குடும்பம் பிரயாணம், எதிர்பாராத லாபநஷ்டம், படிப்பு, ஆரோக்கியம், அதிருஷ்டநாள், எண், நிறம் மற்றும் எதிர்காலத்தில் உங்களுக்கு ஏற்படக்கூடிய பலன்கள் எழுதி அனுப்பப்படும். ஜாதக நகல் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில் கடிதம் எழுதும் நேரம் குறிப்பிடவும். ஒன்று முதல் 5 கேள்விகளுக்கு பதிலளிக்க ரூ. 2. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் அணா 8. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் எழுத ரூ 6. வாரப் பலனாக ரூ 20. ஜாதகக் குறிப்பும் சுருக்கமான பொதுப்பலனும் எழுதி அனுப்ப ரூ 5. தபால் செலவு தனி.

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,

Astrologer & Journalist, MADRAS 5.

வாசனை எண்ணெய்கள் நீங்களே தயாரித்து பணத்தை மீதி செய்யலாம்.

கீழ்க்கண்ட ஏதாவது ஒரு ரக மோகினி எஸன்ஸை 16 அவுன்ஸ் நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் அல்லது விளக்கெண்ணெய், கடலை எண்ணெயில் கலந்தால் உங்களுக்குச் சிறந்த வாசனை எண்ணெயாகும். விலைகளோ மிகவும் குறைவு.

சுத்தமான மோஹினி எஸன்ஸுகளின் பெயர்களும் விலைகளும்

சாம்பாக்	ரூ. 2-0	கதம்பம்	ரூ. 1-8	ஹீனா	ரூ. 1-8	மோத்தியா	ரூ. 1-0
காஷ	,, 2-0	மல்லிகை	,, 1-8	லில்லி	,, 1-0	ஸ்விட்	,, 1-0
கேவ்டா	,, 2-0	ரோஸ்	,, 1-8	தாமரை	,, 1-0	மோதியா	,, 1-0
மஸக்	,, 2-0	போகுல்	,, 1-8	கோலோன்	,, 1-0	ஐடியல்	,, 1-0

அரை அவுன்ஸ் பாட்டில்களாகக் கிடைக்கும். பாக்கிங், தபால் சார்ஜ், வி. பி. செலவு வேறு. இலவசமாக காட்லாக் அனுப்பப்படும்.

S. PAUL & Co., (S. W.) 4, Hospital St., Dharamtala, **Calcutta 13.**

ஸ்தாபிதம் 1924

பிரபல ஜோதிஷர்



மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஷடி பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆரூடம் 3 கேள்விகளுக்கு ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. ஜ்யோதிஷ ஞான போதினி. ஜாதக யோகங்கள் என்னும் புத்தகம் விலை ரூ. 2—8—0. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
"தபோநிதி" தியாகராயநகர், மதராஸ் 17.

கலியாண வெகுமதிகளுக்கு
பல ஊர்
பட்டு & நூல்
ஜவுளி ரகங்கள் சாசமாய்
கிடைக்கும் இடம்

ராம விலாஸ்

S.N.ராமஸ்வாமி செட்டி & பிரதர்ஸ், கடை வீதி, சேலம்.



501 ஸோப்பால்

வெளுக்கப்பட்டது

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி,
லிமிடெட்.

காங்கிரஸ் மகாசபை சரித்திரம்

முதல் பாகம் கைவசமில்லை
இரண்டாம் பாகம் ,, ரூ. 2.
மூன்றாம் பாகம் ,, ரூ. 2.
(தபாற் செலவு அணா 10.)
V. P. அனுப்புவது கிடையாது.
சுதேசமித்திரன் புத்தகசாலை சென்னை.

வாரியர்

பிருங்காமலகாதி

தைலம்

குளிர்ச்சிமிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப்படிப்பினாலோ வேலையினாலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.
(பாக்கிங், தபால் செலவு வேறு.)

ஆர்ய வைத்தியர்
கே. எஸ். வாரியரின்

அஷ்டாங்க ஆயுர்வேதசாலா

தெப்பக்குளம், திருச்சி.
(ஸ்தாபிதம் : 1936.)

ஸ்தாபிதம்: 1941. தந்திவிலாசம்: 'UMA'

உமா கோல்டு கவரிங் ஒர்க்ஸ்,

உமா மஹால்;

மசூலிப்பட்டணம்.

★ ★ ★

உமா கோல்டு கவரிங் ஒர்க்ஸ் போஸ்டாபீஸ்.

★ ★ ★

நமது ஆதரவாளர்கள், வாடிக்கைக்காரர்கள், அன்பர்களனைவருக்கும், சுதந்திர இந்தியாவின் முதல் வருஷப் பூர்த்திக்கொண்டாட்ட சமயத்தில் நம்முடைய விசேஷ வாழ்த்துக்கள்.

தேசத்தின் உயர்ந்த தேவைகளைப் பூர்த்திசெய்ய சுதந்திர இந்தியா நமக்குஆசீர்வதிக்குமாக!

இப்புனித சுதந்திர தினத்தன்று உமா போட்டோ மோதிரங்கள், டாலர்களை நமது தேசியத்தலைவர்கள் ஞாபகார்த்தமாக அணிந்து சுதந்திரக் கொண்டாட்டங்களில் கலந்துகொள்ளுங்கள்.

இச்சந்தோஷ சமயத்தில் உங்கள் தேவைகள் யாவையும் பூராவாகவும் உடனுக்குடனும் பூர்த்தி செய்ய எங்களால் முடியும்.

★ ★ ★

உமா ஆபரணங்கள்

பத்து வருஷ உத்தரவாதம். உமா ஆபரணங்கள் உயர்ந்த உலோகத்தின்மீது அசல் தங்க தகட்டினால் மூடப்பட்டவை.

பலபாகங்களிலுமுள்ள பிரபல இந்தியப் பிரமுகர்களின் நற்சாக்ஷி பத்திரம் பெற்றது.

தங்க நிறத்திற்கு உத்திரவாதம்.

உமா நகைகளை அக்னித்திராவகத்தில் போட்டால் தங்க "கவரிங்" தனியாக வந்துவிடும்.

நமது தொழிற்சாலையில் நவீன இயந்திரங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. கைதேர்ந்த தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர் 600 மாதிரிகளடங்கிய கேட்லாக் இனாம்.

நகைகள் வி. பி. தபால் செலவு 14 அணா தனி.

கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதப்படவேண்டும்.

தி ஜெயபாரத் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

(தலைமை ஆபீஸ் : பம்பாய்)

★

மதராஸ் டிவிஷன் ஆபீஸ்:

"கெய்த்னெஸ் ஹால்" 310-311, லிங்கி செட்டி தெரு, மதராஸ்.

★

அங்கீகரிக்கப்பட்ட மூலதனம்	.....	ரூ. 1,00,00,000
வாக்களிக்கப்பட்ட மூலதனம்	.....	ரூ. 50,00,000
ஐவேஜிகள்	.....	ரூ. 50,00,000-க்குமேல்

ஆயுள், தீ, கப்பல் & மோட்டார் கார் இன்ஷ்யூரன்ஸ்களுக்கு முதன்மை ஸ்தானம் வகிக்கும் தேசீய ஸ்தாபனம்.

தமிழ்நாடு பூராவுக்கும் நல்ல கமிஷன் விகிதங்கள்பேரில் செல்வாக்குள்ள ஏஜண்டுகள் தேவை.

உடனே விண்ணப்பம் செய்க:

K. K. ஐயங்கார், டிவிஷன் மானேஜர்,
தபால் பெட்டி நெ. 240, மதராஸ் 1.

அல்லது

ஸ்ரீ T. E ராகவாச்சாரி பி. ஏ. பி. எல்., ஏஜன்ஸிகள் சூப்பரின்டெண்டு, செங்கற்பட்டு, சித்தூர் & வடாற்காடு ஜில்லாக்களுக்கு, 1/8, எட்வர்ட் எல்லியட்ஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்.

ஸ்ரீ A. R. வெங்கடரமணன், ஏஜன்ஸி ஆர்கனைஸர், 17, சின்னகடை தெரு, தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினுப்பள்ளி.

ஸ்ரீ N. ரங்கநாதன், இன்ஸ்பெக்டர், 8/70, கீழ வீதி, தர்மபுரி. (சேலம் ஜில்லா)

ஸ்ரீ E. R. கிருஷ்ணன், ஏஜன்ஸி ஆர்கனைஸர் எலபுள்ளி போஸ்டு, பாலக்காடு

நல்ல நிபந்தனைகள்பேரில் மதுரை, ராமனுதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு ஏஜன்ஸி ஆர்கனைஸர்கள் தேவை.

விண்ணப்பிக்கவும்:—
டிவிஷன் மானேஜர், தபால் பெட்டி நெ. 240, மதராஸ் 1.

வாழிய செந்தமிழ்! சுதேசமித்திரன் வாழ்க நற்றமிழர்!
வாரப்பதிப்பு

Vol. XIX] சர்வதாரி௵ ஆடிமீ 24௳ ★ 1948-௵ ஆகஸ்டுமீ 8௳ No. 28

நிஜாமுக்கு சர்ச்சில் வக்காலத்து

குளிக்கப் போய் சேற்றை பூசிக்கொண்டு திரும்பிய கதையாகவே முடிந்திருக்கிறது நேற்றைய காமன்ஸ் விவாதம். நிஜாமுக்கு எப்படியாவது சப்பைக் கட்டு கட்டிவிடலாமென்று சர்ச்சில் இந்த விவாதத்தைக் கிளப்பினார். நிஜாமின் கையாட்கள் எழுதிக் கொடுத்த பாடத்தை வைத்துக்கொண்டு தமக்குள்ள வாக்குச் சமத்காரத்தையெல்லாம் காட்டினார். இந்திய யூனியனின் மீது அவர் எரிந்து விழுந்த வகை கண்டு யாரும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆரம்பமுதலே இந்தியா மீது துவேஷத்தால் கண்ணடைத்த சர்ச்சில் இன்றுவரை சிறிதும் இமை திறக்கவில்லையென்பதையே நேற்றைய பேச்சு குறிக்கிறது. ஆனால் நிஜாமுக்கு முட்டுக்கொடுக்க சர்ச்சில் பட்ட இவ்வளவு சிரமமும் இறுதியில் என்ன ஆயிற்று? பிரதமர் அட்லியிடம் சரியான சாட்டையடி வாங்கிக்கொண்டார். அதோடு நிஜாமின் அக்கிரமம் உலகுக்கு இன்னும் வெட்ட வெளிச்சமாகிவிட்டது.

இந்திய யூனியனைக் குற்றவாளியாக சித்தரிக்க, சர்ச்சில் தமக்குத் தெரிந்த புரட்டு வித்தைகள் அனைத்தையும் கையாண்டார். ஒரு சுதந்திர நாடாக விளங்க ஹைதராபாத்துக்கு உரிமையுண்டாம். ஆனால் இந்திய யூனியன் பொருளாதார முற்றுகையால் அதை நசுக்கிக்கொண்டிருக்கிறதாம். இதை பிரிட்டன் பார்த்துக்கொண்டு வாளாவிருப்பதா என்று சர்ச்சில் ஓலமிடுகிறார். ஹைதராபாத் என்றும் ஒரு சுதந்திர ராஜ்யமாயிருந்ததில்லையென்பது சரித்திரபூர்வமான உண்மை. இந்தியாவிலிருந்து பிரிட்டிஷார் வெளியேறியதன்பேரிலும், அச் சமஸ்தானத்துக்கு சுதந்திர உரிமை கிடைத்துவிடவில்லை. இன்று பிரிட்டனில் லங்காஷயரிலோ அல்லது மாஞ்சஸ்டரிலோ ஒரு கும்பல் தலையெடுத்து தங்கள் ஸ்தலம் ஒரு சுதந்திர ராஜ்யம், பிரிட்டிஷ் சர்க்காருடன் எவ்விதத் தொடர்பும் கொள்ளப்போவதில்லையென்று பிரகடனம் செய்யுமானால் அது எவ்வளவு அபத்தம்! அத்தகைய ஒரு கேலிக் கூத்தே நிஜாமின் சுதந்திரப் பிரகடனமும்.

ஹைதராபாத் ஒரு தனி சுதந்திர நாட்டுக்குள்ள அந்தஸ்தைப் பெற முடியாது; அதையொட்டிய டொமினியனுடன் இணைப்புறுவதுதான் உசிதம் என்று பிரிட்டிஷ் சர்க்கார் ஏற்கெனவே தெளிவாக்கியிருக்கின்றனர். சென்ற வருஷம் நிஜாமே இந்தியாவுடன் கையெழுத்திட்ட நடைமுறை நீடிப்பு ஒப்பந்தத்தின்மூலம் இந்திய யூனியனோடு இணைப்புறும் கொள்கையை திட்டமாக ஒப்புக்கொண்டுவிட்டாரென்பதை பிரதமர் அட்லி சுட்டிக்காட்டியிருக்கிறார். எனினும் ஹைதாராபாத்தின் சுதந்திர உரிமையை எவ்விதத்திலும் விட்டுக்கொடுக்க முடியாதென்று இப்போது நிஜாம் வீராப்புப் பேசுவதுடனில்லை. இந்திய யூனியனுடன் போர் புரிவதற்கான மு தீப்பிலும் முனைந்துள்ளார்.

ஆனால் இணைப்புப் பிரச்னை மக்களது கருத்துப்படிதான் முடிவாகவேண்டுமென்ற கொள்கையை சர்ச்சிலும் ஒப்புக்கொள்ள நேர்ந்தது நேற்றைய விவாதத்தில் ஒரு தனி விசேஷம். இந்திய யூனியன் ஆரம்பத்திலிருந்தே இக்கொள்கையைத்தான் வற்புறுத்தி வந்திருக்கிறது. ஆனால் ஹைதராபாத்தில் இக்கொள்கைப்படி முடிவேற்படுமுன் அதற்கு உகந்த ஒரு சூழ்நிலை ஏற்பட்டாகவேண்டும். அதாவது முதலில் அங்கு பொறுப்பாட்சி ஏற்படுவது அத்யாவசியம். ஹைதராபாத்தில் நடப்பது பத்தாம்பசலி தர்பார், அதில் மக்களுக்கு ஒரு தொடர்புமில்லை என்பதை அட்லியும் நேற்றைய விவாதத்தில் இடித்துக்காட்டியிருக்கிறார். நிஜாமின் அக்கிரம நடத்தைக்கு பிரிட்டன் ஆதரவளிக்கப்போவதில்லையென்பது வெட்ட வெளிச்சமாகிவிட்டது. இதற்குப் பிறகாவது நிஜாம் உணர்வு பெறுவாரா? சந்தேகம்தான்.



மகாத்மாஜி பூத உடல் பஸ்மமான ராஜ்காட்டில் விநோபாபாவே சென்ற 30-ந்தேதி விசேஷப் பிரார்த்தனை நடத்தினர்.



இந்தியாவின் முதல் க்ரூய்ஸர். —"டில்லி"

அப்பாவி அநுமந்த ராவ்

யமுனபாய்

கலைவாணி கம்பெனியின் மானேஜர் கருணாகரன் மேஜை மேல் இருந்த "காலிங்" பெல்லைத் தட்டிவிட்டார்." தலைக்கு மேல் "கிர்" என்ற சப்தத்துடன் வேகமாக சுற்றிக் கொண்டிருந்தது மின்சார விசிறி. அவர் வாயில் இருந்து எழுந்த சிகரட் புகையின் நிறைவைக் காணும்போது மேக மண்டலத்தில் திரியும் வானவர் போல இருந்தது. மணியின் ஒலியைக் கேட்ட ஆபீஸ் சேவகன் முத்து ஓடி வந்து வழக்கமான மரியாதையுடன் எதிரில் நின்றான். "ஏய் முத்து, காஷியர் அறைக்குப்போய் நான் கூப்பிடுவதாகச் சொல்லி அழைத்து வா." என்ற எஜமானின் உத்தரவு எழுந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் காஷியர் ஹநுமந்தராவ் மானேஜரின் அறையில் காணப்பட்டான். காரணம் வேறொன்றும் இல்லை. ஓர் ரகசியமான ஆபீஸ் காரியார்த்தமாக ஹநுமந்தராவைத் திருச்சிராப்பள்ளிக்கனுப்ப மானேஜர் நினைத்திருந்தார். எஜமானிடம் விச்வாசம் மிகுந்த ஹநுமந்தராவ் அன்றிரவு திருச்சிக்குப் புறப்படத் தயாரானார்.

கலைவாணி காரியாலயத்தில் நூற்றுக்கணக்கான சிப்பந்திகள் இருந்தாலும் மானேஜர் கருணாகரனுக்கு ஹநுமந்தராவிடமே ஓர் அலாதியான விச்வாசம். வெளிப்படையாக மனதில் நினைத்ததையே சொல்லி விடுவான். ஓர் நாளாவது காரியாலயத்திற்குக் காலம் கழித்து வந்ததில்லை. பண விஷயத்தில் மகா கண்டிப்பானவன். இக்குணங்களே மானேஜரின் அன்பை அவனுக்குத் தேடித் தந்தன.

சாந்த ஸ்வரூபியான மகாத்மா காந்தி அவர்களுக்கே ஓர் பகைவன் இருந்தானென்றால் ஹநுமந்தராவ் எந்தமட்டில். பொருமையான சிறு பிராயத்தில் மண்டையை உடைத்துக்கொள்வதில் இருந்து, பெருகி பிறகு உலகப் போர்வரையில் முடிவடைகிறது. மானேஜர் ஹநுமந்தராவை அளவுக்கு மீறி நேசிப்பது ஒரு சில ஆபீஸ் குமாஸ்தாக்களுக்குப் பொறுக்கவில்லை. அவனுடைய நன்மதிப்பைக் கெடுக்க முன்னோக்கி இருந்தனர். 'அப்பொருமைக் கூட்டத்திற்கு முடிசூடா மன்னனாக விளங்கினான்' டைபிஸ்ட் தாமோதரம்.' அவன் சில சமயங்களில் "எத்தனையோ பேரைத் தண்ணீர் இல்லாத இடங்களுக்கு மாற்றும்படிச் செய்த நான் இந்த ஹநுமந்தராவையும் விடப்போவதில்லை என்று தன் புராணத்திலிருந்து ஓர் பிரதாப படலத்தைப் பாடி முடித்திருக்கிறான். ஆபீஸில் சற்று நல்லவனாக இருக்கும் எவர்மீதும் ஓர் அவதூறைக் கிளப்பி அதை நம்பும்படிச் செய்து அவர்களை வேலையை விட்டு நீக்கும்படிச் செய்வதோ, அல்லது அந்தமான் போலிருக்கும் இடங்களுக்கு மாற்றும்படிச் செய்வதோ தான் தாமோதரத்தின் வேலை.

ஹநுமந்தராவ் சென்ற சற்று நேரத்திற்கெல்லாம் மானேஜர் தாமோதரனைக் கூப்பிட்டு "மிஸ்டர் தாமோர்தரம், நம் ஹநுமந்தராவ் இரண்டு நாள் ரஜாவில் இருக்கிறார். அவர் வரும் வரையில் நீங்கள்தான் காஷியராக இருக்க வேண்டும்" என்றார். "அதற்கென்ன தாங்கள் சொல்லும்போது பதிலேது என்றான். தாமோதரத்தின் மனதில் யோசனைப் புயல் வேகமாக வீச ஆரம்பித்தது.

அப்புயலின் வேகத்தினால் பல வலிய மரங்களான சூழ்ச்சி மரங்கள் பேரிரைச்சலுடன் கீழே விழுந்தது. தன் இடத்தில் வந்து உட்கார்ந்த தாமோதரனை அவனுடைய சகாக்கள் மொய்த்துக் கொண்டனர். அவர்களுடன் ஏதோ ரகசியமாகப் பேசிக் கொண்டிருந்தான் தாமோதரம். மணி ஆறு ஆனவுடன் தாமோதரன் வீடு திரும்பினான்.

மறு நாள் காலையில் இருந்து தான் தாமோதரன் வேலையை ஒப்புக்கொள்ளவேண்டும். மணி பன்னிரண்டு இருக்கும். தாமோதரன் பரபரப்புடன் காணப்பட்டான். திடீரென்று மானேஜரின் அறைக்கு எழுந்து ஓடினான். "சார் நேற்றைய "அகௌன்டில்" ரூ 500 "ஷார்ட்" ஆகியிருக்கிறது" என்றான் மானேஜர் திடுக்கிட்டு "அது எப்படி நடக்கும்" அநுமந்தராவ் கூட நேற்று சரியாகத் தான் கணக்கைக் காட்டினார். அதென்னமோ சார், காலையில் வந்ததும் நான் கணக்கைச் சரி பார்க்க உட்கார்ந்தேன். பார்த்தான் ரூ 500 ஷார்ட்டேஜ்" இது வரையில் யாருக்கும் பணம் கொடுக்கவில்லை" வரவு ரூ 753-13-0" என்று சொன்னான் தாமோதரம். மானேஜருக்கு ஒன்றும் புரியவில்லை. "எதற்கும் நாளைக்கு ஹநுமந்தராவ் வரட்டும் பார்க்கலாம்" என்றார்.

அன்று சாயங்காலம் மிகவும் களைப்புடன் வீடு திரும்பினார். வீட்டிற்குள் நுழைந்ததும் "சுசீலா" "சுசீலா" என்று கூப்பிட்டார். பதிலில்லை. மறுபடியும் உரக்கக் கூப்பிட்டார். "என்ன வண்ணான் துணிகளை அடுக்கி வைத்துக் கொண்டிருந்தேன். உங்கள் கோட்டுக்குப் பதிலாக வேறொரு கோட்டு கொண்டு வந்து விட்டாள்" என்றாள் சுசீலா. "அடடா இது யாருடைய கோட்டு. என்னுடையதைப்போலவே இருக்கிறதே. என் கோட்டின் உள் பாக்கட்டில் T. K. (டி. கே.) என்று போட்டிருக்குமே அதையும் பார்த்துவிடலம்" என்று பாக்கட்டில் கையை விட்டவர், என்னடி இது பையுக்குள் காகிதங்கள் இருக்கின்றனவே" என்று வெளியே எடுத்தவர் அவைகள் நூறு ரூபாய் நோட்டுக்களாய்க் கண்டு திடுக்கிட்டார்" எண்ணிப் பார்த்ததில் சரியாக

ஐந்து இருந்தன. அவர் வாய் "ஷார்டேஜ் 500 ரூபாய்" என்று முணுமுணுத்தது. கோட்டை முன்னும் பின்னும் திருப்பிப் பார்த்தார். கோட்டின் கழுத்துப் பட்டையில் (S. H.) (எஸ். எச்) என்று எழுதப்பட்டிருந்தது. மானேஜரின் மூளை தீவிரமாக வேலை செய்ய ஆரம்பித்தது. "டேய் முத்து இங்கே வா" என்றார். அவன் வந்ததும் நீ போய் நம் வீட்டு லாண்டிரிக்காரனை அழைச்சுண்டு வா" என்றார்.

சற்று நேரத்திற்கெல்லாம் முத்துவுடன் சலவைத் தொழிலாளி வந்தான். "டேய் உண்மையைச் சொல்றியா அல்லது வயிற்றுப் பிழைப்பைக் கெடுத்துக்கொண்டு வாயில் மண்ணை அடித்துக் கொள்ளப் போறியா" என்று அதட்டினார். சலவைத் தொழிலாளியை சாமி எனக்கொண்ணும் தெரியாதுங்களே எசமான்" என்று பிரலாபிக்க ஆரம்பித்துவிட்டான். டேய் எனக்குத்தெரியாதுண்ணு நெனைச்சுட்டியா நம்ம ஆபீஸ் காஷியரையா பையிலே 500 ரூபா பணம் எப்படி வந்தது சொல்லிடு" என்று மிரட்டினார்.

"சாமீ எசமானே ஏழையைக் காப்பாத்தறேன்னு சொல்லுங்க. சொல்லிடறேன், புள்ளெக்குட்டிக்காரங்க" என்று அழஆரம்பித்துவிட்டான். "உண்மையைச் சொன்னால் விட்டுடறேன், பொய் சொன்னியோ...ஜாக்கிரதை' என்றார் மானேஜர். "சாமீ நேத்திக்கு சாயந்திரம் நம்ப படைபிஸ்த்து ஐயா கிட்ட பாக்கிப் பணம் கேக்க கச்சேரிக்குப் போனேனுங்க" அவரு நெதெக்கும் இருக்கற இடத்திலே காணோம் அவரு கஜானாவிலே இருக்கறதாக யாரோ சொன்னாருங்க. நான் அங்கே போனதும் வாப்பா முனிசாமி உன்னைத்தான் பார்க்கணும்னு இருந்தேன், வான்னு சொல்லி "உங்க கிட்டே ஓர் விஷயம் சொல்றேன் ரகசியமா நடந்துகிட்டேன்னா உனக்கு ரூ 10 தருவேன் என்று சொன்னாரு. நான் மடத்தனமா புடிகொடுத்துப் பேசிட்டேன். என்னென்னமோ சொல்லி என்னை மயக்கிட்டாரு. டேய் நான் 5 நூறு ரூபாய் நோட்டுத் தருவேன் அதை காஷியர் கோட்டுப்பையி (கருப்புக் கலர்)லே வைச்சுடு, வேறொண்ணுமில்லே" அவ்வளவுதான்னு சொல்லி பத்து ரூபா நோட்டொண்ணு கொடுத்தாருங்க. எசமான் தெரியாத்தனமா வாங்கிட்டேன். இந்த நாயை மன்னிச்சுடுங்க என்று மானேஜர் காலில் விழுந்தான்.

முனிசாமி போய்விட்டான்.

மறுநாள் ஹநுமந்தராவும் வந்துவிட்டான். தாமோதரன் அன்று ஆபீஸில் குதாகலமாகக் காணப்பட்டான். தான் நினைத்ததைப் போலவே, ஹநுமந்தராவ் கருப்புக்கோட் போட்டிருந்ததைப் பார்த்ததும் அவன் சந்தோஷம் இரட்டிப்பு ஆயிற்று.

திடீரென்று மானேஜர் ஹாலுக்குள் நுழைந்தார். எல்லோரும் எழுந்து நின்றனர். "நண்பர்களே! நம் காரியாலயத்துக்கு இருக்கும் பேரும் புகழும் நீங்கள் அறிந்ததே. அது கெடும்படியாக ஓர் பெரும் மோசடியை நம்முள் ஒருவர் செய்திருக்கிறார். அவரை இன்றிலிருந்து நான் வேலையைவிட்டு நீக்கியிருக்கிறேன்" என்று கூறிமுடித்தார். எல்லோரும் ஹநுமந்தராவைப் பார்த்தனர். தாமோதரன் முகத்தில் முன்புறுவல் திகழ்ந்தது. எல்லோருடைய மௌனத்தைக் கலைத்துக்கொண்டு மானேஜர் மறுபடியும் பேச ஆரம்பித்தார். "மிஸ்டர் தாமோதரன். ஹநுமந்தராவை நீங்கள் சோதனைப்போடுங்கள்" என்றார். தாமோதரன் குதூகலமாக ஹநுமந்தராவின் கோட்டுப் பையையே துழாவித் துழாவிப் பார்த்தார். முகத்தில் அசடு வழிந்தது. என்ன மிஸ்டர் நீங்கள் கருப்புக் கோட்டில் தானே வைக்கச் சொன்னீர்கள்" என்றார். தாமோதரத்துக்கு மயக்கம் வரும்போலாயிற்று. உடனே நடந்தவைகளை மானேஜர் மற்றவர்களிடம் சொல்ல, அந்த சலவைத் தொழிலாளியையும் கூப்பிட்டு விசாரித்தார். அவனும் மானேஜரிடம் சொன்னதைப் போலவேயே சொன்னான். தாமோதரன் தொங்கிய முகத்துடன் அந்த மாதத்திய பாக்கி சம்பளத்தை வாங்கிக்கொண்டு கலைவாணி கம்பெனியைக் கடைசிமுறையாகப் பார்த்துவிட்டு வீடுபோய்ச் சேர்ந்தான். அப்பாவி ஹநுமந்தராவ் என்று எல்லோர் வாயும் முணுமுணுத்தது. ——



நாமொன்று நினைக்க——.

ய. மஹாலிங்க சாஸ்திரி எம். ஏ., பி. எல்.

இது நிற்க, அன்று சாயந்திரமே, காலேஜ் வேலை நேரத்தின் இறுதியில் ராமனுதனும், ஸீதாராமனும் விளையாட்டுத் தோட்டத்தில் தனியே ஸம்பாஷிக்கலானார்கள்.

"உன்னை ஒன்று கேட்க நினைத்தேன், ராமனுதா? நீ பாங்குக்குக் காலையில் என்னுடன் வரும்போது இந்த வைரப் பித்தான் ஸெட்டை நான் பார்த்ததாக ஞாபகமில்லையே!''

"பார்த்திருக்கமாட்டாய்''

'மோதிரமும், ரிஸ்டு வாட்சும் அப்போது போட்டுக்கொண்டிருந்தாயோ?''

"இல்லைதான்''

"பாங்கிலிருந்து காலேஜ் வருவதற்குள் அவை எங்கிருந்து வந்தன? அப்பாவிடம் கொடுத்து வைத்திருந்தாயோ?''

"ஆமாம் என்று வைத்துக் கொள்ளேன்.''

"ரூபாய் ஆயிரத்தைக் கொடுத்து அவைகளை அடகு மீட்டுக்கொண்டு வந்தாயாக்கும்?''

"நீ சொல்வது சரிதான்.''

"என்ன, ராமனுதா? எனக்கு ஒன்றும் புரியவில்லையே? நான் என்ன சொல்கிறேன்? அதில் என்ன சரி?''

"சொல்லுகிறேன் சீதாராமா! உன்னிடம் நான் ஒன்றையும் ஒளிக்க விரும்பவில்லை. உன்னை அதற்காகத்தான் தனியே அழைத்து வந்தேன். ஆனாலும் மனது தயங்குகிறது. சில நாட்களாகவே உன்னிடம் என் சம்பந்தமான சில முக்கிய விஷயங்களைப் பேச உத்தேசித்திருந்தேன். இப்போது சொல்லித்தான் ஆகவேண்டும் என்ற நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. நீயும் இப்போது கேட்பதுபோல் தூண்டுதல் செய்யும் சந்தேகக் கேள்விகளை முன்னதாகக் கேட்காததால், எனக்கும் பிரஸ்தாபிக்க சந்தர்ப்பம் நேரவில்லை.''

"ராமனுதா! நீ காலையில் அப்பா ஆபீஸுக்குப் போய் அந்த 'செக்' ரூ. ஆயிரத்தையும் அவரிடம் கொடுத்து விட்டாயா, இல்லையா? அதை முதலில் சொல்.''

"ஸீதாராமா! நான்தான் எல்லாவற்றையும் சொல்லப் போகிறேனே! சற்று பொறுமையாய் கேள். உன்னிடம் எப்போதும்போல் நான் கொஞ்ச நாளாய் இருக்கவில்லை.''

"அதை நான் அறிந்து கொண்டேன்,''

"உன்னைக்கேட்காமல் நான் ஒன்றும்செய்வதில்லை. உன்னை அல்லாமல் நான் ஒரு இடத்திற்கும் போவதில்லை; உன்னிடம் எந்த எண்ணத்தையும் ஒளிப்பதில்லை: இன்றெல்லாம் இருந்த நட்பு முறையை நான் சில காலமாய்க் கைவிட நேர்ந்ததற்கு வருந்துகிறேன்.''

"அதனால் என்ன? உனக்கு எப்படி இருக்கவும் சுதந்திரமுண்டு.''

"என்ன? சுதந்திரம், ஸீதா

ராமா? புத்தியில்லாதவனுக்குச் சுதந்திரம் கிடைத்தால் அது தனக்கும் பிறருக்கும் தீங்கிழைக்கக்கூடிய நிலையில் அதை விநியோகிப்பானே ஒழிய நன்மையைப் பெற அவன் அறியமாட்டானே!''

“இருக்கட்டும், விஷயத்தைச் சொல்.

“உன்னிடம் எப்போதும்போல் கலந்தாலோசித்திருந்தால் நான் இன்று காலையில் நடந்துகொண்ட விதம்,நடந்துகொள்ள நெருக்கடி ஏற்பட்டிருக்காது. ஆனல் அதைப்பற்றி வருந்துவதில் இப்போது என்ன பயன்? இப்போதாவது, உன் களங்கமற்ற உள்ளத்திற்கு நான் செய்த துரோகத்தை உன்னிடம் தெரிவித்து, என் மனத்தைச் சமாதானம் செய்துகொள்ள விரும்புகிறேன். நம் நட்பு என்றும் குன்ருமல் இருக்க வேண்டும். என்னைப்பற்றி எனக்குக் கவலையில்லை. உன்னையும் எந்தத் தீங்கிலிருந்தும் நான் காப்பாற்றக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறேன். ஆகையால் நீ ஒன்றுக்கும் அஞ்ச வேண்டாம்.''

“ராமனதா! உன்னிடம் ஆயுள் பரியந்தம் நான் நன்றி செலுத்தக் கடமைப் பட்டவனயிருக்கிறேன். நீ செய்வது எனக்கு துரோகமாகாது, நன்மையாகத்தான் முடியும். துரோகத்துக்கும் உனக்கும் வெகுதூரமல்லவா? ஏன் புது மாதிரியாய்ப் பேசுகிருய்? என்ன நடந்துவிட்டது? விவரமாய்ச் சொல். ஆபத்தோ ஸம்பத்தோ நம்மிருவருக்கும் பொது. வேண்டாம், ஆபத்தை என் பங்கில் வை, நான் ஏற்கத் தயாராகவிருக்கிறேன். நீ என்னிடம் இதுவரையில் உடன் பிறந்தவனைப்போல் காட்டிவந்த அளவற்ற அன்பிற்கு உனக்கு நான் என் தலையைக் கொடுத்து உதவினலும் தகும்.'

“ஸீதாராமா! இப்படி எல்லாம் இந்த அயோக்கியனைப் பார்த்துப் பேசாதே! மனம் முள் புதரில் விழுந்து தவிக்கிறது. நான் பழய ராமனதனல்ல''

“நீ பழய ராமனதனில்லாவிட்டால் என்னிடம் இப்படிப் பேசுவாயா? வீணய் ஆயாசப்படாதே! என்ன கஷ்டத்தில் மாட்டிக் கொண்டு விட்டாய்? யார் உன்னை மோசம் செய்துவிட்டார்கள்? பணம் போன வழி என்ன? புகாரில்லாமல் தப்பித்துக்கொள்ள மார்க்கமுண்டா? தவறுதல் நடந்துவிட்டாலும் அது விஸ்தரிக்குமுன் அதை நேர்ப்படுத்தச் சாத்தியமாகாதா? இதை எல்லாம், ஆலோசிப்போம். பயப்படாதே! தயங்காதே!, உன் நிலைமையை ஒழுங்கு படுத்துவதற்காக நான் எதையும் துறக்கச் சித்தமாயிருப்பேன், நம்பு.''

“நம்புகிறேன், ஸீதாராமா! எனக்கு உன் அன்பார்ந்த, களங்கமற்ற, இனிய சொற்கள் மனதை உடைக்கின்றனவே ஒழிய என் நிலைமையைச் சமாளிக்க நான் ஐயமுறவோ, அதைரியப்படவோ இல்லை. நான் மனதார மேற்கொண்ட வழக்குகள் என்னைக் கிஞ்சித்தேனும் துன்புறுத்தவில்லை. பச்சாதாபத்தையும் உண்டு பண்ணவில்லை. உன் நிர்மலமான நட்பைப்பெற அருகதையில்லாத எனக்கு உன் யதார்த்த மொழிகள்தான் வேதனையைத் தருகின்றன. உன்னை வருத்தி ஒரு பயனை அடைய என் மனம் இடம் கொடுக்காததால், காரியத்தை நேர் செய்துவிட்டு உன்னிடம் பிரஸ்தாபித்து உன்னை பிரமிக்க வைக்கலாம் என்றும் ஒரு பக்கத்தில் நினைத்தேன். ஆனல் என் கோழை மனம் கேட்கவில்லை. உன்னிடம் இதுகாறும் சில வர்த்தமானங்களை நான் மறைத்து வைத்திருந்ததே மிக்க ஆச்சரியம். உன்னைப் பார்க்கும் ஒவ்வொரு சமயத்திலும் நெஞ்சிலிருந்து துள்ளி எழுந்த வார்த்தைகளை பலாத்காரமாய் அடக்கி வைத்திருந்தேன். ஆனல் படிப்படியாய் என் உறுதி குன்றிவந்தது. சந்தர்ப்பமும் திருகல் போட்டுக் கொண்டது. கட்டுக்கடங்காத பிரவாகம் இப்போது கரையை உடைத்துக்கொண்டு வருகிறது''

“எதுவானலும், ராமனதா! நீ என்னிடம் சொல்லாமலிருந்தது தவறுதான். சிலகாலமாய் நானும் உன் போக்கில் உள்ள மாறுதல்களைக் கவனிக்காமலில்லை. ஆனல் என் மனதில் இருந்தது வாய்க்கு வராமல் தடுத்தது என் கோழைத்தனமே! அதுவே அடங்கி ஒடுங்கி நடந்துகொண்டே நான் கழித்த வாழ்நாட்களின் பயன்! நட்பின் முறைமையால் நான் உன்னிடம் எடுத்துக்கொள்ளவேண்டிய சுவாதீனத்தை நான் ஒளிக்க நேர்ந்த

தற்த என் சுயநலப்பற்றே காரணம்.''

“இல்லை ஸீதாராமா! என் அகம்பாவமேதான் நீ என்னை நெருக்கிக் கேட்காததற்கு மூல காரணம். நான் எப்போதும் போல் உன்னிடம் ஒட்டிக்கொண்டிருந்தால், நீயும் எப்போதும் போல் சுவாதீனமாய்க் கேட்டிருப்பாய்! நான் விலகினல், நீயும் விலகுகிருய். இது இயல்புதானே? அதிலும் சூட்சம திருஷ்டியுடைய உன்னிடத்தில் என் நட்பின் ஏற்றத்தாழ்வுகள் ஒரு தர்மாமீட்டரைப்போல் பிரதிபலிக்காமலிருக்குமா?'

“நல்லது, விஷயத்தைச் சொல், ராமனதா?''

“சொல்லத்தான் ஆரம்பிக்கிறேன். சுற்றிச் சுற்றி வருகிறேன். வெட்கமும் துக்கமும் அணைபோல் வந்து மறைக்கின்றன.''

"ராமனாதா! பத்மாவுக்கும் உன் குழப்பத்திற்கும் ஏதாவது சம்பந்தமுண்டா?"

"சொல்லுகிறேன் கேள். முன்னொரு நாள் பத்மா வகுப்பில் இருக்கும்போது வீட்டில் அவள் தாயார் மயக்கமாய் விழுந்து கிடப்பதாய் ஒரு ஆசாமி பத்மாவை அழைத்துப் போக வந்தது ஞாபகமிருக்கிறதா?"

"ஆமாம்!"

"அன்று எல்லோருக்கும் பத்மாவிடம் பரிதாபமாக விருந்ததல்லவா?"

"ஆம்"

"உனக்கும், எனக்கும் அவ்விதச் செய்தி வந்தால் யார் அனுதாபப் படப்போகிறார்கள்? பத்மா ஒரு மோஹினியல்லவா?"

"சரி, மேலே சொல்லு."

"மறுநாள் அவளை இடை நேரத்தில் தனியிடத்தில் சந்திக்க நேர்ந்த நான், அவள் தாயாரின் உடம்பு ஸ்திதியைப்பற்றிக்குசலப் பிரச்னம் செய்தேன்."

"மற்ற எவனும் அப்படி அவளைச் சந்தித்துக் குசல பிரச்னம் செய்ய ஆவல் கொண்டிருப்பான். ஆனால் நீதான் அதைச் செய்தாய்!"

"பத்மா மிக்க பணிவுடனும் பாங்குடனும், ஆதரவுடனும் நன்றியுடனும் எனக்கு பதிலளித்தாள். அதுமுதல் அவளிடத்தில் பேச நான் ஏதாவது சாக்கு வைத்துக்கொள்ள ஆரம்பித்தேன். அவளும் நான் கோரும் தொடர்பை திருப்தியுடன் ஏற்றுக்கொண்டாள். புஸ்தகம் கடன் கேட்பேன். லைப்ரரியில் அவள் வாசிக்கக்கூடிய புஸ்தகம் என்று எதையாவது குறிப்பிடுவேன். நான் வகுப்பிற்கு வராத நாட்களில் அவள் எழுதிவைத்திருக்கும் பாடக் குறிப்புகளைப் பார்க்க விரும்புவேன். 'பத்மா! வகுப்பில் நீ மட்டும்தான் கவனமாய் உபாத்தியாயர் சொல்லும் முக்ய விஷயங்களுக்குக் குறிப்பு எழுதிக்கொள்கிறாய்! மற்றவர்கள் நீ எழுதுவதைப் பார்த்துக் கொண்டு கொலு பொம்மைகள் போல் உட்கார்ந்திருக்கிறார்கள், என்றேன் ஒரு நாள். பத்மா சிரித்துக்கொண்டாள். அந்தச் சிரிப்பு என் உடலில் நெருப்பாய்ப்பற்றிக் கொண்டது. பத்மா, 'அந்த நோட்டு வீட்டிலிருக்கிறது; நாளைக்குக் கொண்டுவந்து தருகிறேன்! என்றாள். மறுநாள் அவள் கொண்டு வந்தாளா என்று விசாரிக்க வெகு உற்சாகத்துடன் காத்திருந்தேன். அவள் அன்று பள்ளிக்கே வரவில்லை. அன்று எனக்குப் பைத்தியம் பிடித்தது போலாயிற்று. பிற்பாடு பத்மா வந்ததும் அவளை அந்த நோட்டு விஷயமாய்க் கேட்டேன். அவள் மிகுந்த வருத்தத்துடன் தன் மறதிக்கு என்னிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டாள் நான் சுழலில் விழுந்துவிட்டேன். "பத்மா! நீ அனுமதித்தால் போகும்போது உன் வீட்டிற்கு வந்து அந்த நோட்டைப் பெற்றுக் கொள்கிறேன்" என்று வரம் வேண்டினேன். இந்த வரனை அவள் அனுமதிப்பதில் என் உயிர் ஊசலாடிக்கொண்டிருந்தது. என்ன ஆச்சரியம்! அவள் அனுமதித்துவிட்டாள்! எனக்குச் சுக்ர தசை ஆரம்பமாயிருக்கிறதென்று மனதிற்குள் நினைத்து மகிழ்ந்தேன். அந்த நோட்டிற்கு என் ஜீவிய சரித்திரத்தில் வந்த முக்கிய தத்துவத்தை நினைக்க எனக்குச் சிரிப்பு வந்தது. மணி அடித்ததும் பள்ளியை விட்டுப் புறப்பட்டேன். சற்றுக் கடை வீதியில் பொழுது போக்கிவிட்டுப் பத்மா வீட்டை அடைந்தேன். போகும்போது வெறும் கையோடு போகாமல் உயர்ந்த ரக பிஸ்கெட்டில் இரண்டு பாக்கெட்டுகள் வாங்கி எடுத்துக் கொண்டு போனேன். பத்மாவின் தாயார் பாக்யலக்ஷ்மி என்பவள் என்னை வரவேற்றாள். என்னை ஒரு வட்ட மேஜையின் முன் நாற்காலியில் உட்காரச் செய்தாள். நான் பத்மாவுக்காகச் சில நிமிஷங்கள் காத்திருக்க நேர்ந்தது. நான் இருந்த ஹாலின் சோபையைக் கண்டு வியந்தேன். அதன் நாகரிகமான அழகுத் தோற்றம் என்னைப் பரவசப்படுத்தியது. சுவரில் வரிசையாய் அமர்த்தப்பட்டு என்னைக் குனிந்து பார்க்கும் படங்களை கவனிக்கலானேன். பல அழகிய பெண்மணிகளின் போட்டோக்கள் தென்பட்டன. ஒரு யுவதி வீணையுடன் உட்கார்ந்திருந்தாள். அவளருகே பிடில் வாசிக்கும் கட்டழகி காணப்பட்டாள். ஒரு பெண் அபிநயத்துடன் நர்த்தனம் செய்யும் காட்சி கண்ணைக் கவர்ந்தது. இரு சுந்தராங்கிகள் பக்க வாத்தியங்களுடன் பாடும்போது படம் பிடிக்கப்பட்டிருந்தார்கள். சுவரில் நடு மத்தியில் அவ்வறையின் ராணிபோல் ஒய்யாரமாய் அலங்காரம் செய்துகொண்டு நிற்கும் ரூபவதி ஒரு கையால் தலையில் பூச்சூட்டிக்கொண்டு புன்னகையுடன் கொஞ்சும் கண்களால் வருகிறவர்களை வரவேற்பவள்போல்



தோன்றினாள். நான் அப்ஸர ஸ்திரீகள் சூழ, தேவேந்திர லோகத்தில் வீற்றிருப்பதாய் எண்ணம் கொண்டேன். அடுத்தது பத்மாவின் படம். அவள் கையில் புஸ்தகங்களுடன் காணப்பட்டாள். அக்குடும்பத்தில் படிப்பிற்காக ஒதுக்கப்பட்டவள் அவள் ஒருத்திதான் போலும். அடுத்தது அவள் தாயார்தான். கொஞ்சம் இளமையில் எடுக்கப்பட்டதாயிருக்கலாம். இரண்டொரு புருஷர்கள் படங்களும் இருந்தன. அதில் ஒரு கிழவர் அதிகார தோரணையில் வீற்றிருந்தார். அவற்றைத் தாண்டி அப்புறம் கவனத்தைச் செலுத்தினேன். ஒரு அழகிய சிறுமியின் விசாலமான நோக்கு என்பேரில் விழுந்தது. பத்மாவைவிட இளம் நங்கை. பத்மாவைவிட அழகு வாய்ந்தவள். ஆஹா! இப்படியும் ஒரு மோஹினி இருக்கிறாளா என்று வியந்தேன். நான் இருந்த ஹாலின் மேற்கு பக்கமாயுள்ள ஒரு ரூமின் கதவு பாதி திறக்கப்பட்டு, அதில் ஒரு திவ்ய சுந்தரி நின்றுகொண்டு என்னை ஆராய்ந்துகொண்டிருந்தாள். வாசற்படிக்கு நேராக மேலே படத்தில் நான் பார்த்த அவ்வழகிதான் கீழே குதித்துவிட்டாளா என்று பிரமித்தேன். அதே திருவுருவம்! அதே கொள்ளை கொள்ளும் கடைக்கண் நோக்கு!—அந்த நிமிஷத்தில் பத்மா மற்றொருபக்கமாய் வந்துஎன்னைஸ்வப்பனத்திலிருந்து எழுப்பியிருக்காவிட்டால், நான் எப்படி நடந்து கொண்டிருப்பேனோ சொல்லமுடியாது! பத்மாவின் குரல் கேட்டதும் அந்த மாயாமங்கை மறைந்துவிட்டாள். பத்மா என்னைக் காக்கவைத்ததற்காக மன்னிப்பு கேட்டுக்கொண்டாள். நானும் அவசரப்பட்டு வந்து அவளைத் தொந்தரவு செய்ததற்காக அவளிடம் மன்னிப்புக்கேட்டுக்கொண்டேன். பத்மா என்னை "டிரிங்க்" சாப்பிடும்படி வற்புறுத்தினாள். நான் பிஸ்கெட் பாக்கெட்டுகளை எடுத்து அவளிடம் கொடுத்தேன். பத்மா பழங்கள் நிறைந்த ஒரு வெள்ளித் தட்டை எடுத்து வந்தாள். நாங்கள் பேசிக்கொண்டு வெகு உல்லாசமாகச் சிற்றுண்டி அருந்திக்கொண்டிருக்கும்போது, உள்ளே இருந்து ஒரு மதுரத்வனி கேட்டது. பாடுவதுடன் வீணையின் நாதமும் ஒலித்தது. அந்த மறைந்த மாயாமோஹினியாய்த்தானிருக்க வேண்டும் என்று தீர்மானித்தேன். எதிரே இருந்த அவள் படத்திற்கு என் கண்கள் திருட்டுத்தனமாய்ச் சென்றன. பத்மா சிரித்தாள். "அவள் என் ஒன்றுவிட்ட தங்கை, என் சிறு தாயார் பெண். அவள் தாயாரை இழந்துவிட்டாள். இப்போது எங்களுடன் வசிக்கிறாள். ஸங்கீதப் பயிற்சி பெற்றிருக்கிறாள். கச்சேரி செய்யக்கூடிய யோக்யதை உண்டு." என்றாள் பத்மா. "அவளைச் சிற்றுண்டியில் சேர்த்துக்கொள்ளாமல் இருக்கலாமா" என்று நான் வினவினேன். "அவளை இங்கு அழைத்து உட்கார வைப்பது மிகவும் சிரமம். இன்னொரு நாள் ஆகட்டும்" என்றாள் பத்மா. இது நடந்தது முதல் நான் பத்மாவைச் சந்தித்துப் பேசுவதும், அவள் வீட்டிற்குப் போவதும் உண்டு."

"பத்மாவின் நோட்டுப் புஸ்தகத்தை அன்று வாங்கிக்கொண்டாயோ, அதை மறந்துவிட்டாயோ?" என்று கேட்டான் ஸீதாராமன் சிரித்துக்கொண்டு.

"நல்ல கேள்வி கேட்டாய், ஸீதாராமா? நோட்டுப் பிரஸ்தாபத்தை இருவரும் மறந்துவிட்டோம். அது இப்போதுதான் ஞாபகம் வருகிறது" என்றான் ராமனாதன்.

ஸீதாராமனும், ராமனாதனும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

"ராமனாதா! ஷேக்ஸ்பியர் நாடகத்தில் அவள் உன்னோடு கதாநாயகியாக நடிக்க மறுத்தது இந்த நட்பிற்கு முன்னேயா, பின்னேயா?" என்று கேட்டான் ஸீதாராமன்.

"முன்னேதான். இவையெல்லாம் ஒரு மாதத்திற்கு உள்பட்ட சமாசாரம்தானே! அதைப்பற்றியும் பத்மாவைக் கேட்டேன்."

"என்ன பதில் சொன்னாள்?"

"இப்படியெல்லாம் கேட்பதானால் பதில் சொல்லுவது எனக்குச் சங்கடமாயிருக்கிறது" என்றாள்.

"சரிதான். முதலிலேயே குறிவைத்துவிட்டாள்" என்று தெரிகிறது. பெண்களுக்கு இயற்கையில் அமைந்த சாமர்த்தியம் அல்லவா இது? தனக்கு வேண்டிய நெல்லை ஆயிரம் கல்லிற்கு மத்தியிலிருந்து பொறுக்கிவிடுவார்கள். தன் விருப்பு வெறுப்புகளைப் பிள்ளைகள் இவ்வளவு ஸ்பஷ்டமாய் முன்னதாகவே அறிய முடிவதில்லை."

"ஸீதாராமா! அவள் எதை நினைத்துக்கொண்டு நாடகத்தில் என்னுடைய கதாநாயகியாய் நடிக்க மறுத்தாளோ, அதை நினைத்துக்கொண்டுதான் நான் அந்நாடகத்தில் கதாநாயகனாக நடிக்க விரும்பினேன். அதைத் தெரிந்துகொண்டாயா நீ?"

"நான் மட்டுமல்ல. பலர் தெரிந்துகொண்டார்கள் என்று நினைக்கிறேன்.— அதாவது உன் மனோரதத்தைப்பற்றினவரையில்! உண்மையில் தெளிந்தாலோ சிக்கும்கால், உணர்ச்சி உலகில் சஞ்சரிக்கும் ஆண்கள் அசட்டுத்தனத்தையும் ஆத்திரத்தையும்தான் வெளியிடுகிறார்கள். பெண்கள் அவ்விஷயத்தில் உயரிய பண்புடன் நடந்துகொள்வது இயற்கையாயிருக்கிறது. அது இருக்கட்டும், ராமனாதா! நீ ஒருமாதகாலமாய் யாரும் சந்தேகிக்க முடியாதபடி தனியே பத்மாவைச் சந்திக்கவும், பேசவும் இவ்வளவு குறும்புச் சிறுவர்கள் கூட்டத்தின் இடையே எப்படிச் சாத்தியமாயிற்று?"

"இருவர் மனமும் ஒத்திருந்தால் சாத்தியமாகும் என்பதை நானும் ஆச்சரியத்துடன்தான் அறியலானேன்."

'சரி மேலே கதையைச் சொல்லு."

(தொடரும்)

காக்கை பெற்ற வரம்

டி. எஸ். ஜயராமன்

"ஆஹா! அன்னத்தைப் பழிக்கும் அலங்கார நடையையும் மயிலின் தோகையை நிகர்த்த அளக பாரங்களையும் கிளியின் சொற்சுவையைக் கொண்ட வசனத்தையும் குயிலைப்போன்ற குரலையும் ஒருங்கே கொண்டு மின்னற் கொடிபோல் தோன்றி என் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு மாயமாய் மறைந்துவிட்ட வஞ்சிக்கொடியாள் யாராயிருக்கலாம்! இந்த நாரீமணியைச் சிருஷ்டித்த நான்முகன்..."

அன்பர்களே! இது காதற் கதையல்ல; சிருங்கார நாடகமுமல்ல. இந்த விதமாகக் காதலர்களும் கவிஞர்களும் வர்ணிக்கிறார்கள் வனிதாமணிகளை.

மயிலையும் அன்னத்தையும் கிளியையும் குயிலையும் உபமானங்களாக எடுத்தார்களேயொழியக் காக்கையை யாரேனும் கொஞ்சமாவது மதித்தார்களா? காக்கையைப் புகழ்ந்த ஜந்து அந்த நரி ஒன்றுதான். அந்த வஞ்சப் புகழ்ச்சியின் விளைவாகக் காக்கை தான் சந்தைக் கடையில் திருடிய வடையை இழக்க நேரிட்டது. இவ்வாறு ஒருவராலும் மதிக்கப்படாமல் அதி கேவலமாக நடத்திவரும் இந்த ஹீனமான வாழ்க்கையைக் காக்கை எவ்வளவு காலம் ஸஹித்துக்கொண்டிருக்கும்! பொறுமைக்கும் எல்லை உண்டல்லவா! தன் தலைவிதியை நொந்துகொண்டு ஒரு நாள் மனவேதனை ஸஹிக்காமல் தன் துக்கத்தை மறப்பதற்காக ஆகாயத்தில் பறந்துகொண்டே சென்றது. சந்திர மண்டலத்திற்குச் செல்லும் மார்க்கத்தில் பாதி தூரம் தாண்டிவிட்டது. இவ்வாறு பறந்துகொண்டே செல்வோம். கடைசியில் இறக்கை ஒடிந்து கீழே விழுந்து பிராணனை விட்டால் இந்த ஈன ஜன்மம் அத்துடன் முடிவடையும் அல்லவா! என்று விரக்தியடைந்து இன்னும் பறந்துகொண்டே சென்றது.

ஆகாய மண்டலத்தில் சஞ்சரித்துக்கொண்டிருந்த காக்கையின் முன் இரண்டு மகா புருஷர்கள் தோன்றினார்கள். அவர்களுக்குக் காக்கையைப்போல் இறக்கைகள் இல்லை. ஆனால், காக்கைக்கு ஸமத்வமாக ஆகாயத்தில் ஸஞ்சாரம் செய்துகொண்டே வந்தார்கள். "இந்த பூலோகப் பக்ஷி ஆகாய மண்டலத்தில் இதுபரியந்தம் பறந்து வர வேண்டிய முகாந்திரமென்ன?" என்று அந்த மகா புருஷர்கள் ஸந்தேஹித்துக் காக்கையைப் பிரச்னம் பண்ணினார்கள். "ஹே காகமே! நீ உன் லோகத்தைவிட்டு மகத்தான தூரம் பறந்துவரக் காரணம் என்ன? உன் பிராணனின்மீது உனக்குப் பாசம் இல்லையா! நீ எந்த விதமாகத் திரும்பிச் செல்லப் போகிறாய்?" என்று விசாரித்தார்கள். இந்த மகா புருஷர்களின் தேஜஸைப் பார்த்து அதிசயித்துக் காக்கை, "தேவர்களே! பூலோக வாசிகளான மனுஷ்யர்கள் என்னை மிகவும் அலக்ஷியம் செய்கிறார்கள். ஒருவருக்கும் என்னைக் கண்டால் பிடிப்பதில்லை. என் இனத்தைச் சேர்ந்த மயில், கிளி, அன்னம் முதலிய பக்ஷி ஜாலங்களை மாத்திரம் வாயாரப் புகழ்ந்து தங்கள் உள்ளக்காதலிகளோடு உவமைப் படுத்துகிறார்கள். ஏன்! எனக்கு ஸாக்ஷாத் தசராத்ரக்ஞாதியாகிற குயிலின்



குரலை வானளாவப் புகழ்கிறார்கள். கவிதைகளில் அதன் பெயரைப் புகுத்தாத கவிஞன் அரிது. காக்கைகளாகிற நாங்கள் என்ன பாபம் செய்தோம்? நாங்கள் இவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்டதன் காரணம் என்ன? தேஜஸ்விகளே! நான்

உஜ்ஜீவிக்கக்கூடிய மார்க்கத்தைச் சொல்லமாட்டீர்களா?'' என்று விக்ஞாபனம் செய்துகொண்டது.

அந்த தேவர்கள் "பக்ஷிகளின் திலகமே! கவலை வேண்டாம்! நாங்களும் உன்னைப்

போல் பூலோக வாசிகளால் மிகவும் அவமதிக்கப்பட்டு வந்தோம். நாங்கள் யார் தெரியுமா? திதிகளின் நடு நாயக ரத்னங்களாகப் பிரகாசிக்கும் அஷ்டமி, நவமிகள் நாங்கள்தான். எந்த சுபகாரியத்திற்கும் பூலோக வாசிகள் எங்களை வர்ஜித்து வந்தார்கள். நாங்கள் என்ன கேவலமா? இதைக் குறித்து நாங்கள் இருவரும் க்ஷீரஸாகர சயனனாகிற ஸாக்ஷாத் ஸ்ரீமந் நாராயணனிடம் முறையிட்டோம். ஸர்வ லோக சரண்யன் எங்களுக்கு அபயப் பிரதானம் கொடுத்து 'ஹே' அஷ்டமி நவமிகளே இனி உங்களுக்கு வியாகூலம் வேண்டாம். ஸ்ரீராமாவதாரத்தில் நவமியிலும் ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்தில் அஷ்டமியிலும் நாம் பூலோகத்தில் அவதரித்து உங்கள் இருவரையும் கௌரவிக்கப் போகிறோம். வருஷத்திற்கொருமுறை பூலோக மனுஷ்யர்கள் உங்கள் இரண்டு திதிகளையும் விசேஷமாகக் கொண்டாடி ஸ்ரீ ராமநவமி, ஸ்ரீ கோகுலாஷ்டமி என்ற இரண்டு மகோத்ஸவங்களையும் நடத்தி, உங்கள் இருவரையும் சிறப்பிப்பார்களாக!'' என்று வாக்களித்து, அந்த விதமே ஸ்ரீசேஷ சயனன் தன் வாக்கை நிறைவேற்றினார். இன்றைக்கும் எங்கள் திதிகளில் பிரதி வருஷமும் ஏராளமான ஸங்கீதக் கச்சேரிகள் அகண்ட பஜனைகள் இவைகள் எல்லாம் நடத்தபடுகின்றன. ஆகவே, பக்ஷி ரத்னமே! நீ அந்த அனாதை ரக்ஷகனும் ஆதிமத்யாந்த ரஹிதனுமான ஸ்ரீ மகாவிஷ்ணுவை ஆச்ரயித்தாயானால், உன் வியாகூலம் நீங்கும். உனக்கு ஸர்வ மங்களமும் உண்டாகும்!'' என்று ஆசிர்வதித்தார்கள்.

காக்கை, "ஹே! திதி சிரேஷ்டர்களே! அந்த நாராயணனிடம் நான் எவ்வாறு சொல்வேன்? நீங்கள் கூறிய ராமாவதாரத்தில் நான் அவரிடம் பட்ட பாடு போதாதா! 14 லோகங்களையும் சுற்றிக் கடைசியில் ஒரு நேத்ரத்தைப் பறிகொடுத்தேனே!'' என்றது.

இவ்வாறு ஸம்பாஷணம் செய்துகொண்டே அந்தக் காக்கையும் இரு திதிகளும் சனி மண்டலம்வரையில் வந்துவிட்டார்கள். சனி பகவான் "அஷ்டமி நவமிகளே! இது என்ன நூதன ஸ்நேகம்! இந்த ஸுந்தரமான பக்ஷி உங்களுடன் வரும் காரணம் என்ன?'' என்று விசாரித்தார். அஷ்டமி நவமிகள் அந்தக் காக்கையின் தௌர்ப்பாக்யமான வாழ்க்கையைப்பற்றி சனி பகவானுக்கு எடுத்துரைத்து, அது கடைத்தேறுவதற்காகத் தாங்கள் சொல்லிக் கொடுத்த மார்க்கத்தையும் தெரிவித்தார்கள். காக்கை "இதுதான் சமயம்'' என்று நினைத்து, "நவக்ருஹ சிரேஷ்டா! நான் நாராயண மூர்த்தியிடம் போகமாட்டேன். தாங்கள்தான் எனக்கு அபயம் கொடுக்கவேண்டும். தாங்கள் என்னை ரக்ஷிக்க மறுத்தால், தங்கள் காலடியில் விழுந்து நான் பிராணத்தியாகம் செய்துகொள்வேன்'' என்றது. சனி பகவானுக்கு இந்தப் பக்ஷியின் மேல் கிருபை ஏற்பட்டது.

காக்கைக்கு உடனே அபயம் கொடுத்தார்: "ஹே! காகமே! இன்று முதல் நீ எனக்கு வாஹனமாவாய். என்னைப் பூசிப்பவர் உன்னையும் சேர்த்துப் பூஜிப்பார்களாக. உன்னைக் கொஞ்சமும் பிடிக்காத பூலோக மனிதர்கள், இனி அனவரதமும் உன்னைப் பிடிக்கக் கடவார்களாக. "காக்காய் பிடித்தல்'' என்ற கர்மாவின் மூலம் உன் பெயர் கல்லும் காவேரியும் புல்லும் பூமியும் உள்ளளவும் அழியாமல் இருக்கக்கடவது! காக்காய் பிடிப்பவர்கள் ஏதேஷ்டமான தொழில் அபிவிருத்தியையும் உத்யோக அபிவிருத்தியையும் அடைந்து, மேலும் மேலும் காக்காய் பிடித்து ஸகல ஸௌபாக்யங்களையும் அடைந்து, அதி வியாபகர்களாகப் பிரகாசிப்பார்களாக. காக்காய் பிடிக்காத மனுஷ்யர்கள் அதி மேதைகளாக இருந்தாலும் வித்யாவகஸ்பதிகளாய் இருந்தாலும் குடத்திலேற்றிய விளக்கைப்போல் மறைந்திருந்து க்ஷீணித்து நசித்துப் போவார்களாக! இனி நீ உன் துக்கத்தைத் துறந்துவிட்டு, அதி உத்ஸாஹமாக

இருக்கலாம்'' என்று அனுக்கிரஹம் பண்ணினார் சனி பகவான்.

சனி பகவானின் சாபப் பிரகாரம் காக்காய் பிடிக்கும் தொழிலானது மனிதர்கள்மேல்

சுமத்தப்பட்டு, வெகு பயபக்தியுடன் நடத்தப்பட்டுவருகிறது. பூமண்டலத்தில் பொருளாதாரப் படிக்கட்டுகளில் கீழ்ப் படியிலிருப்பவன் மேல் படியிலிருப்பவனைக் காக்காய் பிடிக்காத வரையில், அவனுக்கு முன்னேற்றம் "ஜட்கா" வண்டியில் தான். காரியம் கைகூட வேண்டுமானால், காக்காய் பிடிப்பதே கைகண்ட மார்க்கம். வியாபாரிகளானால் தங்கள் சரக்கை அதிலாபத்துடன் விற்பதற்காக அதை வாங்கக் கூடிய வியாபாரிகளின் ஏஜண்டுகளையும் பிரதிநிதிகளையும் காக்காய் பிடிக்கவேண்டும். மிராசுதார்கள் வரிவசூல் அதிகாரிகளையும் மராமத்து இலாகா அதிகாரிகளையும் காக்காய் பிடிக்கவேண்டும். அந்த அதிகாரிகளோ தமக்கு மேலுள்ள அதிகாரிகளைக் காக்காய் பிடிக்கவேண்டும். முன்னுக்கு வர விரும்பும் இளம் பாடகர்கள் பத்ரிகாசிரியர்களையும் ஸபைக் காரியதரிசிகளையும் ஸங்கீத விமர்சகர்களையும் காக்காய் பிடிக்கவேண்டும். பத்திரிகாசிரியர்கள் காகிதம் கிடைக்கக்கூடிய இடங்களாகப் பார்த்து, இந்தத் தொழிலைப் பிரயோகிக்கவேண்டும். யாரை விட்டது இந்த சனீஸ்வர சாபம்!

—❀—

ஞாபகப்படுத்துகிறோம்

★

"சுதேசமித்திரன்" வாரப் பதிப்பில் வெளிவரும் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் இவற்றில் வரும் பெயர்கள், சம்பவங்கள் முதலியன எவரையும் குறிப்பிடுவன அல்ல. அவை முற்றிலும் கற்பனையே.

—ஆசிரியர்.

லண்டனில் நடக்கும் ஒலிம்பிக் நீச்சல் பந்தயத்துக்கு அமெரிக்க பிரதிநிதிகள்.

விண்ஸரிலிருந்து லண்டன்வரை ஓடும் பந்தயத்தில் முதல் பரிசு பெற்ற ஹேரால்டனை மஹாராணியே நேரில் பாராட்டினார்.



அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கு ஜனநாயக கட்சி அபேட்சகராக பொறுக்கப்பட்டிருக்கும் ஜனாதிபதி ட்ருமன் முகமலர்ச்சியுடன் நிற்கிறார். அவர் பக்கத்தில் நிற்பது உப ஜனாதிபதி பதவிக்கு தேர்தலில் நிற்கப்போகும் ஸெனட்டர் பார்க்லி.

லண்டன் ஒலிம்பிக் பந்தயங்கள் 30-ந்தேதியிலிருந்து ஆரம்பமாயின. பந்தயங்கள் நடக்கும் ஸ்தலமே படத்தின் மத்தியிலிருப்பது.

எங்கள் ஊரில் நடைபெற்ற ஒரு உறவினரின் வீட்டுக் கல்யாணத்துக்கு என் மாமன் மகள் கல்யாணியும், என் அத்தை மகள் சுந்தரியும் சென்னையிலிருந்து வந்திருந்தனர். அவர்களை நான் சந்தித்து பல வருடங்கள் ஆகிவிட்டன. அவ்விருவரும் என்னை தனித்தனியே நான் அடுத்த தடவை சென்னைக்கு விஜயம் செய்யும்பொழுது தங்கள் வீட்டுக்கு வரும்படி அன்புடன் அழைத்தனர். நானும் அவர்களது அழைப்புகளை ஏற்றுக் கொண்டேன்.

கல்யாணி ஆங்கிலப் படிப்பில் திளைத்து பி. ஏ. பட்டம் பெற்றவள். சென்னை பிரபல வக்கீல் பட்டாபிராமனின் வாழ்க்கைத் துணைவி. நவநாகரீகத்தில் தேர்ந்த நாரீமணி. “லேடீஸ் கிளப்’ காரியதரிசி. ஸ்திரீ சுதந்திரத்திற்கும், பெண் முன்னேற்றத்துக்கும் சலியாது உழைப்பவள். பழைய தர்ம சாஸ்திரங்களில் ஸ்திரீகளை இழிவுபடுத்தியிருக்கும்கட்டங்களை அழுத்தம் திருத்தமாய் கண்டிப்பவள். எந்தத் துறையிலும் பெண், ஆணுக்கு நிகராவாள் என்ற கொள்கையை பத்திரிகையிலும் பிரசங்க மேடைமீதும் பிரசாரம் செய்பவள், இதுவிஷயமாய் அவளால் எழுதப்படும் கட்டுரைகளும் ஆற்றப்படும் சொற்பொழிவுகளும் காரசாரமாகவே இருக்கும்.

சுந்தரி கல்யாணிக்கு எல்லா அம்சங்களிலும் எதிரிடை என்றே சொல்லலாம். அவள் ஆங்கிலப் படிப்புப் படிக்கவில்லை. தமிழ் எழுதப் படிக்கத் தெரியும்.ஏதோ கொஞ்சம் சம்ஸ்கிருதமும் தெரியும். அவளது பெற்றோர் வைதிகமான ஒழுக்கமுடையவர்கள். பழைய பழக்க வழக்கங்களில் அதிகமான பற்றுதலுடைய அவர்கள், தங்கள் பெண்ணை அப்படியே பழக்கினதில் அதிசயம் ஒன்றும் இல்லை. அவள் கணவன் கோவிந்தராஜன் ரெவினியூ இலாகாவில் பல இடங்களில் உத்தியோகம் வகித்து விட்டு இப்பொழுது சென்னையிலேயே அந்த இலாகாவின் தலைமை காரியாலயத்தில் முன்னூறு ரூபாய் சம்பளமுள்ள வேலையை வகித்து வருகிறார். அவரும் பெரிய வைதிகப்பிச்சு. சுந்தரியும் அவருக்கு ஏற்ற பழைய கட்டுப்பெட்டி.

‘தற்போது நிலவியுள்ள புது நாகரீகத்தை சுந்தரி அடியோடு வெறுத்தாள் என்றே சொல்ல வேண்டும். “என்ன இங்கிலீஷ் படிப்பு வேண்டியிருக்கிறது. இரண்டு வார்த்தை கற்றுக்கொண்டு தலைகால் புரியாமல் துள்ளுகிறதுகள். அந்தக் காலத்தில் நம்முடைய பாட்டிமார் என்ன கீழ்சாடையாய் இருந்தார்கள்? ஸ்திரீகள் முன்னேற்றமாம்! புருஷனுக்கு எதிரிடையாய் நின்றுகொண்டு சதா அவனோடு சண்டை போடுவதுதான் பெண்ணுக்கு லக்ஷணமா? அப்படித்தான் சீதையும், சாவித்திரியும் இருந்தார்களோ? பதிவிரதா தர்மம்தான் பெண்ணுக்கு ஏற்பட்ட தருமம். அதை கடைப்பிடிப்பவளே உத்தமமான ஸ்திரீ” என்று அவள் மூச்சு விடாமல் பேசுவாள். கல்யாணியைக் கண்டால், அவளுக்குக் கட்டோடு பிடிக்காது. “பெண்ணா அவள்! பெண் ரூபத்திலுள்ள ஆணன்றோ அவள்? அடங்காப் பிடாரி! பாவம். அவள் கணவர் அவளுடன் எப்படித்தான் வாழ்க்கை நடத்துகிறாரோ?” என்று அனுதாபப்படுவாள்.

கல்யாணிக்கும் சுந்தரியிடம் இகழ்ச்சியும் வெறுப்புமேயன்றி வேறல்ல. சுந்தரியைப்பற்றிப் பேசும் சமயங்களிலெல்லாம் அவள், “சுத்தக் கர்ணாடகம்! அநாகரிகமான ஜடம்! ஏதானும் படிப்பு இருந்தால்தானே தனது உரிமையை அவள் அறியக் கூடும்? பழைய காலத்து மூட நம்பிக்கைகளையே அவள் உண்மையான சித்தாந்தங்களாக எண்ணுகிறாள். இம்மாதிரி ஸ்திரீகள் நம்முடைய சமூகத்தில் இன்னும் இருந்து வருவதால்தான், நமது முன்னேற்றத்துக்குத் தாமதமும் தடையும் ஏற்படுகின்றன. இவள் போன்றவர்களது மனப்பான்மை அடியோடு மாறினால்தான் நமது நிலைமை அபிவிருத்தியடையாமல் இருக்கிறது” என்று கூறுவாள்.

இவ்விருவரையும்பற்றி நாங்கள் கொண்ட அபிப்பிராயம் இதுதான். சுந்தரி ரொம்பவும் ஸாது. கணவனுக்கு அடங்கி நடப்பவள். ஸீதையையும், ஸாவித்திரியையும் பெண் தெய்வங்களாகக் கொண்டாடும் அவள் வேறெப்படியிருக்க முடியும்? ஆனால் கல்யாணி விஷயம் அப்படியல்ல. பெண் விடுதலைக்காகப் பாடுபடும் அவள் கணவனுடன் போராடாமல் இருக்க முடியுமா? அவள் கணவன் அவளுக்கு அடங்கி நடந்தால் சரி. இல்லையேல் அவள் அவரை பம்பரம்போல் ஆட்டி வைத்து



விடுவாளென்பதில் என்ன சந்தேகம்?

என்னுறவினரான இந்த இரண்டு ஸ்திரீ ரத்தினங்களும் எப்படி வாழ்க்கை நடத்துகின்றனர் என்பதை நான் நேரில் அறிந்துகொள்ளும் சந்தர்ப்பம் வாய்த்தது. திருப்பதி யாத்திரை கிளம்பிய நான், வழியில் சென்னையில் இரண்டு மூன்று நாட்கள் தங்க முடிவுசெய்தேன். முதலில் நான் கல்யாணியின் கிருஹத்துக்குப் போவதென்று தீர்மானித்தேன். என் வருகையை நான் அவளுக்கு முன்னதாகவே தபால் மூலம் அறிவித்தேன்,

ஸ்டேஷனில் எனக்காக மோட்டார் காத்திருந்தது. கல்யாணியின் விருப்பத்தின்படி அவள் கணவர் எனக்கு தன் மோட்டார் வண்டியை அனுப்பியிருந்தார். அதில் ஏறிக்கொண்டு நான் அவளது பங்களாவுக்குச் சென்றேன். மனோரம்மியமான இடம். சுத்தமாயும் அழகாயும் இருந்தது அவர்களது வாசஸ்தலம். ஆயிரம் ஆயிரமாய் சம்பாதிக்கும் கணவனுடன் வாழும் கல்யாணிக்குக் குறை என்பது ஏது? அழகிய தோட்டம், பண்டங்கள், சாமான்கள், நிரம்பியிருந்தன. எந்த வேலையையும் செய்வதற்கு வேலைக்காரர்கள், வேலைக்காரிகள், காத்துக்கொண்டிருந்தனர்.

நான் பங்களாவில் நுழைந்த சமயம் கல்யாணி தன் கணவன் பட்டாபிராமனுக்கு காலைச் சிற்றுண்டியும், காபியும் தன் கையால் கொடுத்துவிட்டு. அவரை முன்கட்டிலுள்ள அவரது ஆபீஸ்அறைக்கு அனுப்பிக் கொண்டிருந்தாள். என்னை அவள் வரவேற்று எனக்கு வேண்டிய தேவைகளைக்கவனித்து என்னை உபசரித்தாள். எனக்கும் சிற்றுண்டியும் காபியும் கொடுத்தபின், அவள் ஹாலில் என்னுடன் க்ஷேமலாபங்களை விசாரித்துக் கொண்டிருந்தாள்.

அப்பொழுது ஆபீஸ் அறையிலிருந்து பட்டாபிராமன் "கல்யாணி" என்று கூப்பிட்டார். "இதோ வந்துவிட்டேன்" என்று அவரிடம் சென்றாள் அவள். சற்று நேரத்துக்குப்பின் அவள் திரும்பியும் என்னிடம் வந்தாள். "பசங்களுக்கு எவ்வளவு பள்ளிக்கூட சம்பளம் கட்டவேண்டும் என்று கேட்டார்" என்றாள். அவளுக்கு மூன்று பிள்ளைகளும், ஒரு பெண்ணுந்தான். பிள்ளைகள் எல்லாரும் பதினைந்து, பதிமூன்று, பத்து என்ற பிராயமுள்ளவர்கள். எல்லாரும் பள்ளிக்கூடத்தில் படிப்பார்கள். பெண்ணுக்கு வயது ஆறு. அவள் வீட்டில் படிக்கிறாள். அவளது குழந்தைகளைப்பற்றி விசாரித்துவிட்டு இதர விஷயங்களைப்பற்றி நான் பேச ஆரம்பித்தபொழுது, மீண்டும் பட்டாபிராமன் தன் மனைவியைக் கூப்பிட்டார். 'எள்ளென்பதற்கு முன்னர் எண்ணெய்' என்பார்போல் கல்யாணி அவரிடம் ஓடினாள். மீண்டும் அவள் என்னிடம் வருவதற்குப் பத்து நிமிடங்கள் பிடித்தன.

"அடுத்தவாரம் எங்கள் வீட்டில் ஒரு விசேஷம். அதற்கு என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றி என்னிடம் பேச அவர் கூப்பிட்டார்" என்றாள் கல்யாணி.

இப்படி அவள் கூறி முடிப்பதற்கு முன் பட்டாபிராமனின் குரல் ஒலித்தது. மறுபடியும் கல்யாணி அவர் அறைக்குச் சென்றாள். "ஏது இது? மனுஷர் மனைவியை ஐந்து நிமிஷம் ஓய்வுடன் இருக்கவிடமாட்டார் போல் இருக்கிறதே" என்று எண்ணினேன்.

இப்படி அவர் பலதடவைகள் கூப்பிட்டுக்கொண்டே இருந்தார். ஒவ்வொரு தடவையும் கல்யாணி முகமலர்ச்சியுடன் அவரிடம் சென்றுவிட்டு வருவதைக் கண்டு, நான் ஆச்சரியமடையாமல் இருக்க முடியுமா? "ஏது கல்யாணி கணவனிடம் இவ்வளவு அடக்க ஒடுக்கமாய் இருக்கிறாளே" என்று எண்ணினேன்.

காலைமணி ஒன்பதரை ஆயிற்று. கல்யாணி ஸ்நான அறைக்குச்

சென்று வெந்நீர் தயாராக இருக்கும்படி செய்துவிட்டு கணவனுக்கு ஸ்நானம் செய்வித்தாள். மடியான உடைகளை அவருக்குக் கொடுத்தாள். பிறகு அவர் பூஜை செய்வதற்கு வேண்டிய சாமக்கிரியைகளை தயாராய் வைத்தாள். பின்பு அவருக்குப் போஜனத்தை தானே பரிமாறினாள். அவர் சாப்பிட்ட பின், அவர் கோர்ட்டுக்குப் புறப்பட தயாரானார். அதற்கு வேண்டிய எல்லாவற்றையும் சித்தம் செய்து, அவரை மோட்டாரில் அனுப்பினாள்.

அவர்கோர்ட்டுக்குச் சென்றபின்னர்தான் அவளுக்கு சற்று ஓய்வு ஏற்பட்டது. என்னைப் பார்த்து அவள் "என் ஆத்துக்காரருக்கு ஒன்றுமே தெரியாது, எல்லாம் நான்தான் செய்யவேண்டும். அவர் கட்டிக்கொள்ளும் துணி முதல் கொண்டு நான்தான் எடுத்துக் கொடுக்கவேண்டும். என் கையால் அவருக்குச் சாப்பாடு பரிமாறினால் தான் அவருக்குத் திருப்தி. சமையல்காரன் இருக்கிறான், வேலைக்காரன், இருக்கிறான் யார் இருந்தால் என்ன? நான் அவர் பக்கத்தில் இல்லாவிட்டால் அவருக்கு ஒரு காரியமும் ஓடாது" என்றாள்.

கல்யாணி வீட்டில் நடக்கவேண்டிய எல்லாவற்றையும் தானே கவனித்தாள். மத்தியானம் அவளது சிநேகிதிகள் சிலர் வந்தனர். அடுத்தவாரம் லேடீஸ் கிளப்பில் ஸ்திரீ சுதந்திர தினம் கொண்டாடவேண்டும் என்று ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டிருந்தது. அதற்காக என்னென்ன ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதைப்பற்றி ஆலோசனை நடந்தது. அதைப் பற்றி முடிவான யோசனையை சாயந்திரம் கிளப்பிலேயே செய்துவிடுவது என்று அவர்கள் தீர்மானித்தார்கள்.

இரவு சமயல்பற்றி கல்யாணி சமயல்காரனுக்கு உத்தரவு கொடுத்துவிட்டு, கிளப்புக்குப் புறப்பட்டாள். சரியாய் எட்டுமணி அடிப்பதற்குள் அவள் திரும்பிவிட்டாள்.

அவளை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த நான், "ஸ்திரீ ஸ்வதந்திர தினவிழா ஏற்பாட்டைப்பற்றி முடிவுக்கு வந்தாயிற்றா?" என்று கேட்டேன்.

"கல்யாணி, இல்லை. விஷயம் நாளைக்குஒத்திப்போட்டிருக்கிறது. மணி எட்டாய்விட்டது. என்று நான் 'மீட்டிங்கை' கலைத்துவிட்டு வந்துவிட்டேன், அவர் வந்துவிட்டாரா? இல்லையே, நல்லவேளை." என்று கூறிவிட்டு "நான் இல்லாவிட்டால் அவர் திண்டாடுவார். அதனால்தான் நான் அவசரமாய் வந்தேன்" என்றாள்.

இப்படி அவள் சொல்லிக் கொண்டிருக்கையில் பட்டாபிராமன் வந்துவிட்டார். அதன் பின்னர் அவளுக்கு ஓய்வும் இல்லை, ஒழிவும் இல்லை. அவரது ஒவ்வொரு சிறு தேவையையும் அவளே கவனித்து அவருக்கு சிச்ருஷை செய்யலானாள்.

ஸ்திரீகளது உரிமையும் பெண் சுதந்திரத்தையும் பற்றிப் பேசும் கல்யாணியின் குடும்ப வாழ்க்கை எனக்கு ஒரு அதிசயமாகவே இருந்தது. அவள் பேச்சும் லட்சியமும் எப்படியிருப்பினும், நடைமுறையில் அவள் பர்த்தாவுக்கேற்ற பதிவிரதையாயும், கொழுனனைப் பேணும் குலமகளாயும் என் கண்ணுக்கு விளங்கினாள்.

அவளிடம் விடைபெற்றுக் கொண்டு நான் அடுத்த நாள் காலை சுந்தரியின் கிருகத்துக்குக் கிளம்பினேன்.

சுந்தரியின் வீடு திருவல்லிக்கேணியில் உள்ளது. அதை நான் அடையும்பொழுது காலை மணி எட்டுக்குமேல் ஆகிவிட்டது. நான் உள்ளே சென்றேன். சுந்தரி ஒரு விசுப்பலகையில் படுத்துக்கொண்டிருந்தாள். அவள் வாய் ஏதோ முணு முணுத்துக் கொண்டிருந்தது. அவள் முகத்தில் கோபத்தின் சின்னம் இருந்தது.

என்னைப்பார்த்ததும், அவள் எழுந்து சிரிப்பை முகத்தில் வரவழைத்துக்கொண்டு "வா!" என்று எனக்கு முகமன் கூறினாள்.



நான் "சுந்தரி உனக்கு என்ன உடம்பு?" என்றேன்.

அப்பொழுது உள்கட்டிலிருந்து சுந்தரியின் கணவர் வந்தார். கையில் காப்பி பாத்திரத்துடன் அவரைப் பார்த்தவுடன் எனக்குச் சங்கதி புரிந்துவிட்டது. "ஓகோ! இன்று உங்களுக்கு ஸ்பெஷல் டியூடியா?'' என்றேன்.

அவர் சலிப்புடன் சிரித்துக் கொண்டே "ஸ்பெஷல் டியூடியா? அநேகமாய் தினமும் எனக்கு இப்படித்தான். இரு. உனக்கும் காபி கொண்டுவருகிறேன்'' என்று உள்ளே சென்றார்.

"ஏன் சுந்தரி! உனக்கு என்ன ஜுரமா?" என்று கேட்டேன்.

சுந்தரி, "இல்லை ஜலதோஷம்! இன்று ஸ்னானம்செய்யவேண்டாம் என்று நினைத்தேன். ஸ்னானம செய்யாமல் நான் சமயல் அறைக்குப் போகமாட்டேன். ஜலதோஷத்துடன் ஸ்னானம் செய்துவிட்டு ஜுரம் வந்துவிட்டால் அப்புறம் எனக்கும் கஷ்டம் அவருக்கும் கஷ்டம். அதற்காகத்தான் அடுப்புக் காரியத்தை இன்று அவரை கவனிக்கச்சொன்னேன். அதற்காக அவருக்கு அவ்வளவு கோபம்'' என்று சுந்தரி சபித்துக்கொண்டாள்.

இதற்குள் எங்களுக்கு காப்பி பரிமாறப்பட்டது. "எப்பொழுது பார்த்தாலும் இவளுக்கு ஏதாவது வியாதிதான். நான்தான் எல்லாவற்றையும் கவனிக்க வேண்டியிருக்கிறது. என் தலைவிதி'' என்றார் அவர்.

"என்னமோ என் கஷ்டகாலம் இப்படியெல்லாம் நான் உங்களிடம் வசவு கேட்கிறேன். என் ஆயுளும் முடியாமல் இருக்கிறது'' என்று வருந்தினாள் சுந்தரி. அப்படியே விசுப்பலகையில் படுத்துவிட்டாள்.

அவள் கணவன் சமையல் வேலையில் முனைந்தவராய் உள்ளே சென்றார். இந்த நிலைமையில் நான் அங்கிருப்பது சரியல்ல என்று எண்ணி வெளியே கிளம்ப எண்ணினேன். ஆனால் கணவனும், மனைவியும் நான் அங்கேயே அன்று இருக்கவேண்டும் என்று வற்புறுத்தவே, அன்றைய தினத்தை அங்கேயே கழித்தேன். சுந்தரி ஒரு துரும்பைக்கூட எடுத்துப்போடவில்லை. எல்லா வேலையையும் அவள் கணவனே செய்து முடித்தார். இடையிடையே சதிபதிகளுக்கு வாக்குவாதங்கள், சச்சரவுகள். அன்று அவர் ஆபீசுக்குப் போகவில்லை. அவர் தன் மனக்கசப்பையெல்லாம் வெளியிட்டார். சுந்தரியும் தன் குறைகளையெல்லாம் வாய்விட்டுக் கொட்டினாள்.

"தெய்வமேயென்று வாயில்லாப் பூச்சியாய் இருக்கிறேனல்லவா? அதற்காகத்தான் இப்படி நீங்கள் என்னைப் பிடுங்குகிறீர்கள். உங்களுக்கு ஒரு அடங்காப்பிடாரி ஆம்படையாளாய் வாய்த்திருந்தால் அப்பொழுது தெரியும் உங்கள் பாடு. கல்யாணியைப்போல் வாய் கொழுப்புள்ளவள் உங்களைக் கல்யாணம் செய்துகொள்ளாமல் போய்விட்டாளே! அப்பொழுது தெரியும் உங்கள் திண்டாட்டம்.'' என்று சுந்தரி அங்கலாய்த்தாள்.



பிரிட்டிஷ் கடற்படை இவ்விதம் அடிக்கடி நார்வே பிராந்தியங்களில் சுற்றச் செல்கின்றதாம்



மெய் விளங்கிய அன்பர்கள்

பெரிய புராணப் பூங்கோயிலில்

13

தியாகத்தின் தெய்வக்கூறு

★

பி. ஸ்ரீ.

தில்லைவாழ் அந்தணர்களின் சிவ பக்திச் செம்மையைப் பேசிய சேக்கிழார் பெருமான், அதே வாயால் அதே தில்லை மூதூரில் குயவர் குலத்திலே தோன்றிப் பிரசித்தி பெற்றிருந்த பக்தர் பெருமையையும் பேச விரும்புகிறார்.

வேதியர் தில்லை மூதூர் [தார்
வேட்கோவர் குலத்து வந்

[தில்லை மூதூர்-பழைய ஊராகிய சிதம்பரம். வேட்கோவர்-குயவர்.]

என்று இந்த நாயனாரைத் தொடக்கத்திலேயே குறிப்பிடுகிறார்:

நடராஜ பக்தி

இந்த நாயனாரின் நடராஜ பக்தியைப் பின் வருமாறு குறிப்பிடுகிறார்:

ஆதியும் முடிவும் இல்லா
அற்புதத் தனிக்கூத் தாடும்
நாதனார் கழல்கள் வாழ்த்தி
வழிபடும் நலத்தில் மிக்கார்.
[கழல்கள்-திருவடிகள்.]

முதலும் முடிவும் இல்லாமல் ஓர் அற்புதத் தனிக்கூத்து எங்கும் நிகழ்கிறதை விஞ்ஞானமும் இன்று உணர்ந்து வருகிறது. தத்துவம் மூச்சுத் திணறும் பனி மூடிய ஞான சிகரங்களில் இக் கூத்தைக் காட்ட முயல்கிறது; யோகம் காண முயல்கிறது, அணுக முயல்கிறது, பக்தியோ இதே கூத்தை,

குனித்த புருவமும், கொவ்வைச்
செவ்வாயும், குமிண் சிரிப்பும்,
பனித்த சடையும், பவளம்போல்
மேனியில் பால்வெண் ணீறும்,
இனித்த முடைய எடுத்தபொற்
பாதமும்,—

ஆகக் கலைவடிவமாய்க் கண்டு வழிபடுகிறது; சரணாகதி செய்கிறது. இத்தகைய பக்தி-வழிபாட்டில் திருநீலகண்டநாயனார் என்ற குயவனாரும் ஈடுபட்டிருந்தார்.

ஒழுக்கத்தின் அடிப்படை

சிவ பக்தி-வாழ்வே இவரை உண்மையிலும், அறத்திலும் ஊன்றி நிற்கச் செய்தது. இச் சிவபக்தி அடியார்-பக்தியாக மலர்ச்சி பெற்றுச் சத்தியம் தழுவிய தர்ம வாழ்வாகக் கனிந்தது.

பொய்கடிந்(து)
அறத்தின் வாழ்வார்,
புனற்சடை முடியார்க்(கு)
அன்பர்,
மெய்யடி யார்கட்(கு) ஆன
பணிசெயும் விருப்பில்
நின்றார்.
[கடிந்து-நீக்கி.]

இத்தொண்டர் துறவியல்ல, இல்லறத்தில் இருந்தவர். 'அறம் எனப்பட்டதே இல்வாழ்க்கை' என்ற தமிழ் மறைக்கு இணங்க வாழ்க்கை நடத்தியவர். பொய்சொல்லி அறங்கொன்றுவது பொருள் தேடிப் போக வாழ்க்கை வாழ விரும்பவில்லை. அருட்செல்வமே 'மெய்த்திரு' என்றும், அல்லாத வழியில் பெருகும் செல்வம் 'பொய்த்திரு' என்றும் நம்பினார். ஆகவே, இவர் சட்டி பானை செய்யும் தம் தொழிலிலேயே குடும்பச் செலவுக்கு வேண்டிய பொருளைத் தேடிக்கொண்டார். அடியவர்களுக்கும் அவசியமான திருஓடு (பிட்சைக்கு உரிய பாத்திரம்) முதலியவற்றை இலவசமாக உதவி வந்தார். இவரது வாழ்க்கையை,

வையகம் போற்றும் செய்கை
மனையறம் புரிந்து வாழ்வார்:
சைவமெய்த் திருவின் சார்வே
பொருளெனச் சாரும் நீரார்.

[நீரார்—குணத்தை உடையவர்.]

இளமை வெள்ளம்

இத் தொண்டரும் இளமையில், இளமை வெள்ளம் தடுப்பவர் யாவரே?' என்கிறபடி இன்பத்துறையில் ஈடுபட்டிருந்தார். 'இளமையிற் சிறந்த வளமையும் இல்லை என்கிறபடி, அந்த வளமையில் உள்ளம் இன்பத்துறையில் இறங்கியது இயற்கையென்பதைச் சேக்கிழார் பெருமான்,

இளமைமீ(து) ஊர இன்பத்
துறையினில் எளியர் ஆனார்

என்று குறிப்பிடுவதைப் பாருங்கள். 'இளமை மீது ஊர' என்பதில், காளைப்பருவம் வந்துவிட்டது என்பது குறிப்பு.

நீலகண்டம்-உட்பொருள்

சிவபெருமான் நஞ்சை உண்டு உலகத்தைக் காப்பாற்றினார் அல்லவா? சிவபெருமான் நஞ்சை உண்டதால்தானே தேவர்கள் அமுதம் உண்டு, தங்கள் தெய்வ வாழ்வுவாழ்ந்தார்கள்; திருமாலும் கடைந்த அமுதத்தை வழங்கிய வள்ளல் என்று பேர்பெற்றார்? இத்தகைய மகத்தான லோகோபகாரத் தியாகத்திற்கு நீலகண்ட மூர்த்தியின் அந்த நீலகண்டம் ஓர் அறிகுறி. அந்தக் கழுத்தல்லவா நஞ்சை உள்ளே போகாமல் தடுத்து விட்டது? அன்பர்களுடைய தவமே அப்படி நின்று தடுத்ததுபோல் அந்தக் கொடிய விஷயத்தைத் தடுத்துத் தரித்துக் கொண்டு, அதனால் நீலம் பாய்ந்து காண்கிறதாம் நீலகண்டம். ஆகவே அந்த நீலகண்டத்தினிடம் இந்தச் சிவபக்தருக்கு அலாதி அன்பு. 'திரு நீலகண்டம், திரு நீலகண்டம்' என்று அதை ஒரு மந்திரமாகச் சொல்லிவந்தார். அதனால்தான் இவருக்குத் திருநீலகண்ட நாயனார் என்று பெயர் வழங்கலாயிற்று. மற்றப்படி இவருக்குப் பெற்றோர் இட்ட பிள்ளைப் பெயரும் நமக்குத் தெரியாது.

இல்லத்திலேயே துறவு

ஒரு சமயம் இப்பெரியாரிடம் ஒரு தவறு கண்டு இவர் மனைவியார்,

'தீண்டுவீர் ஆயின் எம்மைத்,

திருநீல கண்டம்!' என்றார்.

அன்று முதல் நாயனார் 'என் மனைவியாரை மனத்திலும் தீண்டேன்!' என்று சபதம் செய்தார், 'எம்மைத்' தீண்டுவீராயின், திருநீலகண்டம்!' என்று அம்மையார் பன்மையாகச் சொன்னதால், திருநீலகண்டர், 'இனி இவள் இனமாகிய மற்ற மாதர்களையும் உள்ளத்திலும் தீண்டேன்' என்றும் சூளுரை சொல்லிவிட்டார்.

இப்படி இல்லாளைத் துறந்தும், இல்லாள் இவரைத் துறந்தும், இருவரும் இல்லத்தையாவது இல்லறப் பணிகளையாவது துறந்து ஓடவில்லை. இப்படிப் பல ஆண்டுகள் கழிந்தன. இளமை நீங்கி முதுமையும் வந்துவிட்டது. சிவபக்தி சிவனடியார் பக்தி மட்டும் தளர்ச்சி பெறாது மேன் மேலும் வளர்ச்சிபெற்று வந்தது.

சிவயோகி

இந்நிலையில், ஒரு நாள் ஒருவர் இத்தொண்டர் வீடு நோக்கிப் பிட்சை ஓடும் கையுமாக வந்தார். கௌபீனம் மட்டும் தரித்தவராய் முழு வெண்ணீறு பூசிய மேனியுடன் இளநகை யரும்பிய வண்ணம் வந்து சேர்ந்தார். அவருடைய தலைரோமம் சிலிர்த்துச் சுருண்டு கீழ் விழாமல் தூறாக இருந்தது.

கூர்ந்து பார்த்தால், 'அந்தத் தலை நெருப்புத் தளிர்த்தது போன்ற சடையை மறைந்திருக்கிறதோ?' என்று தோன்றும். 'அந்தப் புன்சிரிப்பிலும் வெண்ணிலவுதான் வீசுகிறதோ?' என்று தோன்றும். ஆனால் அந்த ஆராய்ச்சியெல்லாம் திருநீலகண்டருக்குத் தேவையா இப்பொழுது? சிவயோகியானால் என்ன, சிவனானால் என்ன? 'நடமாடும்

கோயிலுக்குப் பணி செய்வது போதாதா?

யோகியும் பக்தரும்

‘இத்திருவோட்டைச் சேமித்து வைத்து நான் கேட்கும்போது கொடுப்பாயாக’ என்று சிவயோகி சிவபக்தரை வேண்டிக் கொண்டார். பிறகு யோகியார் தம்முடைய அம்பலத்திற்கே போய் விட்டார். இப்படிக் குயவனாருக்கு ஆடிய தனிக்கூத்து, மறுபடியும் எல்லாருக்கும் பொதுவான அற்புதத் தனிக் கூத்தா’கிவிட்டது, தில்லை மூதூர்ப் பொற்சபையிலே!

சோதனை

பன்னெடு நாள் கழிந்தபின் சிவயோகியார் மறுபடியும் திருநீலகண்டரின் இல்லத்திற்கு வந்தார். ‘முன்னே தந்த ஓட்டைக் கொண்டுவா’ என்றார்.

பொன்னினும் மணியினும்
போற்ற வேண்டுவ(து)

என்று அப்போதே சொல்லி வைத்திருந்தார். ஆனால் திருவோட்டைக் காணவில்லை. தேடினார், திகைத்தார். மனைவியாரைக் கேட்டார். மற்றவர்களையும் கேட்டுப் பார்த்தார்.

சிவயோகியாரோ, ‘ஏன் இவ்வளவு நேரம்?’ என்று அவசரப்படுத்தினார். நாயனார் பழைய ஓட்டினும் சிறந்த புதிய ஓடு வனைந்து தருவதாகச் சொன்னார். ‘அன்று நீ சாப்பிட்டுவிட்ட அந்தப் பட்சணம்தான் வேணும்!’ என்று முரண்டு பிடிக்கும் குழந்தைபோல் யோகியார், ‘பொன்னோடும் வேண்டேன்: நீ தொலைத்துவிட்ட அந்த மண்ணோடுதான் வேண்டும்!’ என்று பிடிவாதம் செய்தார்.

கடைசியாக, ‘நீ உன் மனைவி கையைப் பிடித்துக்கொண்டு குளத்தில் மூழ்கி, “திருவோடு கெட்டுப் போய் விட்டது என்று சத்தியம் செய்” என்றார் யோகியார். தம்முடைய பழைய சபதம் குறுக்கே நின்றதால் இவரால் அப்படிச் செய்ய முடியவில்லை. இந்த வழக்கைத் தில்லைவாழ் அந்தணர்கள் விசாரித்தார்கள். சிவயோகியாரின் விருப்பத்திற்கு இணங்க மனைவியைப் பற்றிச் சத்தியம் செய்து கொடுப்பதே முறை என்று தீர்ப்பு அளிக்கப்பட்டது.

குளத்தை அடைந்து மூங்கில்-தண்டின் ஒரு முனையை மனைவியார் பற்ற, மற்றொரு முனையைத் தாம் பற்றி மூழ்கலானார் திருநீலகண்டர். யோகியோ, ‘உன் மனைவி கையைப்பற்றி மூழ்கு’ என்று வற்புறுத்தினார். அதற்குள் அங்கே ஒரு பெருங்கூட்டம் கூடிவிட்டது. அந்த மகாஜனங்கள் அறியத் தமக்கும் மனைவியாருக்கும் இடையே நிகழ்ந்த இரகசியத்தைப் பரசியமாக்கித் திருநீலகண்டர் குளத்தில் மூழ்கிக் கரையேறினார். மனைவியாரும் நீரில் மூழ்கிக் கரையேறினார்.

என்ன அதிசயம்! இருவரும் மூப்பு நீங்கி மீண்டும் இளமை பெற்றுவிட்டார்கள். அதிசயத்தின்மேல் அதிசயம்: யோகியாரைக்காணவில்லை; அம்மையப்பரின் தெய்வக்காட்சி தோன்றியது! அத்தொண்டர்களின் இந்திரிய ஜயத்தை (புலனடக்கத்தை) அம்மையப்பர் போற்றினாராம்.

நடராஜாவின் நீலகண்டம், தியாகத்திற்கு மூலமந்திரமாய்த் தொண்டர்களுக்கு வழிகாட்ட வல்லது என்பது இவ்வரலாற்றின் தனிப்பொருள்.





பண்டிதர் சென்னை கடற்படையைப் பார்வையிடுகிறார். (கீழ்) சென்னை விமானக்கூடத்தில் பண்டித நேரு: சென்னை பிரதம மந்திரியும், கவர்னரும் என்ன பேசுகிறார்களென்று கேட்கிறாரா என்ன ?

மன்னன் ஆண்ட மதுரை

ஸ்ரீமதி லட்சுமி அம்மாள்

இதுவரையில்...

[எட்டாம் நூற்றாண்டிலே ராஜஸிம்ம பாண்டியன் ஒரு சக்கரவர்த்தியாக ஆட்சி செலுத்தி வந்தான். இவன் கங்கராஜனை வென்று அவனுடைய மகளான பூசுந்தரியை மணந்து பட்ட மகிஷியாக்கிக்கொண்டிருந்தான். தெற்கே சேரனையும் வென்று தயாள குணத்துடன் அவனுக்கு வேண்டிய உதவிகளும் செய்திருந்தான். எனினும், சேரன் பாண்டிய சக்கரவர்த்திக்கு விரோதமாய்க் கலகம் செய்து கன்னியாகுமரியை ஒட்டியிருக்கும் நாஞ்சில் நாட்டைத் தனதாக்கிக் கொண்டான். பாண்டியன் மீண்டும் படையெடுத்துப் போய் சேரனை அடக்கி, அவனிடம் மறுபடியும் தயாளமாக நடந்துகொள்ள வேண்டுமென்று தீர்மானித்து அவனைத் தனக்கு ஒரு சேனாபதியாகவும், மந்திரியாகவும் ஆக்கிக் கொண்டான். சேரனோ கெட்ட எண்ணத்தை விட்டுவிடவில்லை. ஒரு பௌத்த பிட்சுவுடன் சூழ்ச்சி செய்து, பாண்டிய வீர மன்னனுக்கு அஹிம்ஸா தர்மப் பிரசாரம் செய்யும் வியாஜத்தால், பாண்டி நாட்டில் குழப்பம் உண்டாக்கவும், பாண்டியனுள்ளத்தைக் கெடுக்கவும் முயல்கிறான். இந்நிலையில் இராஜ புரோகிதரான செல்வநம்பி ஒரு பண்டித சபை கூட்டி, மன்னனுக்கு ஆறுதல் அளிக்க எத்தனிக்கிறார். இச் சபைக்கு எப்படியாவது ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து விஷ்ணுசித்தரை அழைத்து வரவேண்டுமென்று அரசனும், அரசியும், ஒருவருக்கொருவர் தெரியாத நிலையில் மாறுவேடம் பூண்டு போய்க் காரியசித்தி பெறுகிறார்கள். இது பௌத்த பிட்சு முதலானவர்களுக்குப் பொறாமையுண்டாக்குகிறது.]

17

தர்க்கச் சந்தை

அரண்மனையைச்சார்ந்த பூங்காவனத்தின் ஒரு பகுதியிலே பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் வருகிற புலவர் பெருமக்களெல்லாம் கூடி விவகரிக்கப் பண்டித மகாசபை நிர்மாணமாகி வந்தது. ஆம்; அச்சபை கூடுவற்கு ஏற்ற சபாமண்டபம்தான். அம்மண்டபம் எங்கேயோ கட்டப்பட்டு வருகிறது என்றுதான் ஜனங்களுக்குத் தெரியும்; அது எங்கே கட்டப்பட்டு வருகிறதென்பது ஒருவருக்கும் தெரியாது. அவ்வளவு இரகசியமாக அந்த வேலை நடந்து வந்தது.

அந்தப் பூங்காவனத்தின் ஒரு பகுதியைத்தான் ராணி பூசுந்தரியின் தோழிகளும் சாதாரணமாக உபயோகித்து வந்தார்கள். அரசன் கூடச் சாதாரணமாக உபயோகத்தில் வைத்துக்கொண்டிராத பூங்காவனப் பகுதியில்தான் மண்டபம் கட்டப்பெற்று வந்தது. அந்தப் பகுதி ஒரு குட்டிக்காடு போலவே தோன்றியது; பண்படுத்தப்பட்ட சோலையாகத் தோன்றவில்லை. பூஞ்செடி கொடிகளைக் காட்டிலும் பல வேறு மரங்களும் அங்கே அதிகம். சில இடங்களில் சற்றும் இடைவெளியின்றி இலைகளும் கிளைகளும் இணைந்து சூரிய ஒளியை உள்ளே விடாமல் தடை செய்தன. பகலிலும் இருண்ட இடங்கள் அங்கே உண்டு. சில இடங்களில் இலைப்பின்னல்களும், கிளைப்பின்னல்களும், சூரிய ஒளியை வடிகட்டி இளநிலவுபோலச் செய்துவிட்டன.

அத்தகைய பூங்காவனப் பகுதியில் ஆயிரக்கணக்கான சிற்பிகள் இரவுதோறும் பல்லாயிரக்கணக்கான தீவட்டி வெளிச்சங்களுக்கிடையே வேலை செய்து வந்தார்கள். அதனால்தான் அம்மண்டபத்தைக் குறித்து மதுரைவாசிகளுக்கும் தெரியாமல் போயிற்று. அந்தப் பக்கமாகவே ராணுவ வீரர்கள் கொஞ்ச காலமாக ஒருவரையும் விடுவதில்லை. தேசமெங்கும் கொள்ளைக்காரர் பயம் அதிகரித்து வந்ததாலும், மதுரையிலேயே எதிரிகள்-சதிகாரர்களின் தொகை பெருகி வந்ததாலும், அரசன் ஏதோ தேசப் பாதுகாப்பான வேலைகளில் ஈடுபட்டிருப்

பதாகப் பலரும் நம்பினார்கள். ஊரிலுள்ள சில பெரிய மண்டபங்களில் ஏதாவதொன்றில் பண்டித மகாசபை நடக்கக்கூடும் என்றுதான் பலரும் நினைத்தார்கள்.

புதிய மண்டபத்தைச் சுற்றியும், மரங்கள் செடி கொடிகளுக்கிடையிலும் பண்டிதர்களும் பல்வேறு மதவாதியர்களும் தங்குவதற்கு வீடுகளும் அமைக்கப்பெற்றன. வித்துவான்கள் தங்கும் இடங்கள் அவர்களுக்கு வேண்டிய வசதிகளுடனும், மதவாதியர்கள் தங்கும் இடங்கள் அவர்களுக்கு வேண்டிய செளகரியங்களுடனும் அமைக்கப்பட்டன. புறச் சமயிகளுக்கும் அவர்களுடைய தேவைகளுக்கு ஏற்றபடி அரசன் இருப்பிடங்களை அமைத்து வைத்தான். அவர்களுக்கெல்லாம் அவசியமான சாஸ்திரங்களையும் வேறு நூல்களையும் ஒரு பொதுவான நூல் நிலையத்தில் அரசன் கட்டளைப்படி அரண்மனையைச் சார்ந்த வித்துவான்கள் தொகுத்து வைத்தார்கள்.

பண்டித மகாசபைக்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் முற்றுப்பெற்றன என்று கேள்விப்பட்டதும், பாண்டியனும் செல்வநம்பியும் மந்திரி மாறங்காரியும் அந்த இடங்களைப் பார்வையிட்டார்கள். ஏற்பாடுகள் எல்லாம் மந்திரியாரின் மேற்பார்வையில் நடைபெற்றதால், அரசனுக்கும் செல்வநம்பிக்கும் யாதொரு குறையும் இருப்பதாகத் தெரியவில்லை.

வெண்ணிலவு பொழிந்துகொண்டிருந்தது. இவர்களுக்குச் சிறிது தூரத்தில் நரஸிம்மன் நின்றுகொண்டிருந்தான். செல்வநம்பி அரசனை நோக்கி, ‘புலவர் பெருமக்கள் எல்லாம் வந்துவிடுவார்கள் அல்லவா? நாம் அரசியல் குழப்பங்களை அடக்கும் முயற்சிகளைக்கூட இப்போது மேற்கொள்ளவில்லையே!’ என்றார்.

அரசன் மந்திரியை நோக்கினான். அவர், ‘வேத வேதாந்தங்களில் வல்லவர்களான வித்துவான்கள் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் மதுரையை நோக்கி வந்துகொண்டிருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. நாளையே வந்துவிடுவார்கள். வெள்ளிக் கிழமையே சபை தொடங்கிவிடலாம். அதற்குள் விஷ்ணுசித்தரும் திருமாலிருஞ்சோலையிலிருந்து வந்துவிடுவார் என்று தெரிகிறது’ என்றார்.

‘ஜைன பெளத்தம் முதலான புறச் சமயங்களைச் சார்ந்த பண்டிதமணிகளும் தடையில்லாமல் வரக்கூடுமல்லவா?’ என்று செல்வநம்பி கேட்டார்.

அதற்கு அரசன், ‘ஜைன பெளத்தர்கள் மட்டுமல்ல, சார்வாகர் முதலான நாஸ்திகர்களும் தாராளமாக வந்து இந்த வாதப் பிரதிவாதங்களில் கலந்துகொள்ளலாமென்று கட்டளை பிறப்பித்திருக்கிறேன்’ என்றான்.

மந்திரி மாறங்காரி சொன்னார் : ‘சேரநாட்டிலிருந்துதான் பெரும்பாலும் ஜைன பெளத்தர்கள வந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பண்டித மகாசபை முற்றுப்பெறும் வரையில் சேரனாவது ஆனந்த தீர்த்தராவது கலகத்தைக் கிளப்பிவிடமாட்டார்கள் என்பது நிச்சயம். தர்க்க விவகாரங்களில் பெளத்த பண்டிதர்களை ஜயிக்கக்கூடியவர்கள் வைதிக பண்டிதர்களில் யாரும் இருக்கமுடியாது என்பது அவர்களுடைய நம்பிக்கை, உறுதியான எண்ணம்.’

பிறகு செல்வநம்பி, ‘தமிழகத்திற்கும் வடக்கேயுள்ள தர்க்க சாஸ்திர நிபுணர்களும் வந்து சேருவார்கள்—இல்லையா?’ என்று கேட்டார்.

அதற்கு அரசன், ‘நான் வடுகநாட்டில் படையெடுத்துப்போய் ஜயஸ்தம்பம் நாட்டிய காலத்தில் அங்கேயுள்ள தர்க்கசாஸ்திரிகளுக்கும், கலைஞர்களுக்கும் சன்மானங்கள் வழங்கியிருக்கிறேன். அங்கே தர்க்க சாஸ்திரிகள் மட்டுமல்ல. பல்வேறு கலைகளில் பயிற்சிபெற்ற புலவர் பெருமக்களும் உண்டு. நமது அழைப்பிற்கு இணங்கி அவர்களும் வருவார்கள்’ என்றான்.

பண்டித மகாசபை சரியாக நடைபெறும் என்பதில் அவர்களுக்குச் சிறிதும் சந்தேகமில்லை. அந்தச் சபையில் வெற்றி விஷ்ணுசித்தருக்குத் தான் என்பதிலும் அவர்களுக்கு ஐயம் ஏற்படவில்லை. எனினும் ‘அநாவசியமான விவகாரங்களை விதண்டாவாதிகள் எழுப்பக்கூடுமே; அதனால் அப்பெரியாரின் மன அமைதிக்கு இடையூறு ஏற்படவும் கூடுமோ?’ என்று அரசன் அஞ்சினான். ஆனால், அந்தப் பயம் அமைச்சருக்காவது செல்வநம்பிக்காவது ஏற்படவில்லை.

‘எப்போதும் விஷ்ணுசித்தரின் சித்தத்திலே துஷ்ட நிக்கிரக சிஷ்டபரிபாலன மூர்த்தியான திருமால் குடிகொண்டிருப்பதால், எப்படியாவது துர்விவகாரங்கள் அடிபட்டுப்போகும்; விஷ்ணுசித்தரின் சித்த சமாதானத்திற்கு ஒரு குறைவும் ஏற்படாது’ என்று நம்பினார் செல்வநம்பி.

மாறங்காரியும், விஷ்ணுசித்தரின் மன அமைதிக்குப் பங்கம் ஏற்படாமலே காரியம் சித்தியாகிவிடும் என்றே ஊகித்தார். ‘மதவாதியர்களும் நாஸ்திகர்களும் தர்க்க நிபுணர்களும் வாதப் பிரதிவாதங்களால் ஒருவர் கட்சியை ஒருவர் அடித்துத் தள்ளிவிடுவார்கள். பிறகு விஷ்ணுசித்தருக்குப் பாதை தானே தெளிவாகிவிடும்’ என்பது மந்திரியாரின் ஊகம்.



பொதுவாக, செல்வநம்பியின் நம்பிக்கை வீண் போகாது என்றும், மந்திரியாரின் மதிநலம் தவறிப்போகாது என்றும் அரசன் நம்பினான். அந்த நம்பிக்கையை அவனுடைய பழைய அனுபவங்கள் உறுதிப்படுத்தின.

* * * *

பண்டித மகாசபை பண்டித மணிகளாலும் தர்க்க நிபுணர்களாலும், அகச்சமயிகளாலும் புறச்சமயிகளாலும், ஆஸ்திகர்களாலும் நாஸ்திகர்களாலும் நிறைந்து பொலிந்தது. ஒவ்வொருவராக வந்து அமர்ந்தார்கள் பேர்பெற்ற பண்டித சிரேஷ்டர்கள். இருவர் இருவராக வந்தார்கள் தர்க்க சாஸ்திர நிபுணர்கள். அவர்கள் வாதப் பிரதிவாதங்களைத் தமக்குள் நிகழ்த்திக்கொண்டே வந்து சேர்ந்தார்கள்.

கலைஞர்கள் சிறுசிறு கூட்டங்களாக வந்தார்கள். பக்தர்கள் பத்துப் பத்துப் பேராகப் பஜனை செய்துகொண்டு வந்தார்கள். புறச்சமயிகள் நூறு நூறு பேராகத் திரண்டு வந்தார்கள். அவர்களெல்லாம் வாதப்போருக்குத் தங்கள் சாஸ்திர ஆயுதங்களையும் தர்க்கக்கருவிகளையும் தீட்டிக் கூராக்கிக் கொண்டு வந்தார்கள். நாஸ்திகர்களும் திரள்திரளாக வந்து தங்கள் முகத்திலே இறுமாப்பும், உதடுகளில் திடசங்கற்பமும், கண்களில் பணிவின்மையும் தோன்ற வீற்றிருந்தார்கள்.

பொற்கிழியையாவது அரசனுடைய சம்மானங்களையாவது பொருளாக மதிக்கர்தவர்களும் சமயப்போர்களிலும், வாதப் பிரதிவாதங்களிலும் ஆசைகொண்டு வந்திருந்தார்கள். இவர்களையெல்லாம் அரசாங்க அதிகாரிகள் உபசரிப்பதில் கண்ணும் கருத்துமாயிருந்தார்கள்.

பொது மக்களில் வாதப் போரைப் பார்க்க ஆசைப்பட்டவர்களுக்கெல்லாம் வசதியான இடங்கள் அமைக்கப் பெற்றிருந்தன. அந்த மண்டபம் வட்ட வடிவமாக அமைக்கப் பெற்று எல்லாருக்கும் வசதியளித்தது.

எல்லாம் மாயம்தான் என்று விவகரிக்கும் மாயாவாதிகள் வந்துவிட்டார்கள் என்பதை ராஜசேவகன் ஒருவன்,

மாயா வாதியர்
வந்து புகுந்தார்

என்று அறிவித்தான்.

பௌத்தர்களின் வருகையை அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க இரத்தினச் சுருக்கமாய்,

புத்தர் புகுந்தார்

என்று தெரிவித்தான்.

ஜைனர்கள் தங்கள் அஹிம்ஸா தர்மத்தை வற்புறுத்தி,

ஆருயிர் கொல்லோம்

என்று கொடி பிடித்து, தாங்கள் வரும் வழியிலே மயில்-விசிறி கொண்டு விசிறிச் சிற்றுயிர்களை மிதியாமல் அப்புறப்படுத்திய வண்ணம் வந்து சேர்ந்தார்கள். அவர்களை அரசாங்க அதிகாரி அறிவிக்கும்போது,

'ஆருயிர் கொல்லோம்!' என்னும்
அருகரும் அருகு சார்ந்தார்

என்றான்.

வாமமார்க்கத்தில் சக்தியை உபாசிக்கும் சாக்தர்களின் கூட்டம் ஒன்றும் சபா மண்டபத்தில் இடம் பெற்றிருந்தது. அக் கூட்டத்தினர், 'மதுபானம் செய்வது நன்று; மதுவுண்டு மெய்ம்மறந்து காளியை உபாசிப்பதே பேரின்பம்! மற்றப்படி, தம்மைத்தாம் ஆராய்ந்து அறிந்து கொள்ளவேண்டும் என்ற ஞானம் அநாவசியம்' என்ற கொள்கையுடையவர்கள். அவர்களை அரசாங்க அதிகாரி அவர்கள் விருப்பத்திற்கு இணங்க,

ஓயாதே, மது
உண்டு தமைத்தாம்
ஆயா வாமிகள்
அக்கணம் வந்தார்

என்று அறிவித்தான்.

நாஸ்திகர்களும் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ள விரும்பினார்கள். 'பூலோகத்திற்கு மேலான பரலோகம் ஒன்றுமே கிடையாது, பூமியில் அனுபவிக்கும் இன்பமே இன்பம். இதைச் சிற்றின்பமென்று சொல்வதுதான் சிற்றறிவு. பரம், பரத்துவம், பரலோகம் என்று வாதிப்பதெல்தாம் பழுது. இகம் தான் சத்தியம்; பரம் பொய், வீண்கனவு. எங்களுக்கு வானம் பார்த்து நடக்கத் தெரியாது. பூமியைப் பார்த்துத்தான் நடப்போம். இந்த உலகத்தையே நம்பும் உலகாயதர் நாங்கள். இப்படியே எங்களை அறிவிக்கவேண்டும். இதுவே எங்கள் அதிகார முத்திரை' என்றார்கள்.

அவர் வேண்டுகோளுக்கிணங்க அப்படியே அறிவித்தான் அதிகாரி;

'பார்உறும் இன்பம் அல்லால்,
பரம்எனல் பழுதாம்' என்றே
ஓர்உலகாய தத்தோர்
எனும்அவர் உடனே வந்தார்!

பிறகு செல்வநம்பி வந்து சேர்ந்தார். அவரை இரு முழு விருத்தங்களால் அறிவிக்க விரும்பினான் அதிகாரி.

உற்றவனுயத் தென்னவனுக்(கு)
உயிர்த்துணையாய், அறம்அன்றி
மற்றறியா நிலையானுய்,
மறைநாலும் கற்றவனுய்,
செற்றமிலா மனத்தினனுய்,
செல்வநம்பி எனும் நாமம்
பெற்றவனுய், எதுவரினும்
போராத நிலையானுய்,............

என்று அறிவித்து வரும்போதே ராஜ புரோகிதர் சைகைசெய்து, அப்படியே அவனை நிறுத்திவிட்டுத் தமக்கு அமைத்திருந்த ஆசனத்தில் அமர்ந்தார்.

அந்த ஆசனம் அரசனுடைய ஆசனத்திற்கு அருகே ஒருபுறம் அமைந்திருந்தது. செல்வநம்பிக்கு அருகே வேதவித்துக்களான பெரியோர்கள் அமர்ந்திருந்தார்கள். ஒருபுறம் மாறங்காரி முதலான மந்திரி பிரதானிகள் அமர்ந்திருந்தார்கள்.

'அஹோ ராஜாதி ராஜன்' என்று கட்டியங் கூறியது சபையோர் காதில் விழுந்தது. உடனே வேறொருவன்,

மஹா தேசப்ரகாசன்

என்று கட்டியங் கூறினான். இப்படியே இருவரும் மாறி மாறிக் கட்டியங்கூறி வந்தார்கள்.

முதலாமவன்: 'ராஜ பரமேச்வரன்'

இரண்டாமவன்: 'தேசநேச நரேச்வரன்'

'ராஜகம்பீரன்'
'ராஜ மார்த்தாண்டன்'
'மதிகுல திலகன்'
'மஹா வீர வீரன்'
'புத்தியில் பிரஹஸ்பதி'
'வித்தையில் சரஸ்வதி'
'வாக்கில் அரிச்சந்திரன்'
'நோக்கில் நரசூரியன்'
'பொல்லார்க்குச் சத்துரு'
'நல்லார்க்கு மித்திரன்'
'மாறுபடு பகையை வென்று'
'ஆறிலொரு கடமை கொண்டு'
'திங்கள் மும்மாரி பெய்ய'
'எங்கும் முப்போகம் செய்ய'
'மணி நீள்முடி மதுரையர்கோன்'
'கிருபாலயன் கலிப்பகைஞன்'
'பராந்தகன் பண்டித வத்ஸலன்'—

இவ்விதமாய்க் கட்டியங்கூற அரசர்பிரான் சிம்மாசனத்தில் அமர்ந்தான்.

ராஜசிம்ம பாண்டியனோடு பூசுந்தரியும் வீற்றிருந்தாள். வாதப் போர் தொடங்கிவிட்டது. ராஜபுரோகிதரான செல்வநம்பி, 'அவர் இன்னும் வரவில்லையே' என்று மாறங்காரியிடம் காதோடு காதாய்ச் சொன்னார். அமைச்சரோ 'அதுவும் ஒரு நன்மைக்குத்தான்' என்று பதில் சொன்னார்.

மந்திரியார் எதிர்பார்த்தபடியே மதவாதியர்களும் ஒருவர் கட்சியை ஒருவர் அடித்துப் பேசித் தீர்த்துவிட்டார்கள். 'என் மதம் மேலானது' என்று வாதித்த மதத்திலுள்ள குற்றங் குறைகளையெல்லாம் பிற மதத்தினர் அலசி ஆராய்ந்து, 'உன் மதம் தாழ்ந்தது' என்று மெய்ப்பித்துவிட்டார்கள். பௌத்தர்களும் ஜைனர்களும், 'வேதமும் வேதம் சொல்லும் கடவுளும் பொய்' என்று மறுத்தார்கள். ஆனால், விரைவில் அவர்களே தங்களுக்குள் வாதாடி வழக்குரைத்து ஒருவர் கட்சியை ஒருவர் அடித்துத் தள்ளிவிட்டார்கள்.

நாஸ்திக பண்டிதர்கள், 'வைதிகக் கொள்கைகளும் தவறானவை; ஜைன பௌத்தங்களும் தவறானவைதான். அஹிம்ஸையோ, ஹிம்ஸையோ—எந்த வழியிலும் "கண்டதே காட்சி கொண்டதே கோலம்." இம்மையின்பமே இன்பம்; மறுமையென்பது குருமாரின் சூழ்ச்சி! வைதிக குருமார்களைப்போல் ஜைனபௌத்த குருமார்களும் சூழ்ச்சி செய்திருக்கிறார்கள்!' என்று விவகரித்தார்கள்,

இந்த நாஸ்திக வாதங்களைச் சில ஆஸ்திகர்களும் தங்கள் அறிவுக் கூர்மையினால் குத்திக் கிழித்தெறிந்தார்கள். தர்க்கப் போர்கள் சில சமயங்களில் ஆஸ்திகர்களை மடக்கித் தள்ளவும் உதவின; வேறு சமயங்களில் நாஸ்திகர்களை வெருட்டவும் உதவின.

சில அறிஞர்கள் வாழ்வின் நிலையாமையை வற்புறுத்தினார்கள். வேறு அறிவாளிகள், 'நிலையாத வாழ்வைத்தான் நம்பி வாழ வேண்டும்; வேறு வாழ்வே கிடையாது' என்றார்கள்.

அரசன் சோர்ந்து பெருமூச்சுவிட்டான். மகாராணிக்கும் அலுப்பும் சலிப்புமாகவே இருந்தது. தொண்டை கிழிய விவகரித்த அந்த விவகாரங்களைக் கேட்டுச் செல்வநம்பியும் களைப்புற்றவராய் அமைச்சரை நோக்கி, 'ஐயோ! இன்னும் வரவில்லையே' என்று ஏங்கினார்.

அதற்கு மாறங்காரி, 'அதோ வந்துகொண்டிருக்கிறார். சற்றுக் கவனியுங்கள், இந்தச் சந்தை இரைச்சலுக்கிடையே' என்று மெள்ளப் பதில் சொன்னார். மத வெறியர்கள் உறுமினார்கள். சூனியவாதிகள் கர்ஜித்தார்கள். தார்க்கிகர்கள் கனைத்துத் தொண்டையைச் சீர்படுத்திக் கொண்டார்கள். அந்தக் கனைப்புகளுக்கும் உறுமல்களுக்கும் கர்ஜனைகளுக்கும் இடையே எழுந்தது 'விஷ்ணுசித்தர் வருகிறார்' என்ற கோஷம்.

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பு

சந்தா விவரம்

★

(சந்தாவை முன்னதாக கட்டவேண்டும்.)

	இந்தியா, சிலோன்		வெளிநாடு	
1 வருஷம்	13	0	18	0
6-மாதம்	7	0	9	8
3-மாதம்	3	12	5	0

தனிப்பிரதி அணா 4

3-மாதத்திற்கு குறைந்து சந்தா ஒப்புக் கொள்ளப்படமாட்டாது.

மானேஜர்,
'சுதேசமித்திரன்' ஆபீஸ், மவுண்ட்ரோட், மதராஸ்.

(தொடரும்)

மாதர் மகா சபை

'குங்குமம்'

'என்னமோ கெட்டிக்காரி, கெட்டிக்காரி என்று சொல்லிக்கொண்டிருந்தோமே, கனகா சுத்த அசடு என்பது இப்போதுதான் தெரிகிறது' என்றாள் ருக்குவின் மாமியார்.

'என்ன திடீரென்று இப்படிப்பட்ட ஒரு அபிப்ராயம் ஏற்பட்டுவிட்டது மாமி' என்றாள் சரோஜா.

'பாவம்! ஏழையாக இருந்தாலும் பரவாயில்லை. பெண் கிளிமாதிரி நன்றாக இருக்கிறாள். அது ஒன்றே போதும். கல்யாணம் செய்துகொள்கிறோம் என்று அவர்கள் மன்றாடிக் கேட்டார்களாம். கண்டிப்பாக முடியவேமுடியாது என்று சொல்லிவிட்டதாமே'

'நீங்கள் இப்படிச் சொல்கிறீர்களா? அவளைக் கேட்டுப் பாருங்கள். தகுந்த காரணம்தான் சொல்கிறாள்.'

'ஏராளமான சொத்து இருக்கிறது. பையன் மன்மதன் மாதிரி இருக்கிறான். மனுஷ்யாளும் நல்லவர்கள் என்று சொல்கிறார்கள். அதிலும் அந்தப் பையனின் தாயார் தங்கம் என்றால் தங்கமாம். நாட்டுப் பெண்களை அவ்வளவு ஆசையாக வைத்துக்கொண்டிருக்கிறாளாம். வீண் புகார்கள் சொல்லிக்கொண்டிருக்கிற பழக்கமே இன்னதென்று தெரியாதாம். இதைவிட இன்னும் என்ன வேண்டுமாம்? நான்தான் உலகத்தில் பார்த்துக்கொண்டிருக்கிறேன். தரித்திரப்படும்படி ஈச்வரன் தலையில் எழுதியிருந்தால் நல்லது எப்படி ஒட்டும் சொல் பார்க்கலாம், என்னமோ அசடுகள். போறாத காலத்துக்கு எதையாவது விதண்டாவாதம் செய்துகொண்டு திரியுங்கள். உம், அதனதன் தலையெழுத்தை அதது 'தொலைத்துத்தானே' ஆகவேண்டும்!

'ஆமாம். நீங்களே சொல்லிக்கொண்டிருக்கப்போகிறீர்களா? அது சொல்கிற காரணத்தையும் கொஞ்சம் காது கொடுத்துக் கேட்கப் போகிறீர்களா?'

'என்னவாம், அப்படி ஒருவருக்குமே தெரியாத காரணத்தைச் சொல்கிறாள்? சொல்லேன் பார்க்கலாம்.'

'நாலைந்து தினங்களுக்குமுன்பு கனகாவுடன் ஒரு பெண் கோவிலுக்குவந்திருந்ததே, வைர செட்டாகவே போட்டுக்கொண்டிருந்ததே! ருக்குகூட கேட்டாளே அது யாரென்று, ஞாபகத்துக்கு வருகிறதா?'

'ரங்கநாயகியின் பெண் பூமாவைத்தானே சொல்கிறாய்? பூமா தெரியாதா எனக்கு! நல்ல வேலை நீயே ஞாபகப்படுத்தினாய். அதனுடைய அதிர்ஷ்டத்தைப் பாரேன். பிறந்தகத்

ருக்கு சொல்லுகிறாள்

★

'உம், போய் நில் அவளெதிரில்' என்று மஞ்சுளாவை என் எதிரில் கொண்டு நிறுத்தினாள் கோகிலா.

'என்னடி இது, சந்தையில் மாடுகளைக்கொண்டு நிறுத்துகிறமாதிரி நிறுத்துகிறாயே?' என்றேன்.

'அன்றைக்கு, காலில் பட்டை கொலுசைப் போட்டுக்கொண்டு ஒரு பெண் பாதரக்ஷை போட்டுக்கொண்டு நடந்ததென்று அப்படிப் பரிகாசம் செய்தாயே, இதற்கு என்ன சொல்கிறாய்?' என்றாள்.

மஞ்சுளாவைக் காலிலிருந்து தலைவரையில் பார்த்தேன். எனக்கு ஒன்றும் புரியவில்லை. 'இன்னுமா தெரிந்துகொள்ள முடியவில்லை? இதோ பார்' என்று மஞ்சுளாவின் இடது கையைக் காட்டினாள்.

'அடி அசடே! என்று என்னையும் அறியாமல் கூவிவிட்டேன்.

கை நிறைய வளையல் அதன் நடுவில் கைக்கெடியாரம்!

'பைத்யமே! நீ கைக்கெடியாரம் கட்டிக்கொள்வதை நான் வேண்டாமென்று சொல்லவில்லை. வளையல்களையெல்லாம் வலதுகையில் போட்டுக்கொண்டு கெடியாரத்தை மாத்திரம் இடது கையில் கட்டிக்கொள். அதுதான் நாகரிகம்' என்றேன்.

தில் அஷ்ட தரித்திரம் பிடுங்கித் தின்கிறது. அதனுடைய தாயார் பாவம்! இரண்டு புடவை சேர்ந்தாற்போல் வைத்திருந்தே தெரியாது. அவளுக்கு, அன்றாடும் அந்த ஒரே புடவையைத்தோய்த்து உலர்த்தித்தான் உடுத்திக்கொள்ள வேண்டும். கையிலே காதிலே ஒன்றும் கிடையாது. தகப்பனார் பாவம், யார் வீட்டிலோ சமையல் செய்கிறார். அந்தப் பணத்தில்தான் குடும்பம் நடந்தாக வேண்டும். அப்படிப்பட்ட இடத்தில் பிறந்த ஒரு பெண்ணுக்கு அடித்த யோகத்தைப் பாரேன். அன்று ஜால்ரா ஜால்ராவாக ஆயிரத்தெட்டு கிழிசல்களுடன் ஒரு பாவாடையை உடுத்திக்கொண்டிருந்த ஒரு பெண், இன்று தகடிகளாகவே உடுத்து தீர்க்கிறாள். பிறந்த மேனிக்கு அழிவில்லாமல், காதிலா மூக்கிலா, நகையே இன்னதென்பது இல்லாமல் இருந்த ஒரு பெண், இன்று உடம்பு முழுவதும் வைரமாகவே இழைத்துக்கொண்டிருக்கிறாள். பெண் ரதி மாதிரி நன்றாக இருந்தாள். எவனோ ஒரு பணக்காரன் கல்யாணம் செய்துகொண்டான். அதன் தலையில் நன்றாக எழுதியிருந்தான். நல்ல அந்தஸ்தில்இருக்கிறது. இதன் தலையில் கோணலாக எழுதிவிட்டான். இதற்கு இப்படிப்பட்ட துர்ப்புத்தி தோன்றியிருக்கிறது.

'பூமாவின் தலையில்கூடக் கோணலாகத்தான் எழுதிவிட்டானாம். அப்படி கஷ்டப்பட்டுக் கொள்கிறதாம் பாவம் அது. அதைக் கேட்டுவிட்டுத்தானே கனகா அந்த வரனை வேண்டாமென்று ஒரே பிடிவாதமாகச் சொல்லிவிட்டாள்.'

'பூமாவுக்குக் கஷ்டம் என்றால் யாராவது நம்புவார்களா? என்ன கஷ்டமாம் அதற்கு?'

'கனகாவுடன் ஒரு நாளெல்லாம் கதையாய்ச் சொல்லிற்றாம். முதலில் பெரிய இடத்தில் வாழ்க்கைப்பட்டதைப் பற்றி தன்னைவிட அதிர்ஷ்டசாலிகள் இந்த உலகத்தில் யாருமே இல்லையென்று' மனப்பால் குடித்துக்கொண்டிருந்ததாம். போகப் போகத்தான் தான் எவ்வளவு துரதிருஷ்டசாலி என்பது தெரியவந்ததாம். பூமாவின் அகமுடையானுடன் கூடப்பிறந்தவர்கள் இரண்டு பேர்களாம். அந்த இரண்டு பேருக்கும் பெரிய இடத்தில் கல்யாணமாம். ஒருவருடைய அகமுடையாள் ஒரு ஹைகோர்ட் ஜட்ஜினுடைய பெண்ணாம். மற்றொருவருடைய அகமுடையாள் ஒரு போலீஸ்-சூப்ரிண்டெண்டினுடைய பெண்ணாம். அந்த இரண்டு பெண்களுக்கும் பிறந்தகத்துச் சலுகையைச் சொல்ல முடியாதாம். ஒருத்தியினுடைய சகோதரன் தங்கள் பங்களாவின் தோட்டத்தில் காய்த்ததென்று விதம் விதமான பழங்களாகவே கொண்டு கொட்டுவானாம். மற்றொருத்தியின் சகோதான் விதம் விதமான புடவைகள் வாங்கிக் கொடுப்பானாம். ஏதாவது பண்டிகை, விசேஷம் என்று வந்தால், ஊருக்குப் போக ஜம் என்று பிறந்தகத்துக் 'கார்' வீட்டு வாசலில் வந்து நிற்குமாம் அல்லது. பிறந்தகத்திலிருந்து யாராவது ஏதாவது வாங்கிக்கொண்டு வருவார்களாம். பரம்பரையாகவே பெரிய அந்தஸ்தில் இருந்தவர்களாயிற்றா? அவர்களைச் சேர்ந்த பந்துக்களெல்லாம் நல்ல பதவியில் உள்ளவர்களாகவே வெகு ஆடம்பரத்தோடு வருவார்களாம். பூமாவைச் சேர்ந்தவர்கள் பாவம்! எல்லாம் பரம்பரை ஆண்டிகள் வெறும் ஏகாதசிகளாகவே ஏழைமுகத்தைப் போட்டுக்கொண்டு வந்து நிற்குங்களாம். அத்துடன் தரித்திரத்தின் கொடுமை, அசட்டுப் பிசட்டென்று பெருந்தன்மை

இல்லாமல் நடந்துகொள்ளுங்களாம். இதையெல்லாம் பார்க்கச் சில சமயங்களில் இந்த உலகத்திலே நமக்குப் பெற்றோர்கள், பந்துக்கள் என்ற பூண்டே இல்லாமல் போய்விடக்கூடாதா என்றுதான் பூமாவுக்குத் தோன்றுமாம். நாம் வேண்டுமானால் இக்கரைக்கு அக்கரை பச்சை என்று வாய்க்குச் சுளுவாகச் சொல்லிவிடலாம். அதை அனுபவித்துப் பார்க்கும் போதல்லவோ அந்தக் கஷ்டம் தெரியும்.'

'கொடுக்கட்டுமே என்ன பிரமாதம்? வேறு யாருக்காவதா? தங்கள் சகோதரிகளுக்குத்தானே வாங்கிக்கொடுக்கிறார்கள்?'

'அதே மாதிரி பூமாவுக்கும் பிறந்தகத்திலிருந்து ஏதாவது வந்தால்தானே நன்றாக இருக்கும்?' என்றாள் பானு.

'பிறந்தகத்திலிருந்து வருவானேன்? ஏழையென்று தெரிந்துதானே அவன் கல்யாணம் செய்துகொண்டான்? ஆகையால், எல்லாவற்றையும் கணவனே வாங்கிக் கொடுக்கவேண்டியதுதான்,' என்றாள் ருக்குவின் மாமியார்.

'கணவன் வாங்கிக் கொடுக்கிறான், இல்லையென்று சொல்லவில்லை. இருந்தாலும் அவர்கள் பூமாவை எந்ததினுசில் நோக்குவார்கள்? அவர்கள் பிறந்தகத்தைச் சேர்ந்தவர்கள் கார்களில் வந்து இறங்குவதும், கடைக்கும், கடைத்தெருவுக்கும், சினிமாவுக்கும் அழைத்துக்கொண்டு போவதும் அமர்க்களப்படும்போது, இவள் அவைகளைப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டியதுதானே! இதெல்லாம்கூட அவளுக்கு அவ்வளவு பெரிதாகத் தோன்றவில்லையாம். பூமாவின் நாத்தனாருக்குக் கல்யாணம் நடந்ததாம். அதற்குச்சம்பந்திகளெல்லாம் வந்திருந்தார்களாம். பூமாவின் தகப்பனாரும் வந்திருந்தாராம். சம்பந்திகளெல்லாம் வந்திருந்தவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்களாம். அவரவர்களுடைய அந்தஸ்தும் பதவியும் அமர்க்களப்படுத்தப்பட்டதாம். பூமாவின் தகப்பனாரைப்பற்றி என்ன சொல்வது? ஏதோ பட்டதும் படாததுமாய் சொல்லி வைத்தார்களாம். இவர் விஷயத்தில் உபசாரமும் 'ஏனோதானோ'வென்ற ரீதியில்தான் இருந்ததாம். ஓரகத்திகளும் பூமா என்றால் ஒரு தினுசாகத்தான் நோக்குவார்களாம். கணவன் என்னவோ பூமாவினிடத்தில் அன்பாகத்தான் இருக்கிறானாம். கூட இருப்பவர்களின் அலக்ஷிய மனப்பான்மையைத்தான் பூமாவினால் சகிக்க முடியவில்லையாம். பொதுவாக அந்த இடத்தில் இருப்பது அவளுக்கு நரகத்தில் இருக்கிற மாதிரிதான் இருக்கிறதாம். 'என்ன இருந்தாலும் ஒரு சமையற்காரனுடைய பெண்தானே அவள்!' அந்த இடத்தில் இருப்பவர்களுக்கு பூமாவைப்பற்றி இந்த மனப்பான்மைதானே இருக்கும்?' எனறாள் சரோஜா.

'அதற்காக பெரிய அந்தஸ்து கிடைத்தால் உதறித் தள்ளிவிட வேண்டுமென்கிறாய்?' என்றாள் ருக்குவின் மாமியார்.

'திருடன் ராஜவிழி விழிக்கிற மாதிரி' என்று நீங்கள் கேள்விப்பட்டதில்லையா மாமி? ஒன்றும் தெரியாத ஒருவனுக்கு ஒரு பெரிய யோகதசையிருந்து, அவனுக்கு ராஜபதவிகிடைத்துவிடலாம், அவன் சிம்மாசனத்திலும் ஏறி உட்கார்ந்துவிடலாம். இருந்தாலும் பிரஜைகள் அவனை மதிப்பார்களோ? ஒரு பொருட்டிலேயே வைக்க மாட்டார்கள். சுண்டைக்காய்க்குச் சமமாகத்தான் நினைப்பார்கள். அதுவே ஒரு அரசனுக்குரிய யோக்யதாம்சங்கள் இருந்து, அவன் அந்த பதவிக்கு வந்தால் அதனுடைய கௌரவமே வேறுதான்' என்றாள் சரோஜா. அத்துடன் ஒன்றும் தெரியாதவன் அந்தப் பதவியை ஏற்பது தேசத்துக்கு எவ்வளவு அனர்த்தம் தெரியுமோ? என்றாள் பானு.

'ஆனால் அதேமாதிரிதான் இதுவும் என்கிறாய்?' என்றாள் ருக்குவின் மாமியார்.

'கைப்புண்ணுக்குக்கண்ணாடி எதற்கு மாமி? சம்பந்தம் செய்வதென்றால் உயர்ந்த அந்தஸ்திலுள்ளவர்கள் உயர்ந்த அந்தஸ்தையேதான் பார்க்கவேண்டும். தாழ்ந்த அந்தஸ்திலுள்ளவர்கள் தங்களுக்குச் சமமான இடத்தைத்தான் தேடவேண்டும். அப்பொழுதுதான் வாழ்க்கை ரஸிக்கும். இந்த நியதி மாறுபட்டால் அந்தக் குடும்பங்களில் வீண்சண்டையும் சச்சரவுந்தான் இருக்கும். இதை கனகா நன்றாக உணர்ந்திருக்கிறாள். அதனால்தான் அந்த வரனை வேண்டாமென்று கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டாள்' என்றாள் சரோஜா.

'கனகா சொல்வதென்னவோ வாஸ்தவந்தான். அவரவர்கள் கோஷ்டியில் அவரவர்கள் கொஞ்சம் உயர்வும் தாழ்வுமாகப் போட்டி போட்டுக் கொண்டிருந்தால் அதனுடைய ஆனந்தமே வேறுதான்,' என்று கனகாவின் கக்ஷியை ஆமோதித்தாள் விமலா.

'அப்படியானால் உலகத்திலே யாருமே உயர்ந்த அந்தஸ்துக்கு ஆசைப்படக்கூடாதென்று சொல்கிறீர்கள்?' என்றாள் ருக்குவின் மாமியார்.

'ஆசைப்படவேண்டியதுதான். அந்த ஆசை இல்லையென்றால், உலகத்தில் அப்புறம் என்ன இருக்கிறது? ஆனால், ஆசைப்படும் அந்த அந்தஸ்து நமது எல்லையை மீறினதாக இருக்கக்கூடாது அல்லது அந்த அந்தஸ்துக்கு நம்மைத் தகுதி உள்ளவர்களாக ஆக்கிக்கொள்ளவேண்டும். இல்லையென்றால் வெறும் கேலிக்கூத்தாகத்தான் முடியும்' என்றாள் சரோஜா.

சரசு! பாக்யவதி

—ஜெயஸ்ரீ—

“மரீனா”கடற்கரைத் தோற்றம் மனதிற்கோர் விதமான இன்பத்தையும் சாந்தியையும் அளித்தது. ஜன நடமாட்டமில்லாத ஒதுக்குப்புறமான ஒரு இடத்தில் மேல் துண்டை யுதறி கீழேப் போட்டுக்கொண்டு திறந்த நீலவானை நோக்கி மல்லாந்து படுத்தேன். கடற்காற்றின் மென்மையாக குளு குளு வென்றிருந்தது. என் மனம் என் வசமில்லை. திக்கு தெரியாத காட்டில் தவிப்பது போன்று எதையோ தேடி சுற்றி சுற்றி அலைந்து திரிந்தது. காற்றுடன் இசைந்த அலை ஓசையும், நீலவானில் அப்பொழுதே உதயமாகும் “உதய சந்திரனும்” இந்திர ஜாலம் செய்வதுபோன்று தாரகைகள் மேகங்களிடை “பளிச், பளிச்” சென்று தோன்றி மறைவதுமான இயற்கை வர்ணங்களைக்கூட நன்றாக ரசிக்கமுடியவில்லை! ஏன்? ஆம்! அதோ மெல்லிய பூங்காற்றில் மிதந்து என் இருதயத்தை யூடுருவிப் பாய்ந்து மறந்திருந்த என் சிந்தனைகளை ஒரு கலக்கு கலக்கிவிட்டு என் மனப்புரவியை பின்னோக்கி ஓடச்செய்த பிறகு வெளியுலகிலுள்ள மானிட உள்ளத்தை மகிழ்வுற செய்ய தென்றலுடன் கலக்க வெளியேறிவிட்டது. அக்கானம்! கல்லுங்கரையுமென மனமுருகி பாவத்துடன் கான ரஸத்தை பிழிந்துக்கொண்டிருந்தாள். ஒருவள் அன்றைய ரேடியோவில்... தெய்வீகத் தன்மையுடன் கூடிய அக் கந்தர்வ கானத்தில் மெய் மறந்தேன்...

அன்று பூர்ணிமை. அகண்ட கருநீல வானில் சந்திரன்ரோகிணியுடன் பூர்ண யெழிலுடன் உல்லாசமாக சஞ்சரிக்கக் கிளம்பிவிட்டான். அவ்விருவருடைய அழகிற்கெதிரில் வர அஞ்சுவதுபோல தாராகணங்களும் “மினுக்மினுக்” கென்று தம் கண்களை சிமிட்டியபடி மேகத்திரை மறைவில் சற்று பதுங்குவதும் சற்று வெளிவருவதுமாக இருந்தன. மக்களின் தாபத்தைத் தணிக்க இயற்கையன்னை மந்த மாருதத்தை யனுப்பி மென்மையாக விசிற செய்தனள். அன்றைய இரவு மனோகரமாகவே எல்லோருடைய மனதிலும் சொல்லவொணா இன்பவெழுச்சிகளைக் கிளறிவிட்டது.

இதற்கு சரசுவதியும் விலக்காகவில்லை. இவ்வதிசய இயற்கை சித்திரத்தைக் கண்டு விம்மினாள். திறந்த கீழ் ஜன்னல் வழியாக வெளியுலகை நோக்கியபடியே ஏதோ சிந்தனை யெழவேபோலும் உயிரற்ற பிம்பம்போல அசைவற்று உட்கார்ந்திருந்தாள். நிமிஷத்திற்கொரு தடவை பெருமூச்செறிந்தாள். கண்ணீர் பார்வையை மறைத்தது. வாழ்க்கைப் புயலில் தவிக்கும் ஒரு பாய்மரமற்ற படகுபோன்ற நிலையில் தான் அவள் தினமும் இருந்து வந்தாள். சோகமே உருவானதோர் உருவம். ஹூம்...

தன் சோகத்தை மறைக்கவே “கான தேவதை”யை வழிபடுவதில் இறங்க முயற்சித்தாளென்பது அவளிருந்த நிலையே தெளிவாகக் காட்டியது.

கையில் வீணை, ஆனால் கானம் செய்யப்படவில்லை. ஜீவ வீணையில் தான் உயிரில்லையே...பின் எங்கிருந்து நாதம் எழும்?

மனிதத் தன்மையுடன் கூடிய எவனும் அவளது நிலையைக் கண்டு இறங்குவான்...

என் மனதில் ஏனோ அவளிடத்தில் சிறிதளவுகூட பச்சாதாபமோ, அன்போ யுதிக்கவில்லை.

வாலிபத்தின் திமிர் பூர்ணமாகவிருந்தது. அவளை நான் லக்ஷியத்துடன் நடத்தியதேயில்லை.

என் வரவை அவள் உணரவில்லை. அது எனக்கு மிகுந்த கோபத்தை உண்டாக்கிவிட்டது. ஆத்திரத்துடன்,

“ஹூம்......சீக்கிரம்......இலை போடு......யென்று உறுமினேன். எதிர்பாராத என் குரலைக் கேட்டதும் பிரமித்து எழுந்தாள். “தடார்”ரென்ற மனதை கலக்கும் ஓர் ஓசை........திரும்பினேன். வீணை நழுவி முறிந்தயோசை அது.

“ஐயோ.........” என்று அலறினாள். முறிந்த வீணையை எடுத்தாள். சற்று அதை இப்படி அப்படி திருப்பி திருப்பிப் பார்த்தபடியே கலங்கிய கண்ணீர் கன்னங்களில் வழிய நின்றாள்.

இன்று நினைக்கிறேன். அவள் மனதில் யெத்தகைய வெண்ணங்கள் யெழுந்தனவோ என்று......

நேரம் அதிகமாய் விடவில்லை. ஆனால் என் வேலைக்குத்தான் இடைஞ்சல் போன்று தோன்றியது. அதற்கேற்ப என் நண்பன் நேரமாகிவிட்டதை உணர்த்த வாயிலிருந்தபடியே கார் ஹார்னை சப்தப்படுத்தினான். அதன் பிறகும் நான் பொறுப்பேனா.

“சட் கழுதை—நாழிகை யாறது—பிரமாதமா குடி முழுகி போறுப்பலே நிக்கறு. பெரிய வித்வாம்சினின்னு எண்ணமோ... இடியட்—பூல்......” யென்றெல்லாம் வாயிற்வந்தபடி திட்டி விட்டு கைகால்களைக் கழுவிக்கொண்டு சாப்பிட உட்கார்ந்தேன்.

இவ்வளவிற்கும் அவள் வாயிலிருந்து ஒரு வார்த்தைக்கூட வரவில்லை. மௌனமாகவே ஜீவனற்ற சவம்போல பின் தொடர்ந்தாள். இலைப்போட்டு பரிமாற தொடங்கினுள்.

அவள் மனநிலை சரியில்லை. எனவே கைகள் நடுங்கின. ஒரு இடத்தில் பரிமாறியது மற்றொரு இடத்தில் விழுந்தது. அவள் உணர்ந்தாள். இருந்தபோதிலும் கோபந்தான் வந்தது. முழித்துப்பார்த்தேன். பீறிட்டு வரும் துக்கத்தை ஒருவாறு அடக்கி சமாளிக்க முயன்று கொண்டிருந்ததும் தெரிந்தது. மனிதத் தன்மையையே இழந்துவிட்டேன்.

“படீ”ரென கன்னஞ் சிவக்க ஒரு அறை கொடுத்தேன்.

“தரித்தரம்.........கால் வெச்ச வேளை அம்மா, அப்பா செத்தாச்சு. என்னையும் அழுது அழுது ஒழிச்சுட்டா நிம்மதியா இஷ்டப்படி ஆடலாம், பாடலாம்.........உம்.......என்று கத்தி விட்டு கையை பாதி சாப்பாட்டிலேயே உதறி கொண்டெழுந்தேன்.

“இல்லை ...இல்லை...சாப்பிடுங்கள்”யென்று ஒரு கையால் அடித்த கன்னத்தை தடவிக்கொண்டே மற்றொரு கையால் என் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கெஞ்சினுள்.

அவள் நின்றிருந்த காட்சி பரிதாபம்! கல் நெஞ்சனுகிய நான் அதற்கெல்லாமா மசிபவன்.

“ஏனோ என் மனம் சரியில்லை... ...இன்று மட்டுமாவது......தயவு செய்யுங்கள். நானும் பெண் தானே. உங்களுடைய சுகதுக்கங்களில் அக்கரை இல்லையா. உங்களுக்கு திருப்தியில்லாமல் நான் இருந்து என்ன?......” என்ருள்.

“ஆம்........உன்மீது எனக்கு அன்பு இல்லைதான். நீ இருந்தும் ஒன்றுதான், இல்லாமற்போனுலும் ஒன்றுதான். ஆனுல் உலகத்தில் என்னை கௌரவமாக நினைக்கவேண்டுமே. கட்டின பெண்டாட்டியை தெருவில் விட்டானென்று குறை சொல்லக் கூடாதென்றுதான். மேலும் வேலைக்காரி பொறுப்புடன் செய்வாளா. கூலிக்கு வேலை செய்வாள். மற்றபடி பொறுப்பு இருக்காது. இப்பொழுது அந்த சள்ளையில்லை...........கிடக்கட்டும் எதையாவது உளறிகொண்டு தாம் கவனிக்காமல் தம்மிஷ்டப்படி நடத்திக்கொண்டு போனுலாச்சு......” யென்று எண்ணினேன். ஆனுல்,

“ஏன் மூஞ்சியும் நீயும்.........ஒன்னைக் கட்டிண்டு மாரடிக்க முடியலை. ஹாய்யாக என்னை விட்டுடு. தரித்திரப்பீடை ஒழிந்த துண்ணு நிம்மதியாயிருப்பேன்” என்று வாய் கூறிவிட்டது.

“நான் வந்த வேளை நீங்கள் சம்பாதிக்காமல் திண்டாடலை. பெரிய உத்தியோகப் பதவியிருக்கு. “பர்ஸை” காலிபண்ண உல்லாச சிநேகிதர்கள்.........சரி நான் பயித்தியம். அசடு......இனி நான் அவசியமில்லைதான்.........” என்று அடுக்கிக்கொண்டே போனுள்.

அதைக் கேட்கவோ, பதில் கூறவோ சந்தர்ப்பம் சரியாக இல்லை. “டிரெஸ்” செய்துக் கொண்டு அவளை சட்டை செய்யாமல் குஷாலாய் சிநேகிதனுடன் காரில் சென்று விட்டேன்.

* * * * *

என்று வாழ்க்கைப் படலத்தைத் தொடங்கினேனே, அன்றே என்னை பிடித்துவிட்டது அஷ்டம சனியன்.

இல் வாழ்க்கையில் ரஸனையில்லை. சப்பென்று இருந்தது. புரியாத புதிர் என் வாழ்க்கை.

சரசுவதி சுமாரான எழிலுடன் கூடியவள். ஆனுல் திமிரான எனது வாலிப கண்களுக்கு யுணர்ச்சி யூட்டவில்லை.

பெற்ருேரின் வற்புறுத்தல். கலியாணம் தடையின்றி நிறைவேறி விட்டது. அவர்களுக்கு சரசுவதி மருமகளாய் வந்ததில் பரம திருப்தி. குலம், குணம் எல்லாம் அவர்களுக்கு ஒத்ததாக விருந்ததே காரணம்.

“ஏண்டா, பெண்ணுக்கு என்ன குறைச்சல் மூக்கும், முழியும், மாநிறமாக விருந்தாலும் இருக்கலையா...” என்று அவர்கள் கூறுவார்கள்.

“உங்களுக்கு அவள் ரம்பையாகத் தோன்றலாம்,” யென்று மனதிற்குள் கூறுவேனே ஒழிய வெளியில் அபிப்பிராயத்தைக் கூற தைரியமிராது.

“வீணை வெச்சுண்டு எங்க சரசு (அருமையாக அழைப்பது) பாட ஆரம்பிச்சுட்டால் பட்டமரமும் தளிர்க்கும் இன்னிக்கெல்லாம் கேட்டுண்டிருந்தாலும் அலுப்பாகவே இராது...” யென்றெல்லா பெருமையாகக் கூறுவதெல்லாம்கூட எனக்குப் பிடிக்காது.

அந்த விஷயம் மட்டும் உண்மைதான். சங்கீத பரம்பரையில் பிறந்தவள் சரசுவதி.

“மீன் குட்டிக்கு நீந்தப் பழகனுமா...பிரமாதம்,” யென்று அலக்ஷியம் செய்வேன்.

“என்னமோப்பா, வேணும்னு பார்த்துப் பண்ணி வைச்சோம். பெரியவா இஷ்டப்படி நாங்க நடந்துட்டத்துலே கெட்டாபூட்டோம். சின்னவாளுடைய சுகத்துக்குக் கெடுதலாம் ஒண்ணும் செய்யமாட்டா. நாளைக்கே குடும்பம் அவள் நடத்தறப்போ எல்லாம் காலாகாலத்திலே தானே சரியாயிடும்...பெண்...அப்பொ இப்படி வேண்டா வெறுப்பா பேசின பிள்ளையாண்டான் இவனுன்னு பிரமிக்கணும்...” யென்ற வாக்கு பலிக்கவேயில்லை.

கலியாணம் ஆன சில மாதங்களுள் பெற்ருேரை இழந்தேன். எனவே என்னை ஏனென்று கேட்பாரில்லை. கொஞ்சம்சொத்து இருந்தது. அதிர்ஷ்டவசமாக படிப்பு முடிந்ததும் வேலையும் கிடைத்து விட்டது. கஷ்டமறிய ஹேதுவில்லை. பின் கேட்பானேன். நான் இட்டது சட்டம்.

கஷ்டமறியாத சூழ்நிலையுடன் கூடிய தான்தோன்றி நண்பன் கிடைத்து விட்டால் மற்ற நண்பர்களுக்குக் கொண்டாட்டத்தைக் கூறவேண்டுமா........என்

அதிர்ஷ்டம் அவர்கள் சிநேகம் கிடைத்ததென்று பொங்கி வழிந்தேன்.

வீடு, மனைவி யெல்லாம் ஒரே வெறுப்பாக விருந்தது, என் மாமனார் "அப்பா! பெரியவாளிருந்த வரை குறைவில்லை. நமது பிராப்தம். அவர்களிலிருந்து நீங்கள் ஒத்த வாழ்க்கை நடத்துவதைக் கண்டு மகிழக் கொடுத்து வைக்கவில்லை. எப்படியும் உன்சொத்தை உன்னிடம் சேர்ப்பித்தாலொழிய நிம்மதியேற்படாது. இவளை ஏற்று பொறுப்புடன் குடும்பத்தை நிர்வகி. குழந்தை தப்பு செய்வாள், மன்னி. அடித்தாலும், அணைத்தாலும் நீதான் அவளுக்கு கதி..." யென்று ஒரு அத்தியாயம் படித்துவிட்டு சரசுவதியைவிட்டுச் சென்றார்.

வந்த சில தினங்கள் என் சுபாவத்தைக் காட்டாமல் நல்லவன் போல நடித்தேன். பிறகு என் பூச்சு நிற்கவில்லை. சுயரூபம்தென்படவே...மனது குமிறி சிற்சில சமயங்களில் நயத்திலும், பயத்திலும் என்னைத் திருத்தி அன்பைப்பெற முயலுவான். ஆனால் அவள் கூறுவதைஇறுதி வரைக் கேட்டுக் கொண்டிருந்தால்தானே...

என் மனைவிக்கு உயிர் வீணை தன் தனிமையில் சாந்தியைப் பெறுவதுகானோபாசனையில் தான். அதுகூட எனக்கு சகிக்கவில்லைபோலும்!

அன்று அதற்கும் முடிவு வந்துவிட்டது. வீணை முறிந்தது. அவளது உள்ளமும் முறிந்தது. புண்பட்ட உள்ளத்தைக் கோல் கொண்டு கிளறுவதுபோன்றதாகிவிட்டது அன்றைய சம்பவம்.



அன்பில்லாத வாழ்க்கை பாலைவன வாழ்க்கையையும் மிஞ்சிவிடுகிறது? என் குடும்ப வாழ்க்கை சிதறுண்டது.

* * * *

அரசாங்கம் சட்ட திட்டங்களை வகுப்பது? மக்களை ஒழுங்கு முறையில் செலுத்த. ஆனால் நடைமுறையில் அன்றாட வாழ்க்கையில் நாம் காண்பதும், கேட்பதும் நேர்மாறானவைகளே. ஒழுங்கு முறையில்லை. நியாயாநியாயமில்லை. படித்துப் பட்டம் பெற்றவர்களும், கோடி கணக்கில் திரண்ட செல்வத்தைப் படைத்தோருமான, கன தனவான்களே நாட்டின் முக்யஸ்தர்கள். அத்தகையோரிடம் குறை காணப்படில் அரசாங்கம் வகுக்கும் சட்டம் என்ன செய்யமுடியும்? சட்ட நிபுணர்கள் வாய்கிழிய, தொண்டை நீர் வற்ற சிக்கலான சமூக பிரச்னைகளைத் தீர்க்கக் கதறலாம். "சூ...சூவென அனுதாபாளர்கள் ஆதுரம் காட்டலாம் ஆனால் காரியாம்சையில் ஒன்றையும் காணோம். ஒருவர் மற்றொருவர் நிலைக்கு வருந்தி தீர்க்க வழியில்லை. போலி அனுதாபம், சுயநலமே மேலிடத்தோரின் உயர்ந்த கொள்கைகள். ஒவ்வொன்றிலும் தற்கால ரீதியில் ஊழலை மிதமிஞ்சி காணப்படுகிறது. பின் சாதாரண மனிதனின் தனி வாழ்வு செம்மையாகக் காணப்படுவது எங்ஙனம்? ஒவ்வொருவனும் அல்லது ஒவ்வொருவளும் சுய உணர்வுடன் ஆத்மீகவளர்ச்சியின் அடிப்படையில் தன் மானத்துடன் ஒழுங்கு முறையில் தானும் சகோதர மக்களும் ஒன்றி வாழ பாடுபடல் வேண்டும். தீய வழியை அறிந்தும் அத்தகைய கொடுமைக்குட்படுவதை தடுக்காமலிருப்பது மனித வர்க்கத்தின் உயரிய கடமையா?

இன்று இந்த நானோதயம். அன்று இவைகள் குப்பைத் தொட்டியில் மிருகத்தனமான உணர்ச்சிக்கு இடங் கொடுத்தது. உதவாக்கரை மேல்நாட்டு நாவல்களைப் படிப்பதும், சினிமாப் படங்களைப் பார்ப்பதுமே. துஷ்ட சிநேகம் வேறு. ஆபத்து நண்பர்களே அன்றுஎன் ஆப்தர்கள். பணம் எதையும் செய்யத் துணிகிறது. நன்மை, தீமையென்கிற வேற்றுமை அதற்கில்லையென்பது அனுபவ வார்த்தை.

எதிரில் முகஸ்துதி பின்னால் ஜாடை காட்டி பரிகாச வார்த்தைகள். இவை யாவும் அறியக்கூடாமல் என் பின்புத்தி என்னையே மறக்கச் செய்துவிட்டது, படித்தும் முட்டாள்.

* * *

சிநேகிதனுடன் சென்ற அன்றைய இரவு என்னை ஓர் புதிய பெண்மணியிடம் நட்பு கொள்ள அறிமுகம் செய்து வைத்தனர்.

என்னை மகிழ்விக்கயெண்ணி மணந்தவளை மனமுறிய செய்து, மற்றோர் பெண்ணிடம் நட்கொண்டு இன்பமாகக் கனவு கொண்டிருந்த என் மதியீனம் என்னே! காமப்பேய்க்கு வசமாய் கண்ணிழந்த என்னையும் தெய்வம் மன்னிக்குமா! கொண்ட மனைவிக்கு எத்தனை துரோகம்?

அப்புதுபெண். நல்ல அழகி. சுருண்டு நெற்றியின் மீது பரந்திருந்த அக்கூந்தல் ஒன்றே அவள் வசிகரத்தை பன்மடங்காக்கியது. மெல்லிய நெடிய உரும். வறுமையின் காரணமாகவே போதிய புஷ்டியில்லாமலிருந்தது. இல்லாவிடில் அவளை புராணத்திற்கூறும் ரதிக் கொப்பிடலாமென்றே தோன்றியது.

கவர்ச்சி மிகுந்த தன் நீண்ட கருவிழிகளால் ஒருதரம் நோக்கிவிட்டு நாணத்தால் தலை குனிந்தாள். முகத்தில் புன்னகை. ஆனால் அதன் திரை மறைவில் ஓர் சோகம் குடி கொண்டிருப்பதை யூகித்துவிட்டேன். கொஞ்சம் சங்கோஜி எனவே துணிந்து என்னை வரவேற்காமல் சற்று தயங்கினாள்.

அவளது சங்கோசத்தைப் போக்க நானே அவளை வலுவில் என்னருகில் இழுத்து உட்கார வைத்துக்கொண்டு பேச்சுக் கொடுத்தேன்.

அவள் த்ரேகம் நடுக்கமுற்றது. என் மனதிலும் சற்று உற்சாகம் குறைந்தது. அவளைப் பலவந்தப் படுத்தி என் விருப்பத்தை நிறைவேற்றிகொள்ள என் மனம் இடந்தரவில்லை. எனவே சாதாரண சிநேகபாவத்துடன் அவளைக் குசலப்பிரச்னம் செய்ய ஆரம்பித்தேன். அவள் துக்கமயமான சரிதத்தைக் கேட்டதுமேதான் என் அகக்கண் மெதுவாக திறக்கவாரம்பித்தது.

“பெரிய மிராசுதாரரின் அருமை மகள். சுமாரான கல்வியறிவுடையவள். கணவன் நவநாகரீகத்தில் தேர்ந்தவன். கிராமீயப் பெண்ணை விரும்பவில்லை. மேலும் அவள் தந்தைவாக்களித்தபடி சீர் செனத்திகளை சரியாகச் செய்யவில்லையென்பதோர் குற்றம். மேலும் அவர் காலமாகியும் விட்டார். சொத்து சுதந்தரம் யாவும் பிள்ளையின் வசமாகிவிட்டது. பெற்ற பெண்ணை உயிருடன் இருந்தால் தந்தை கைவிடமாட்டார். சகோதரனும், அவன் மனைவியும் அவளுக்காக செலவிட மறுத்துவிட்டனர். கணவனும் நிராகரித்துவிட்டான். பொறுத்துக்கொண்டு சில நாட்கள் சகோதரனிடம் தங்கினாள். அவர்களது அலக்ஷிய நடவடிக்கைகள் மனக்கசப்பை உண்டாக்கிவிட்டது. வெளியேற துணிந்துவிட்டாள். எப்படியோ சென்னை வந்தாள். நகரத்தில் எத்தனையோ பிழைப்புக்களுக்கு வழியிருக்கிறதேயென யெண்ணினாள். ஆனால் மோசமாக இதில் சிக்கிக்கொண்டாள். அவளுக்கு வேறு விதியில்லை. முதலில் பயந்தாள். கொஞ்சமாகவே சகஜமாகிக்கொண்டு வருகிறாள்.

என் சிந்தனை எங்கேயோ சென்றது. உலக மாயத்திரை விலகவே ஏதோஒரு புது உணர்வு பெற்றேன்.

என்ன மதியீனம்! பிழைப்புக்கு வேறு நேர்மையான வழிகளில்லையா? தன் மானத்தை இழந்தா வயிறு வளர்க்கவேண்டும். ஐயோ! கொடுமை... கூடப்பிறந்தவளுக்கு பெற்றோரின் சொத்தில் உரிமையில்லை? இஷ்டப்பட்டு ரத்தபாசமிருந்து இரங்கினால் ஆச்சு—இல்லையேல் அவள் கதி? தெருவில் தவிக்கவேண்டியது. சிறுவயது முதல் கூடவே பழகிய சகோதர தன்மைக்கு ஈவிரக்கமில்லாதபொழுது புதியதாக வாழ்க்கையில் புகுந்த கணவனுக்கேன் அன்பும், இரக்கம்?

இவளைப்போன்ற பெண்களின் இந்நிலைமைக்குக் காரணம் என்போன்ற வாலிபர்களின் ஒழுங்கு முறை தவறியதாலேயே யல்லவா? எவ்வளவு தலையிறக்கம். சமுதாயத்தின் கட்டு திட்டங்கள் பயன்பெறவில்லையே.

ஸ்திரீகள் தவறுதலுக்குக் காரணம் சூழ்நிலை, அறிவின்மை, மனிதனின் சுயநல வேட்கைகளை தொன்றுதொட்டு இந்து ஸ்த்ரீகளின் பண்பு உலகத்தின் மற்றைய பாகத்திலுள்ள ஸ்த்ரீகளைக் காட்டிலும் மேம்பட்டே இருந்தது. ஆண் பெண் இருசாராரும் தத்தம் கடமைகளைச் சரிவரச் செய்யத் தவறியதாலேயே சமூகத்தில் குழப்பமுண்டாக இடமேற்படுகிறது, ஒரே இனத்தில் ஒருவர் மற்றொருவருக்குத் தீமையை செய்யப் புகுகின்றனர். நேர்மையான அறவழியில் சென்றால் துன்பம் வந்தாலும் போராடி வெல்லும் சக்தியை அளித்து இறுதியில் இன்பத்தையடைவோம். இதுவே பெரியார்களின் அருள்வாக்கு.

கால ரீதியில் எத்தனையோ மாறுபாடுகள். ஆனால் “மனிதத் தன்மை” யென்பதுமட்டும் தொன்றுதொட்டு ஒன்றாகவே கருதப்படுகிறது.

சீலத்துடனிருக்கும் யோக்யதாம்சையுடையவரையன்றோ பொது ஜனம் விரும்பும்!

என் மனைவியின் கதி? எத்தனையோ விதமான சிந்தனைகள் அலைபோல் யெழும்பின.

“இல்லை அவள் தீ வழியிலிறங்க துணியாள். உயிரையேனும் தியாகம் செய்வாள்...குறுகிய புத்தியில்லை...என்னமோ யார் கண்டார்? என் அன்பை இழந்தாள். வெறுப்பினால் இவள் போல மாறிவிட்டால்? சே...... சே...ஏன் என்னுடம்பு இப்படி சிலிர்க்கிறது. அதை நினைக்கவே பயங்கரமாகவிருக்கிறதே...... ஐயோ சரசு! நானே உன்னை அழித்தேன்...பாபி! சண்டாளன்! துரோகி......” என்றெல்லாம் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் நினைத்தேன். அதற்குப்பிறகு அங்கு நிலைக்கொள்ளவில்லை.

‘சகோதரி! என்னை மன்னித்துவிடு.........இதோ என் கையிலிருக்கும் பணம். இதைக்கொண்டு ஒரு தொழில் முறையை.......ஏன்...... ...சுதந்திர இந்தியாவின் மக்களின் ஈன நிலையை புனர் நிர்மாணம் செய்யவும், மக்கள் ஆத்மீகதுறையில் நன்கு முன்னேறவும் நமது தந்தை மகாத்மாயடிகள், இன்னம் இதர தேசத்தியாகிகளின் யெண்ணங்கள் ஈடேறவும் செய்ய ஏற்படுத்தப்பட்டிருக்கும் தர்மஸ்தாபனமொன்றில் சேர்ந்து, சற்று சீலமுள்ளவளாய் வாழ பிர

திக்கை செய்து கொடு.....படுகுழியில் தள்ளப்படும் இந்தப் பாபச் செயலில் இறங்கேனென சபதம் செய்........யென்று அவளிடத்தில் மண்டியிட்டு வணக்கமாகக் கேட்டுக் கொண்டு கதறினேன்.

அவள் புரிந்துகொண்டாள். கண்கலங்கினாள்......... மெதுவாக மெல்லிய குரலில், "அண்ணா. அப்படியே செய்கிறேன்......தங்கையிடம் மன்னிப்பு எதற்கு? நீங்களே என்னை மீட்க வந்த தெய்வம்......யெழுந்திருங்கள்........விதியில்லாமல் உயிரைப்போக்க தைரியமில்லாமல் பாவ படுகுழியில் விழவிருந்த யென்னை காப்பாற்றினீர்கள்.....உங்கள்போன்ற இளைஞர்களாலேயே நமது சுதந்திர இந்தியாவில் என் போன்ற திக்கற்ற பெண்களின் வாழ்க்கை கேவலமாக்கப்படாமல் பாது காக்கப்படவேண்டும்.......யென்று கூறினாள்......அவ்விடத்தில்.

ஏதோ ஒரு பெரிய லக்ஷியசித்தியடைந்ததைப் போல சாந்தி நிரம்பியது............

இனி நான் புது மனிதனானேன், என் தவறுதலுக்குப் பிராயசித்தம் என்ன நான் வருத்திக் கொள்ளுவது ஒன்றுதான். தாடியை வளர்த்தேன். ஒரு நாடோடி போல யாத்திரைக்குக் கிளம்பி விட்டேன். மனம் சலிக்கும் மட்டும் திரிந்தேன். எத்தனையோ பசி, பட்டினிகளை இன்பமுடன் சகித்தேன். என்னை இப்படி வாட்டிக் கொண்டால்தான் என் பாபக் கறை மறையுமென்று யெண்ணினேன்.

* * * * *

பத்து வருடங்கள் பறந்தோடின. ஜென்மபூமியாகிய தென்னாட்டை நோக்கி நடந்தது இந்த சரீரம்.

சென்னை வந்து சேர்ந்தேன். வழியில் இரு நண்பர்களைச் சந்தித்தேன். ஒருவரும் கண்டுகொள்ளவில்லை. நல்லதாச்சு......ஏதோ தேசாந்திரியென்று யெண்ணினர்போலும்

கடற்கரைக்குச் சென்றேன். இதே கடற்கரையில் ஒரு காலத்தில் எத்தனை விதமான மோகினிகளுடன் நிலையற்ற இன்பத்தைப் பெரிதாக யெண்ணி பொழுதை வீணில் கழித்து குடும்பத்தை சிதறடித்தேன்.

சரசு! சரசு! உன்னைப்பற்றி நினைக்கும்போதெல்லாம் மனதில் ஏதோ ஒரு பெரிய பாறையை சுமப்பதுபோல பளுவாகத் தோன்றுகிறதே...அப்பப்பா!

* * * * *

'இன்றைய ரேடியோ கச்சேரி அபாரம்—வீணையை மீட்டத்தொடங்கும்போதே இனிமை நமது ஜீவ நாடியைத் தட்டியெழுப்புகிறதே.

'ஆமாம்...பூர்வஜன்ம சுகிருதம் தெய்வீகமான கலையை யடைய எவ்வளவோ புண்யம் செய்ய வேண்டும். அவள்பாக்யவதிதான். யார் அவள்?"

"தஞ்சை சரசுவதியம்மாள்—தெரியாதா?......"

"ஆமாம் கேள்விப்பட்டிருக்கிறேன். அவளுக்கு உயிர் கலை-யென்று சொல்லிக்கொள்ளுவார்கள்......"

"இப்பொழுது சுமார் நாற்பது வயதிருக்கும். இருந்தும் எவ்வளவு அருமையாக சாதகம் செய்திருக்கிறாள் பார்த்தாயா—அவளைப்பற்றி கூட என்னன்னமோ சொல்லிக் கொள்ளுகிறார்கள்............

மேற்கூறிய இருவரின் சம்பாஷணையே என்னை சுய உணர்வு பெற செய்தது. அவர்கள் இன்னம் என்ன சொல்கிறாரென கவனிக்கலானேன்.

"என்ன?"

"ஒன்றுமில்லை...பாவம்...அகமுடையான் லக்ஷியம் செய்யலையாம் துரத்திவிட்டான். மகா கண்யமானவள்......உயிரிருக்கும் வரை உணவு வேண்டுமே என்ன செய்யலாம். யாரோ பந்துவின் சிபார்சினால் இதை ஜீவனமாகக் கொண்டாளாம். எந்தப்புற்றில் எந்த பாம்பு இருக்குமோ. இந்த காலத்திலே ஒண்ணும் நல்லது கெட்டதே சுலபமா தெரிஞ்சுக்க முடியறதில்லே......காலம் கெட்டு போச்சு சார்."

அதற்குமேல் அவர்கள் சம்பாஷணையில் மனது செல்லவில்லை. உண்மையில் என் சரசுவேவா அவள்? என்றுமே அவளுக்கு உயிராக விளங்கியது சங்கீதம். கஷ்டகாலத்திலும் அவளுக்குதவியது யார்? கலை...ஸங்கீத கலையே. அவளாயினும் நிம்மதியாக ஈடு பட்டுவிட்டாள். எனக்கு? நிம்மதி கிடைக்குமா?

என் கேள்விக்குப்பதில் எதிர் பார்ப்பதுபோல வானத்து சந்திரனை நோக்கினேன். சிக்கலான என் கேள்விக்குப் பதில் கிடையாதென்பதுபோல தண்மதியும் ரோகிணியுடன் மேகங்களுக்கிடையில் மறைந்தான். பூர்ணமான கலையறிவே மக்களை காக்கும்.........சரசு? பாக்யவதி?......



டிப்போக்கள்:—மதுரை, கோயம்புத்தூர், கும்பகோணம், பம்பாய.

ராஜகுமாரன் விந்தியன்

கி. கணேசன்

'பாட்டி வரப் போறாடா ராஜு!' என்று ராஜுவிடம் ஒரு லெட்டரை நீட்டினாள் அவன் தாயார். ராஜுவுக்குப் பாட்டி என்றால் உயிர். போன தடவை வந்த போது அவனுக்கு நல்ல நல்ல கதைகள் எல்லாம் சொல்லி இருந்தாள். அவற்றை எல்லாம் அவன் தன் நண்பர்களுக்குச் சொல்லி 'கதைப் புல்' என்ற பட்டப் பெயரை வாங்கியிருந்தான். அன்று சாயங்காலம் பாட்டி வந்து சேர்ந்தாள். சாப்பாடெல்லாம் முடிந்தவுடன் 'பாட்டி' இன்றைக்கு நல்ல கதையா சொல்லு பாட்டி, என்று கேட்டான் ராஜு. பாட்டி சொல்ல ஆரம்பித்தாள்.

* * * *

"மதுராபுரி என்னும் ஊரில் சித்திரசேனன் என்ற ஒரு அரசன் ஆண்டுவந்தான். அவனுக்கு நான்கு பிள்ளைகள். கடைசிப் பிள்ளையாகிய விந்தியன் மற்ற மூன்று பேரைக் காட்டிலும் அதிக புத்திசாலி ஆகையால் ராஜா அவனை மிகவும் நேசித்து வந்தார். அவனையே தனக்குப் பிறகு அரசனாக்கவும் கருதி வந்தார். இதனால் பொறாமையுற்று மற்ற மூன்று சகோதரர்களும் 'விந்தியன் அரசனைக் கொல்லப் போகிறான்' என்ற பழியைப்போட்டு அவனை நாட்டைவிட்டு விரட்டிவிட்டார்கள்.

பாவம்! நாடு கடத்தப் பட்ட விந்தியன் பல நாட்கள் அலைந்து திரிந்து கடைசியில் ஒரு நாட்டை அடைந்தான். களைப்பு மிகுதியால் ஒரு தோப்பில் படுத்து நன்றாக அசந்து தூங்கிவிட்டான். அவன் எழுந்திருந்தபோது இருட்டிவிட்டது. கொஞ்ச நேரம்என்ன செய்வது என்று தெரியாமல் அப்படியே உட்கார்ந்து இருந்தான். திடீரென்று யாரோ பாடுகின்றசப்தம் கேட்டது. இரவில் பாட்டுச்சப்தம் கேட்டவுடன் விந்தியனுடைய ஆச்சர்யத்துக்கு அளவே இல்லை. மெதுவாக பாட்டு வரும் திக்கை நோக்கிச் சென்றான். அங்கே ஓர் இளம் பெண் குளக்கரையில் உட்கார்ந்து பாடிக் கொண்டு இருந்தாள்.

விந்தியனைக் கண்டவுடன் அப்பெண் எழுந்து தலை குனிந்து நின்றாள். விந்தியன் அவளைக்கேட்டான் 'இந்தக் காட்டில் தனியாக இருக்கிறாயே உன் பெயர் என்ன? உனக்குப் பயமாக இல்லையா? என்றான். அதற்கு அவள் சொன்னாள்:என்பெயர்மாலதி அவந்தி நாட்டு அரசன் மகள் நான். ஒருநாள்நான் ரோஜாப் பூ பறிக்க சென்றுகொண்டு இருக்கையில் ஒரு முனிவரின் காலை தெரியாமல் மிதித்துவிட்டேன். கோபம் கொண்ட அவர் 'எந்த ரோஜாப்பூவை பறிக்க வந்து என்னை அவமதித்தாயோ அதே ரோஜாப்பூவாகப்போ, என்று சபித்தார். நான் கெஞ்சிக் கேட்டுக்கொண்டதின் பேரில் அவர் சொன்னார்: நீ இருக்கும் செடியில் உன்னை மாதிரி அநேகம் பூக்கள் இருக்கும். நீ இரவில் சுயரூபத்தை அடைவாய். உன்னை மணக்க வருபவன் சரியான பூவை 'அதாவது உன்னைப்' பறிக்கவேண்டும், அப்போது சுயரூபத்தை அடைவாய். தவறினால் அவன் இறந்துவிடுவான் என்றார். அதுமுதல் நான்

இப்படியே இருக்கிறேன் என்று சொல்லி முடித்தாள். பிறகு இருவரும் பல விஷயங்களைப் பேசிக்கொண்டே தூங்கிவிட்டார்கள்.

காலையில் ராஜகுமாரன் எழுந்தவுடன் ராஜகுமாரியை காணோம். ராஜகுமாரன் காட்டில் சுற்றி வருகையில் ஒரு செடியில் பல ரோஜாப்பூக்கள் இருந்தன. அதைத்தவிர அக்காட்டில் வேறு பூச்செடியே காணோம். ராஜகுமாரன் அப்படியே ஸ்தம்பித்துவிட்டான். அவனால் எது மாலதி எனக்கான முடியவில்லை. ராஜகுமாரன் இதில் ரோஜாப் பூக்களை சோதித்தான். எல்லாம் ஒரே மாதிரி இருந்தன. ஆனால் ஒரு பூவில் மட்டும் பனி துளியைக்காணோம். உடனே ராஜகுமாரன் அதைப் பறித்தான். ராஜகுமாரியும் எதிரில் தோன்றினாள்'' என்றாள் பாட்டி.

"ஏன்பாட்டி ஒரு ரோஜாப் பூவில் மட்டும் பனி துளி இல்லை'' என்று கேட்டான் ராஜு.

'போடா அசடே, அவள் தான் ராத்திரி முழுதும் சுயரூபத்தை அடைந்துவிடுகிறாளே, எப்படி பனி ஒட்டும் என்றாள் பாட்டி.

ராஜு ஆமாம் பாட்டி. கதை ரொம்ப நன்னா இருக்கே என்று சொல்லி படுக்கப் போனான்.

சகோதரன் ஹரி,
''குலிஸ்தான்''
கார், பம்பாய் 21.

—❀—



அமெரிக்க உபாத்தியாயினிகளை மேரி ராணி வரவேற்கிறார்.



மிட்டாதார் எஸ். வெங்கட சுப்ரமணிய அய்யரின் கனிஷ்ட புத்திரி சௌ. ராஜராஜேஸ்வரிக்கும், ஈரோடு அட்வகேட் இ. எஸ். தண்டபாணி அய்யரின் ஜேஷ்ட புத்திரன் சிர. இ. டி. வி. சுப்ரமணியனுக்கும் (14-7-48)-ல் தூத்துக்குடி சுந்தா விலாஸ் பங்களாவில் திருமணம் சிறப்பாக நடந்தேறியது.

ஜாதகம் ! ஆரூடம் !!

இன்றே எழுதுங்கள். பிறந்த தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.

கட்டண விவரம்:- 1 முதல் 3 உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35.

குறிப்பு:—வெளிநாட்டுக்கு இரட்டிப்புக் கட்டணம்.

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:-தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத்திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

'மானேஜர், வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ,
தெப்பக்குளம் P. O. (தென் இந்தியா)

ஸ்ரீலஸ்ரீயாழ்ப்பாண சுவாமிகளின் மருந்து

நாகபஸ்பம் ஒன்பதுவகை மூல வியாதிகளையும் குணப்படுத்தி மூலாதாரத்தை குளிர்ச்சிபண்ணும்–ஆப்ரேஷன் தேவையில்லை—மூல முளையைக் கரைத்துவிடும்.

Nc. 1 நாகபஸ்பம் & காட்டுகருணைலேகியம் 12-நாள் செட் ரூ. 5/-

தங்கபஸ்பம் நாடி, நரம்புகளை வலுப்படுத்தி இரத்தப் பெருக்கை உண்டுபண்ணும். வயோதிகரும் வாலிபம் பெறலாம். அழகு தரும். பலவித வைடமின் டானிக்குகள் உபயோகித்து ஏமாற்றமடைந்தவர்கள் இதனால் சரீர புஷ்டியடைந்திருக்கிறார்கள்.

தங்கபஸ்பம் & ஸ்ரீ மகா போகர் லேகியம் 21 வேளைக்கு ரூ. 10.

யாழ்பாண வைத்யசாலை — பழநி.

குஷ்டத்திற்கு மருந்து இல்லையா?
இதோ லக்ஷ்மி பிரசாதம்

(லெப்பர் கியூர்)

18 குஷ்டங்களையும் வெண் குஷ்டம், செவ்வாய் மேகம், வெள்ளை, வெட்டை நிவாரணத்திற்கு எல்லாம் சாப்பிடக்கூடிய அமுர்தம்

40 நாட்களில் குணம்

தலைமை ஆபீஸ் :	லக்ஷிமி & கோ.,
வால்டேர், ஆர். எஸ்.	2/135, பிராட்வே, மதராஸ்.

ஸாயி கவசம்

(உத்தரவாதம் பெற்றது)

பரீக்ஷை, தொழில், வழக்கு, வியாபாரம், காதல் இவை வெற்றிக்கும், புத்திரன், தனம், அதிகாரம், ஞானம் இவை விருத்திக்கும், ஆரோக்யம், சுகம், சம்பத்து கைகூடுவதற்கும் இன்றியமையாதது. பூஜை செய்தனுப்புவதால் ஜன்ம நக்ஷத்திரம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை. பலனில்லையேல் பணம் வாபீசு. விலை ரூ. 3–8.

ஸ்பெஷல் ரூ. 10. தபால் செலவு உள்பட. வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

ஸாயி ஜோதிடர் ஸாயி ஆஸ்டிரல் ஸ்டூடியோஸ், உறையூர் - திருச்சி.

ஸ்ரீமத்பகவத்கீதை

★

சென்னை ஸம்ஸ்கிருத காலேஜ் உபாத்தியாயராய் இருந்த கீர்த்தனசார்ய

ஸி. ஆர்.
ஸ்ரீநிவாஸய்யங்கார் பி. ஏ.
எழுதியது.

மூலத்துடனும், அத்வைத வசிஷ்டாத்வைத பாஷ்யச் சுருக்கத்துடனும், இதுவரையில் வெளியிடாத பல ரகஸ்யங்கள் அடங்கிய முன்னுரையுடனும், கண்ணனுடைய கருத்திற்கிணங்க எழுதப் பட்டது.

★

முழுகாலிகோ பயிண்டு செய்தது.

விலை ரூ. 3-8-0

(தபால் செலவு 0-8-0)

இன்னும் இதர புத்தகங்களும் கிடைக்கும்.

★

எமது எல்லா புத்தக சாலைகளிலும் கிடைக்கும். நேரில் விஜயஞ் செய்து தேவைக்கு ஆர்டர் செய்யவும். எல்லா 'மித்திரன்' ஏஜண்டுகள் மூலமும் பெற்றுக்கொள்ளலாம்.

புத்தக ஜாபிதாவுக்கு எழுதவும்.
மானேஜர்,
சுதேசமித்திரன் ஆபீஸ்
மவுண்ட்ரோடு, மதராஸ்.

ஸ்ரீ சாயிநாதய நம:

அனுபவத்துடனும், ஆராய்ச்சியுடனும் பலன்கள் சொல்லப்படும்.

ஒரு வருஷ பலன்	ரூ. 5.
விவரமான ஒரு கேள்விக்கு பலன் எழுத	,, 1.
விவாக பொருத்தம்பார்க்க	,, 3.
ஆயுள் பலன் எழுத	ரூ. 100.

THE SOUTH INDIAN ASTROLOGICAL BUREAU,
229, Walltax Road, Madras 3.

முக்கிய அறிவிப்பு

மந்தார விடு இலை, தையல் இலை

சகாயமான விலைக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் எங்களிடம் கிடைக்கும்.

S.மாணிக்கம்செட்டி கோ.,
6—7, ஆதியப்ப நாயக்கன் தெரு மதராஸ் 1.

ஏஜண்டு இல்லாத இடங்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

கூடிய சீக்கிரம் எதிர்பாருங்கள்

மாணிக்கபஸ்பம் சிவபுரிபுகையிலை
மீனம்பாளையம் ரோஸ் புகையிலை
வாசனை பட்டை புகையிலை

வெளிவந்து விட்டது!

வாசனை பாக்குத்தூள் காலணுவுக்கு இரண்டு.

சென்னைக்கு சில்லரை விற்பனையாளர் தேவை.
வெளியூர்களுக்கு ஏஜண்டு தேவை.

தயாரிப்பவர்:

மாணிக்க விலாஸ்
11 பீட், மதராஸ் 1.

ஸங்கீத ரஸிகர்களுக்கு ஓர் நல் விருந்து !

கிருஷ்ண பக்தியில் தலைசிறந்த ஸாஹித்யம்
ஸ்ரீ ஜயதேவ ஸ்வாமிகள் அருளிய

அஷ்டபதி

(கீத கோவிந்த மஹா காவ்யம்.)

கீர்த்தனாசார்ய ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீனிவாஸ அய்யங்காரால் பதிப்பிக்கப்பட்டது.

(இரண்டாம் பதிப்பு)

ஸம்பிரதாயத்தை அனுசரித்து ஸ்வரப்படுத்தி அரிய அனுபந்தங்களுடன் கூடியது.

ஸங்கீத ஸாஹித்யங்களில் முந்திய நூல். பாரத நாட்டில் பல பாகங்களிலும் முக்கியமாக தமிழ் நாட்டிலும் பாகவத ஸம்பிரதாயஸ்தர்களும், ஸங்கீத வித்வான்களும் போற்றிப் பாடும் உத்தம நூல். கீர்த்தனாசார்யர் பல மகான்களையும் ஸங்கீத மேதாவிகளையும் கலந்து பேசி அபூர்வமான ஆராய்ச்சியுடன் வெளியிட்ட ஒப்புயர்வற்ற நூல்.

அஷ்டபதி மூலமும், வர்ணமெட்டும், ஸங்கீதத்தையும் கதையையும்பற்றின குறிப்புகளும் அடங்கியிருக்கின்றன. அத்துடன் ஜயதேவ ஸ்வாமிகள் சரித்திரம், அந்தந்தக் காலத்தில் உபயோகிக்கப்பட்ட ராக தாளங்கள், நாயக நாயகி விவரங்கள், தமிழ், தெலுங்கு, கன்னட கேரள நாடுகளில் அஷ்டபதிகளைப் பாடும் விதங்கள், கீதகோவிந்த உள்ளுரைப் பொருள்கள், ப்ரம்ம வித்யா உபதேசம் முதலிய அரும்பெரும் விஷயங்கள் அடங்கியுள்ளன.

வெகு காலமாக ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட நூல் வெளிவந்துள்ளது.

எல்லா சுதேசமித்திரன் ரயில்வே புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

விலை ரூ. 2. தபால் செலவு அணா 8.

சுதேசமித்திரன் புத்தகசாலை,
விக்டரி ஹவுஸ், மவுண்ட்ரோட், சென்னை.

வைத்தியரத்ன யு.ராமநாத சாஸ்திரிகளின்

ஸித்தமகரத்வஜம்
(தங்கம் சேர்ந்தது.)

அங்கங்களையும் நரம்புகளையும் பலப்படுத்தும். திடசாலியாயும் யௌவனமாயும் இருக்கலாம். 30 மாத்திரை சீசா 1-க்குரூ.7.

மஹாபில்வாதி லேகியம்

பித்தம் அஜீரணம், மலபந்தம் முதலிய வயிற்று கோளாறுகளை உடனே கண்டித்துவிடும். ஒரு சேர் டப்பி 1-க்கு ரூ. 4.

ஸ்ரீ தன்வந்திரீ கவசம்

வியாதி, மனோவிசாரம், தரித்திரம இவைகளை விலக்கி உத்தியோக வியாபார லாபங்கள், காரிய ஸித்தி, ஜனவசியம் இவைகளை அளிப்பதில் அபாரமான சக்தி உள்ளது. இதில் வசீகரண மூலிகை. பிரதி ஸரஸ்வதி ரம் ஸ்ரீதன்வந்தரீ யந்திரம், இவைகளை மந்திர பூர்வமாய் ஸதாபிக்கப்பட்டு இருக்கிறது. கவசம் 1-க்கு ரூ. 3.

ஆனந்த படை நிவாரணி

எல்லாவிதமான படைகளையும் திரும்பி வராமல் இருக்கும்படி ஒரே வேளையில் போக்கிவிடும். டப்பி 1-க்கு ரூ. 1.

ஆனந்த பற்பொடி

(40 வருஷங்களாக புகழ்பெற்றது.)

சென்னை ஹைக்கோர்ட்டில் உரிமை பெற்றது. இந்தியாவில் இது ஒன்றுதான் சிறந்தது. எங்கும் கிடைக்கும். கேட்லாக் இனாம்.

ஸகலத்துக்கும் வி. பி. பிரத்யேகம்.

வைத்திய ஸித்தாச்ரமம்
பஜார் ரோட், மைலாப்பூர், மதராஸ்

சகல விதமான பட்டு&நூல் ஜவுளிகளுக்கு
கைராசியும் நம்பிக்கையுமுள்ள
புதிய ஜவுளிக்கடை
ராமராஜ்யா ஹால்
N.R.ராமசந்திர செட்டி & கோ. கடைவீதி...சேலம்

சக்தி ஆருடம்!

ரேடியோ புகழ் ஸ்ரீமதி திருக்கோவிலூர் S. அலமேலு எழுதுகிறார்:—

"தாங்கள் எனக்கு மே மீ 27–ந் தேதியிலிருந்து ஜுன் மீ 3–ந் தேதிக்குள் ரூ. 1000 கிடைக்குமென்று கூறியபடியே ரூ. 1000 கிடைத்தது."

1 முதல் 3 கேள்விகள் ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. 1 வருட பலன் ரூ. 5. ஜாதகம் கணிக்க ரூ. 2. சக்தி கவசம் ரூ. 7-8-0. வி.பி.பி. தனி. ஜாதகம் ஒ கடிதம் எழுதும் நேரம் தேவை. N. B. வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம், P. O. (S. I)

டெலிபோன்: 2246. தந்தி: கிளாவர் பீடி



லேட் கான்சாகிப் எம். முஹமது உமர்சாகிபுவின்குமாரரான முஹமத் நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும், உயர்தர மான சரக்குகளையும் உபயோகித்தே

ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடி களின் ரகமும், மணமும் குணமும் என் தகப்பனுர்காலத்திலிருந்ததைப் போன்றேசிறப்பாகவிளங்குகின்றது.

முகம்மது நூருல்லா
ஸோல் புரொப்ரைட்டர்,
ஸ்பேட் கிளாவர் & ஆர்டின் பீடிகள்
37, மண்ணடி, மதராஸ்.

குகன் சோப்புகள்

சுதேசி தயாரிப்பு சலவைக்கு மிகவும் சிறந்தது.



குகன் இண்டஸ்ட்ரீஸ்... திருப்பூர். S. I.

பீம-வீர்

"Bheema-Veer" (Regd)



JAMADHAGNI OUSHADALAYA — MYLAPORE

"பீம-வீர்" பூர்வகால ஆயுர்வேத முறைப்படி மூலிகை சத்துக்களா லும், பஸ்பங்களாலும் தயாரிக்கப் பட்டது. ரத்தத்தை சுத்திசெய்து, சாஸ்வதமான யௌவனத்தையும், ஞாபக சக்தியையும் உண்டாக்கி, தேக புஷ்டியையும், வலுவையுங் கொடுப்பதில் நிகரற்ற அவுஷதம். 40–நாள் மருந்து ரூ. 3-12-0. பாக்கிங்கு, தபால்சார்ஜ் கிடையாது

ஜமதக்னி ஔஷதாலயா,
26, வடக்குமாடவீதி, மயிலாப்பூர், சென்னை

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"

(Regd)

குழந்தைகளின் ஈரல், குலை, ஜுரக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாறுதீர்கள்.

Dr. பிள்ளா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்,
11, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:— 7, சாரங்கபாணி கோவில் கீழவீதி	திருச்சி கிளை:— 15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

விடாத இருமல், ஜலதோஷம். இன்புளுயன்ஸாவுக்கு பெப்ஸ் தேவையாகவிருக்கும்

நல்ல ருசியுள்ள பெப்ஸ் வில்லைகள் சீக்கிரமாகப் பலனளிக்கும் விதத்தில் வேலை செய்கின்றன. சுவாசத்துடன் மருந்து சத்துக்கள் உட்சென்று தகராறுக்கு காரணமானதை ஒழிக்கும் பெப்ஸை மென்றவுடன் அதன் கிருமிநாச குணமளிக்கும் ஆவிகள் இருமலை நிறுத்தி புண்ணாகிய உறுப்புகளைச் சமனமூட்டி, கிருமிகளை நாசம் செய்து அடைப்பை நீக்கி உமது மார்புக்கும் தொண்டைக்கும் சுகமுண்டாக்கும்.



பெப்ஸ் மருந்து சத்துக்கள் ஒவ்வொரு சுவாச உறுப்புக்கும் போவதை குறிக்கும் படம்.

ஏஜண்டுகள்:— மெஸர்ஸ். தாநா & கம்பெனி, பி. டி. மதராஸ்.

PEPS

கிருமி நாச

தொண்டை & மார்பு வில்லைகள்

தொண்டை, மார்பு, சுவாசப்பை தகராறுகளுக்கு சிறந்த பயனளிக்கவல்ல நிவாரணி.

S.A.H.

TRADE MARK

Rgd. No. 2221.

28 வருஷமாய் தென்னாடு முழுவதும் பிரசித்தி பெற்று வரும்

சேலம் மூன்று தாமரை பீடிகளை

உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.

Prop: S. அஹமத் உசேன், கோட்டை, சேலம் - *S.I.R.*

THE TRUTH IN YOUR HOROSCOPE

YOUR REAL LIFE TOLD FREE

Would you like to know what the Stars indicate for you, some of your past experiences, your strong and weak points. etc? Here is your chance to test FREE the skill of Pundit Tabore India's most famous Astrologer, who by applying the ancient science to useful purposes has built up an enviable reputation? The accuracy of his predictions and the sound practical advise contained in his Horoscopes on business, speculations, Finance, Love affairs, Friends Enemies, Lotteries, Travels. Changes Litigation Lucky Times, Sickness etc., have astounded educated people the world over. GEORGE MACKEY of New York believes that Tabore must possess some sort of second sight.



To popularise his system Tabore will send you Free your Astral-Interpretation if you forward him your full name (Mr. Mrs. or Miss). address and date of birth (English Calendar) all clearly written by yourself. No money wanted for Astrological Work, Postage etc., but send about 6 Annas (Stamps) for stationery, testimonials and other interesting literature. Tabore believes in fair dealings and all work for which he receives any payment is on the basis of satisfaction guaranteed or full money refunded. You will be amazed at the remarkable accuracy of his statement about you and your affairs. Please write and correspond in ENGLISH only. Write now as this offer may not be made again. No personal interviews, all consulations by mail only. Address: **PUNDIT TABORE (Dept. 337), Upper Forjett Street: Bombay 26.**

A. B. C. Talks	1	4	0
ராமானுஜதர்சனம்	1	0	0
தினதயாளு	0	12	0
பாலகங்காதர திலக்	0	8	0
ஸ்வராஜ்யம்	0	8	0
சங்கராச்சாரியார்	0	5	0
ஸ்ரீராம ஜனனம்	0	4	0

தபால் செலவு பிரத்தியேகம்.

" சுதேசமித்திரன் " புத்தகசாலை மவுண்ட்ரோட், மதராஸ்.

Printed and Published by S. Chakrapani Iyengar at the "Swadesamitran" Press, Victory House. Mount Road, Madras. Editor: C. R. Srinivasan, B. A.

Regd. No. 2514

சோதனை

N. S. ஐயர்,
மிராசுதார் & பாங்கர்.

சிருகளத்தூர்,
24-9-47.

ஐயா,

சென்ற இருபது வருஷ காலத்திற்கு மேலாகவே நான் தங்களிடம் வைரம் வாங்கிக்கொண்டு வருகிறேன். அவைகளை என் உறவினர்கள் எல்லோரும் மெச்சினார்கள். இப்படி இருக்கையில் சென்ற நாலைந்து வருஷங்களாக உங்கள் கம்பெனியில் கிடைக்கும் அதே மாதிரியான வைரங்கள் குறைவான விலைக்கு வாங்கித் தருவதாகச் சிலர் என்னிடம் சொல்லி அவ்வார்த்தைகளை நம்பி நான் அவ்வலையில் சிக்கினேன். ஆனால் அவைகளெல்லாம் தங்களுடைய வைரங்களுக்கு நிகரில்லை என்பதை பிறகு அறிந்துகொண்டேன்.

மறுபடியும் சென்ற மாதத்தில் தங்களிடம் வாங்கிய தோடு எல்லோருக்கும் திருப்தியை அளித்திருக்கிறது. நான் வெளியிடங்களில் வாங்கிய வைரங்களை மாற்றி தங்கள் கம்பெனி வைரங்களை வாங்கிக்கொடுக்கும்படி வீட்டிலுள்ளவர்கள் இப்பொழுது தொந்திரவு செய்கிறார்கள்.

தங்கள் அன்புள்ள,
(கையொப்பம்) **N. S. ஐயர்.**

ஸூரஜ்மல்ஸ்

ஸ்தாபிதம்: 1895
நம்பிக்கையான வைர வியாபாரிகள்

313, நேதாஜி ரோட்,
மதராஸ்.